
www.padippakam.com

# புதுமாத்தளன் சோகங்களுக்கு புது மருந்து....



கி. செ. துரை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

புதுமாத்தளன் சோகங்களுக்கு புது மருந்து

ALAIKAL MOVIES
NY MØLLEVEJ 30
7400 HERNING
DENMARK
+45 97 215425

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# புதுமாத்தளன் சோகங்களுக்கு புது மருந்து

கி.செ. துரை

படிப்பகம்

www.padippakam.com

# Pudhu Maaththalan Soghankalukku
# Pudhu Marundhu ©

First Edition
June 2010

Author
**K.S. Thurai**

Published by

Alaikal Movies International (AMI)

Pages : 104
Price :

படிப்பகம்

# முகவுரை

கடந்த 5000 வருடங்களாக இயற்கையே வடிவான பேரருள் ஈழத் தமிழருக்கு தன் இதயத்தால் ஏதோ ஒரு செய்தியைச் சொல்லத் துடித்துக் கொண்டிருக்கிறது. அந்த இடத்தை நோக்கிய பயணத்திற்கான பாதை போடுவதே இந்தப் புது மாத்தளன் சோகங்களுக்கு புது மருந்து..

ஈழத் தமிழரின் விடிவிற்காக இதுவரை தீட்டப்பட்ட அத்தனை தீர்வுத் திட்டங்களும் புதுமாத்தளன் போருடன் புதைகுழிக்குள் போய்விட்டன. ஆனால் யாராலும் புதைக்க முடியாத புதுமைத் தீர்வை எமக்காக எழுதிவிட்டு, என்று படிக்கப் போகிறீர்கள் என்று ஏங்கிக் கிடக்கிறது இயற்கை.

புது மாத்தளன் போர் புதைகுழிகளில் கிடந்த ஈழத் தமிழனுக்கு இயற்கை தந்துள்ள ஞானவிளக்கு, இந்த விளக்கைக் கையில் ஏந்தி, இதுவரை யாரும் தேடாத புதிய இடத்தில், புதிய தளத்தில் தேடுங்கள் என்று காலம் சொல்லியிருக்கும் புத்தம் புது நம்பிக்கை.

விழிகளில் வழியும் நீரைத் துடையுங்கள். கைகளில் மின்னும் விளக்கை உங்கள் கண்ணீர்த்துளிகளே அணைக்க முன் விழித்தெழுங் கள் என்று புது நம்பிக்கை தர எழுதப்பட்டுள்ளது இந்த நூல்.

உலகத்தில் உள்ள உயிரினங்களில் சுதந்திரம் என்ற பெயரைத் தம்மோடு இணைத்துக் கொண்டவை பறவைகள் மட்டும்தான். நாடுள்ள மனிதர்களும் காடுள்ள மிருகங்களும் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை. ஆனால் நாடும், காடும் இல்லா பறவைகள்தான் சுதந்திரத்தின் வடிவமாக இருக்கின்றன. இப்படி ஒன்றினுள் மற்றது மாறுபட்டு நிற்கும் புதுமையைக் கண்டுபிடிக்க காலம் தந்துள்ள ஞானவிளக்குதான் புதுமாத்தளன்.

கூட்டமாக எழும்பும் பறவைகள் பழமுள்ள மரங்களில் எல்லாம் இருப்பது போல, கூட்டமாகப் பறந்த ஈழத்தமிழனும் இன்று பழுத்துக் கிடக்கும் உலக மரங்களில் எல்லாம் உட்கார்ந்துவிட்டான்.

பிரிந்து பறந்த பறவைக் கூட்டம் மறுபடி ஒன்று கூடும்போது தான் கண்ட பழமரங்கள் பற்றிய செய்திகளை பாடல்களாய்ப் பாடி பரிமாறிக் கொள்ளும். அவை வெறும் பாடல்களல்ல, நாளை வரும் இன்னொரு பறப்பிற்கான நம்பிக்கை மொழிகளாகும்.

பாவம் இந்த உண்மை தெரியாது, பறவைகளைத் துரத்திவிட்டேன் என்ற மமதையுடன் பட்ட மரத்தின் உச்சியில் எலி பிடிக்கக் காத் திருக்கும் பகல் குருடான ஆந்தை.

நாம் சுதந்திரப் பறவைகளா அல்லது பட்ட மரத்து பகல் குருடான ஆந்தைகளா? ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளுங்கள்.

நாம் ஒன்றும் அலறப்பிறந்த ஆந்தைகளல்ல; அவைகள் இருக்கும் விறகுத் தடிகள் விருட்சங்களும் அல்ல. இந்த அதிசயத்தை அறிய ஆதாரமாகவும், இது தெரியாது அழுவோர் தம் அழுகையை மாற்ற ஆதரவாகவும் அமைகிறது இந்த நூல்..

மனிதர்களுக்கு அப்பால் இயற்கை என்னும் பேரருள் எழுதியுள்ள நவீன தீர்வுத்திட்டமே எமக்கான தீர்வு. அதை அறிய பறவைகள் தமக்குள் பாடுவதைப் போன்ற தகவல் பரிமாற்றமே இந்த நூல்.

புது மாத்தளன் சோகமே இங்கு ஒரு நூலாகப் பரிணமித்துள்ளது. இதுபோல ஒவ்வொரு ஈழத்தமிழனும் அந்தச் சோகத்தை வெற்றிகர மாக்கி, ஓர் உன்னதத்தைப் படைக்க வேண்டும்; உலகத்தை வியப்பில் ஆழ்த்த வேண்டும்.

அலைகள் இணையப்பத்திரிகையில் பதினெட்டு நாட்கள் இதை தொடர்ச்சியாக எழுதியபோது என் உள்ளத்தில் ஓடிய உணர்வலைகள் ஒரு சோகத்தை வெற்றியாக்கும் சூத்திரத்தைக் கற்றுத்தந்தன. இந்த நூலுக்கு முகவுரை எழுதியிருக்கும் அண்ணன் திரு. வேலுப்பிள்ளை மனோகரன், அண்ணன் திரு. பாவல், படித்து கருத்துரைத்த

www.padippakam.com



அன்பு உள்ளங்கள். அச்சுவாகனம் ஏற்றிய மித்ர பதிப்பகம் உட்பட அனைவருக்கும் நன்றி.

போகுமிடமெல்லாம் புதிய தம்பிகளை இணைத்து புதுப்பலம் பெற்றான் இராமன் என்பார்கள். அதுபோல டென்மார்க்கில் ஒரு ரவிசங்கர்போல தமிழகத்தில் எனது நூல்களை அச்சிடுவதில் இன்னொரு ரவி என்று எனது தம்பிகள் பெருகிச் செல்வதை உணர்ந்து மகிழ்கிறேன். இதுபோல கனடா முதல் நியூசிலாந்து வரை எனது பணிகளுக்கு ஆதரவு தரும் அத்தனை தம்பிகளுக்கும் நலமும், பலமும், வளமும் தரவேண்டுமென வல்லை முத்துமாரி அம்மனை வணங்குகிறேன்.

கி.செ.துரை

டென்மார்க் 05.06.2010

Ny Mollevej 30,
7400 Herning
Denmark
0045 97215425
e.mail. thurai@tamilnet.dk
www.Alaikal.com

படிப்பகம்

# புது நம்பிக்கை பெறுக!
## வேலுப்பிள்ளை மனோகரன்

உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் காலத்தை வென்று வாழும் படைப்புக்கள் உண்டு. அந்தப் படைப்புக்களைத் தொகுத்துப் பார்த்தால் அவைகளே அந்த இனத்தின் தலைவிதி போல இயங்கியிருப்பதையும் அவதானிக்க முடியும்.

அன்று தமிழர்களின் வீரத்தை புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைத்தன. இன்றுவரை அந்தப் பாடல்களே தமிழனின் போர்க்களத் தலைவிதியாக நிற்கின்றன. புலிகள் நடாத்திய போர்களின் ஜீவனாக நின்றதும் புறநானூறுதான். போருக்கு மட்டுமல்ல எழுத்துக்குள்ள வலிமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள் புறநானூற்றுப் புலவர்கள். இதனால் தான் எழுத்தாளனை சமுதாயச் சிற்பி என்கிறார்கள்.

ஆனால் ஒன்று...

எப்படி ஆயுதம் தூக்கிய அனைவருமே போராளிகள் ஆகிவிட முடியாதோ, அப்படியே பேனா எடுத்த அனைவருமே சமுதாயச் சிற்பிகளாகிவிட முடியாது. இருவரிலும் தியாகமும், சமுதாய அக்கறையும் மிளிரும்போதுதான் அவர்கள் உண்மையான போராளிகளாகவும், உண்மையான எழுத்தாளராகவும் சமுதாயத்தினால் அடையாளம் காணப்படுகிறார்கள்.

இப்படியோர் எண்ணத்தை மனதில் பதித்துக் கொண்டு, புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து என்ற இந்த நூலைப் படிக்க ஆரம்பித்தேன். இந்த நூல் சமூகத்தின் மீதுள்ள அக்கறையால் எழுதப்பட்டுள்ளது என்பதை உடனடியாகவே புரிந்து கொண்டேன். புதுமாத்தளன் சோகத்தை தமிழினம் சந்தித்த ஓராண்டு நினைவு நெருங்கும்போது இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பதினெட்டு தினங்கள் நடைபெற்ற பாரதப்போர்போல மே முதலாம் திகதி முதல் பதினெட்டாம் திகதிவரை எழுதப்பட்ட தன்னம்பிக்கையூட்டும் சித்திரங்களாகவும் இவை அலைகள் இணையப் பத்திரிகையில் வெளிவந்தன.

பழம்பெரும் கதைகளில் இருந்து புதுமைகளைக் கண்டறிவது எல்லோருக்கும் கைவராத திறமை. அதேவேளை அந்த மகத்துவங்களை மற்றவர்கள் பார்க்காத கோணத்தில் பார்த்து, அவற்றை நிகழ்காலத்துடன் பொருத்தினால் அது புதுமை. இந்த நூலில் உள்ள பதினெட்டு கட்டுரைகளின் உயிர்நாடியே இந்தப் புதுமைக்குள்தான் இருக்கிறது.

உலகில் நடைபெற்ற ஒவ்வொரு பேரவலத்திற்குள்ளும் சோகம் மட்டுமல்ல, ஒரு புதுமையும் மறைந்து கிடந்ததை நூலில் பல இடங்கள் சுட்டிக்காட்டு கின்றன. அந்த உதாரணங்களைப் பற்றிக் கொண்டால் புதுமாத்தளனிலும் நமது வெற்றிக்கான புதுமையைக் கண்டறிந்து கொள்ளலாம்.

வீசிய புயலை வித்தியாசமாகப் பார்த்ததால் முல்லைக்கொடிக்கு தேரைக் கொடுத்து, அழியாப்புகழ் பெற்றான் பாரி. தடைக்கயிற்றை அறுத்து விட்டு துணிந்து புறப்பட்டதால் உலகைச் சுற்றிவந்தான் மகலன் என்று எண்ணற்ற உதாரணங்கள் தரப்படுகின்றன. பாடசாலை மாணவருக்குப் புரிய வைப்பதைப்போல உதாரணங்களாலும், உபகதைகளாலும் உள்ளத்திற்கு உறுதியூட்டுகிறார் ஆசிரியர். அங்கே எல்லோருக்கும் விளங்க வேண்டு மென்ற அவருடைய நோக்கத்தையும் உணர முடிகிறது.

1994-ம் ஆண்டு தமிழகத்தில் உள்ள சோதிடர் ஒருவர் பிரபாகரனின் பிற்கால வாழ்வு இன்றுள்ளது போலவே அமையப் போகிறது என்று சொன்னார். அன்று அவர் சொன்னதை நான் நம்பவில்லை, ஆனால் இன்றோ அதை எப்படி மறுப்பதென்று தெரியவில்லை.

அதேவேளை பிரபாகரன் படித்த நேதாஜியின் வாழ்க்கை வரலாறே இன்று அவரின் வாழ்க்கை விதியாகவும் மாறியிருப்பதை எண்ணிப் பார்க்கிறேன். அதனால்தான் எழுத்துக்கள் சமுதாயத்தின் தலைவிதியாக மாறும் என்று முதலிலேயே குறிப்பிட்டேன். ஆனால் நேதாஜிக்கும் பிரபாகரனுக்கும் ஒரு வித்தியாசம் காட்டுகிறது இந்த நூல். நேதாஜி மறு படியும் வரவில்லை, ஆனால் மீண்டும் வந்த நேதாஜியாக பிரபாகரன் வருவார் என்று நம்பிக்கை கூறி நிறைவடைகிறது. மேலும் அவரை இறவாப்புகழ் இளவரசன் என்று முத்தாய்ப்பு வைத்தும் போற்றுகிறது. அந்த நம்பிக்கையே இந்த நூலின் வெற்றியாகும். பிரபாகரனின் மறு வரவால் நேதாஜியின் வரலாறும் புத்தொளி பெறுமானால் அதைவிட வேறென்ன சிறப்பு இருக்கப்போகிறது.

இந்த நூலை எழுதிய கி.செ.துரை என் தம்பி பிரபாகரனின் பாடசாலைத் தோழர். இவர் உள்ளத்தில் இருந்து வெளிவந்திருக்கும் இப்படைப்பு வலிமை மிக்க படைப்பாகும். இதன் வலிமையை நான் உங்களை வழி மறித்துச் சொல்வதைவிட, நீங்களே சுயமாகப் படித்து உணர்ந்து, மற்ற வருக்கு உரைப்பதே இதன் வலிமைக்கு அழகாகும்.

*வேலுப்பிள்ளை மனோகரன்*

டென்மார்க் 14.06.2010

# உலகப் பேரழிவைத் தடுக்க தமிழ் நெறி காப்போம்

உலகை மாற்றிய புத்தகங்கள் என சில புத்தகங்களைச் சொல்வார்கள்.

காலத்தின் நிர்ப்பந்தத்தால்தான் அந்தப் புத்தகங்கள் வெளிவந்தன.

பின் அந்தப் புத்தகங்கள், தாம், உருவாகக் காரணமாய் இருந்த காலத்தைத் திருப்பி புரட்டிப் போட்டன.

அப்புத்தகங்களை எழுதியவர்கள் இப்பொழுதுள்ள நவீன யுகத்தின் தூண்களாகக் கருதப்பட்டனர்.

அப்படித் தூண்களாய் காத்து நிற்பவர்கள் ஏதோ வானத்தில் இருந்து திடீரென தோன்றியவர்கள் அல்ல.

அவர்கள் கருத்துக்களும் ஒரே இரவில் உதித்ததல்ல.

ஒவ்வொரு எழுத்துக்கும் முன்னோடிகள் இருந்தனர்.

ஐன்ஸ்டினுக்கு நியூட்டன் பாதை போட்டிருக்கிறார்.

நியூட்டனுக்கு கோபர்நிகஸ் வழிகாட்டியிருக்கிறார்.

அதேபோல் மார்க்ஸின் இயக்கவியலுக்கு ஹெகலும், பொருள் முதல் வாதத்திற்கு பியூர்பார்க்கும் முன்னோடிகளாக நிற்கின்றனர். நவீன பொருளாதாரத்திற்கு ஆடம்ஸ்மித்தும் ரெக்கார்டோவும் காரணமாகின்றனர்.

www.padippakam.com



மானிட சமூகம் சில உள்ளார்ந்த விதிகளுடன் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்ற மார்க்சின் கருத்துக்களுக்கு டார்வினின் பரிணாமக் கொள்கை உரம் சேர்க்கிறது. இப்படி முன்னோர்களின் தோள்கள் மீதேறி நிற்காதவர்கள் எவருமில்லை.

இனி, கணியனை உள்வாங்கிய கி.செ. துரையின் 'புது மாத்தளன் சோகங்களுக்கு புது மருந்து' என்ற புத்தகத்தைப் பார்ப்போம்.

முள்ளி வாய்க்கால்களையும் முள்வேலிகளையும் கடந்து கொண்டிருக்கும் வேளையில் இப்புத்தகம் வந்திருக்கிறது.

முப்பதாயிரம் பேரை ஒருசேரப் பறிகொடுத்த சோகம் இன்னும் தீரவில்லை.

இழப்பின் சோகம் ஒருபுறம், தோல்வியின் துயரம் மறுபுறம்.

தமிழ்ச் சமூகம் விளிம்பிற்கு வந்துவிட்ட பயம்.

ஆறுதல் சொல்ல வேறினம் முன் வராத நிலை.

நமக்கு நாமே தேற்றிக் கொள்ள வேண்டிய கையறு நிலையில் கி.செ. துரையின் எழுத்துக்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஆறுதல்களும் தேறுதல்களும் நிறைந்திருக்கும் என்று நினைத்தேன். இல்லை. அப்படி எதுவும் இல்லை.

புயலின் நடுவே புகழ் தேடிய பாரியின் கதையைச் சொல்கிறார்.

வீழ்ச்சியை எழுச்சியாக்கும் வித்தையைக் கற்றுத்தருகிறார்.

ஒலிம்பிக்கில் தோற்றவன் ஒலிம்பிக்கைப் புறக்கணிப்பதில்லை என்று நமக்குத் தெரிந்ததையே புதுவிதமாகக் காண்பிக்கிறார்.

இரண்டாம் உலகப் போரில் தோற்ற ஜெர்மனும் ஜப்பானும் பிரமாண்டமாக எழுந்து நிற்பதைப் பார்க்கச் சொல்கிறார்.

அதற்காக, நடந்த கொடுமைகளை மறக்கச் சொல்லவில்லை.

பதினெட்டு நாட்களின் நிகழ்ச்சிகளை பதினெட்டு நாள் மகாபாரதப் போருடன் ஒப்பிட்டு விவரிக்கிறார்.

www.padippakam.com



பதின்மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக அபிமன்யுவின் மரணத்தை விவரிக்கும்பொழுது, மாபெரும் வீரர்களான துரோணர், கர்ணன், இன்னும் நூறு கௌரவர்களையும் எதிர்த்து வீரமரணம் அடைந்ததை, உலக நாடுகள் பலவற்றின் ராணுவத்தை எதிர்த்து புலிகள் போரிட்ட துடன் ஒப்பிடுகிறார்.

புலிகளின் வீரத்தை சங்கத்தமிழர் வீரத்துடன் இணைக்கிறார்.

பிரபாகரன் என்ற சங்கத்தமிழ் வீரனை, யுத்த நெறிபிறழா சுத்த வீரனை இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்லி நெஞ்சு நிமிர வைக்கிறார்.

பிரபாகரனின் (தலை) மறைவு குறித்தும் எழுதியிருக்கிறார்.

அப்பொழுது நமக்கு நேதாஜி நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

சரி; கி.செ. துரை என்பவர் யார்?

ஈழத்தமிழர் எல்லோருக்கும் இவரைத் தெரியும்.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் பள்ளித்தோழன்.

வல்வெட்டித்துறையில் பிறந்தவர்.

ஈழப்போரில் ரத்த உறவுகளை இழந்தவர்.

புலம் பெயர்ந்து டென்மார்க்கில் வாழ்பவர்.

இவரை இந்தியத் தமிழர்களும் தெரிந்துகொள்ளவேண்டும்.

தமிழகத்தை உளப்பூர்வமாக நேசிக்கும் ஈழத்தமிழர்களில் இவரும் ஒருவர்.

நேர்மையாளர்.

நேர்மையை பிறரிடமும் எதிர்பார்ப்பவர்.

தமிழ் நெறி பயின்றவர்

அந்நெறிப்படி ஒரு பெரிய இளைஞர் கூட்டத்தை வழிகாட்டி வளர்த்துவருபவர்.

www.padippakam.com



அந்த விதத்தில் தம்பி பிரபாகரனுக்கு இவர் சளைத்தவர் அல்ல என்று கூடச் சொல்லுவேன்.

கி.செ. துரையைப்பற்றி இத்துணை அறிமுகம் எதற்கு எனக் கேட்கலாம்.

காரணம் இருக்கிறது.

இப்புத்தகத்தில், உலகெலாம் சிதறிக் கிடக்கின்ற தமிழர்களுக்குள்ள கடமைகள் சிலவற்றை நினைவு படுத்துகிறார்.

வழிகாட்டும் ஒருவருக்கு அதற்கான தகுதி இருக்கிறதாவென கேள்வி எழும்.

அதற்காகத்தான் அவர்பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது.

இனி இந்த உரையின் தலைப்பிற்கு வருவோம்.

உலகப் பேரழிவைத் தடுக்க தமிழ்நெறி காப்போம்.

என்ன பேரழிவு?

என்ன தமிழ்நெறி?

தொழிற்புரட்சியிலிருந்து இன்றைய நாள் வரை, வளர்ச்சி என்ற பெயரில் காடுகள் அழிக்கப்பட்டு, நாளைய தலைமுறைக்கென்று எதையும் விட்டு வைக்காமல் கனிவளங்கள் வேட்டையாடப்படுகின்றன.

மேலும், பூமியில் புதைந்து கிடந்த நிலக்கரி, பெட்ரோல், டீசல், எரிவாயு போன்ற புதைவடிவ எரிபொருட்களை அசுரத்தனமாக வெளியே கொண்டு வருவதும், சுகபோகம் என்ற பெயரில் அதை மிக மிக அதிக அளவில் பயன்படுத்துவதும் புவி வெப்பமடைவதை வேகப்படுத்துகிறது.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பதற்கேற்ப நாகரீக வளர்ச்சி என்று நம்பி பேரழிவை நோக்கி ஓடுகிறோம்.

கி.செ. துரையின் புத்தகத்தில் இந்த அபாயமணி பலமாகக் கேட்கிறது. புவி வெப்பமாவதன் மூலம் டென்மார்க் உட்பட பல நாடுகள் கடலில் மூழ்கி விடும் என பதைபதைக்கிறார்.

www.padippakam.com



தம்பியின் தம்பிகளாலும் முடியும் என்பதை நிரூபிக்க ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

என் வேண்டுதல் ஒன்றிருக்கிறது.

கி.செ. துரையை நானறிவேன்

அவரின் அறிவுத்தளம் எவ்வளவு விரிந்த பரப்புள்ளது என்பதை யும், அதை லாவகமாக எடுத்துரைப்பதில் எவ்வளவு வல்லவர் என்பதையும் அறிவேன்.

அதனால் சொல்கிறேன்.

என் சகோதரா!

நிறைய எழுதுங்கள்.

உங்கள் பொறுப்புக்கள் மலைபோல் காத்து நிற்கின்றன.

ஏன்...? நமக்கும்தான்!

**பாவல்**

email.paveldxn@yahoo.co.in

**சென்னை**

படிப்பகம்

www.padippakam.com

## சமர்ப்பணம்

இந்த நூலில் இடம்பெற்ற உபகதைகள் அனைத்தையும் சிறுவயதிலேயே செவிவழிக் கதைகளாகக் கூறிப்போன என் அம்மாச்சி, அமரர். ம. ஆச்சிமுத்துவிற்கு.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

# கதை 1/18

18 நாட்கள் போரின் நினைவாக தினசரி ஒரு கதைப்படி 18 புதுமைக் கதைகள் வருகின்றன. படியுங்கள், புத்தெழுச்சி பெறுங்கள்.

புலம் பெயர் தமிழ் மக்களில் பலர் புதுமாத்தளனில் நடைபெற்ற தமிழினப் படுகொலைகளின் கவலைகளை மறக்கவில்லை. அவர்களின் தார்மீகக் கோபம் அணையாத நெருப்பாகவே இருந்து வருகிறது. வரும் மே 18 புதுமாத்தளன் துயர் சுமந்த ஓராண்டு நினைவு வருகிறது. அதன் பொருட்டு அலைகளில் வெளியாகும் பழமொழிகள் பகுதி சோகங்களை வெல் லும் சிந்தனைகளைத் தரவுள்ளது. இவ்வாரத்தில் இருந்து புதுமாத்தளன் சோகங்களுக்கு புது மருந்து என்ற புத்தம் புதிய சிந்தனைகள் வெளியாகின்றன. இவைகள் ஆசிரியர் கி.செ. துரையின் சிந்தனை உருவாக்கங்களாகும். 18 நாட்கள் போரின் நினைவாக தினசரி ஒரு கதைப்படி 18 புதுமைக் கதைகள் வருகின்றன. படியுங்கள், புத்தெழுச்சி பெறுங்கள்...

## புயலுக்குள் புதுமை கண்ட புகழ் மன்னன் பாரி

**ச**ங்க காலத்தில் புகழ் பெற்ற மன்னன் பாரியை அறியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. புயல் காற்றில் சிக்குண்ட முல்லைக் கொடிக்கு தன் தேரையே கொடுத்து உலகப் புகழ் பெற்றவனே பாரியாகும்.

www.padippakam.com



அடடா நமது கொடை வள்ளல் பாரி ஒரு முல்லைக் கொடிக்காக எவ்வளவு இரங்கியிருக்கிறான் என்ற கோணத்தில்தான் இதுவரை நாம் பாரி கதையைப் படித்து வருகிறோம். ஆனால் அதற்கும் அப்பால் பாரி கதையில் பல புதுமைகள் இருக்கின்றன. இதோ அவற்றில் ஒன்று.

புயல் காற்று வீசுகிறது. யாருமற்ற பறம்பு மலையை அண்டிய பொட்டல் வெளியில் ஒரு முல்லைக்கொடி ஆதரவின்றி வட்டமாகச் சுழல்கிறது. சொற்ப நேரத்தில் அது கொடுங்காற்றில் துண்டு துண்டாய் அறுபட்டு சிதறிப் பறக்கப்போகிறது.

பக்கத்தில் பாரி. அந்தக் கொடிய காட்சியைப் பார்த்தபடி அவன் சிந்திக்கிறான்.

உலகத்தின் சக்தியெல்லாம் ஒன்று திரண்டு அந்த வெளியில் பெருங்காற்றாக வீசுவதை உணர்கிறான். இந்தக் காற்றை நிறுத்தும் வலு தமக்கு இருக்கிறதா என்று சிந்திக்கிறான்.

இல்லை. அங்கு வீசிக்கொண்டிருக்கும் புயல் காற்று மனிதசக்திக்கு அப்பாற்பட்டது. யாராலுமே நிறுத்த முடியாதது.

என்ன செய்யலாம்?

ஒரெயொரு நொடி.

அவன் மூளை அபாரமாக வேலை செய்கிறது.

பளீர். மூளையில் ஓர் அதிர்வு.

மகத்தான அதிசயம் ஒன்று அந்த ஆபத்தில் மறைந்திருப்பதை சட்டெனக் கண்டு கொண்டான்.

உலகத்தின் பெருமூச்சாய் வீசும் அந்தக் காற்றுக்குள்தான் உலகப் புகழ் பெறும் இரகசியம் புதைந்து கிடப்பதைக் கண்டு கொள்கிறான்.

ஒரே நொடி.

உடனடியாகத் தனது தேரை விட்டுச் சரேலென இறங்குகிறான்.

முல்லைக் கொடியின் முன்னால் அதை நிறுத்துகிறான். மெல்லெனக் கொடியை எடுத்து தேரில் படர விடுகிறான்.

www.padippakam.com



முல்லைக் கொடிக்கு தேரைக் கொடுத்து உலகப்புகழைப் பெறும் உன்னதம் அந்தப் புயலுக்குள்தான் புதைந்து கிடக்கிறது என்பதைக் கண்டு கொள்கிறான்.

இரண்டாயிரமாண்டு அழியாப் புகழைப் பெற இயேசுநாதர் சிலுவை சுமந்து முள் முடி தரித்தார்.

எகிப்தியர்கள் மாடாய் முறிந்து, ஓடாய் இளைத்து பிரமிட்டுக்களை அமைத்து உலகப் புகழ் பெற்றார்கள். ஆனால் பாரியோ ஒரு தேருடன் இரண்டாயிரம் ஆண்டுப் புகழை ஒரே நொடியில் பெற்றுக் கொண்டான்..

இனி சிந்தனைக்கு வருவோம்...

புயல் ஏன் வந்தது?

முல்லைக்கொடி ஏன் உயிருக்குப் போராடியது..?

அந்த வழியாக பாரி மட்டும் ஏன் வரவேண்டும்..?

மூன்று நிகழ்வுகளையும் ஒன்றாக்கிப் பாருங்கள். உலகப் புகழ் பெறும் உன்னதம் தன்னை அடையாளம் காட்ட உருவாக்கிய மூன்று பெரும் காட்சிகள்தாம் இவை என்பதை உணர்வீர்கள்.

முல்லைக் கொடிக்கு தேரைக் கொடுத்ததோ, அதன் உயிரைக் காப்பாற்றியதோ இங்கு புதுமையல்ல...

புயல் வந்தபோது கவலை கொள்ளாமல் அதற்குள் இருந்த புதுமையைக் கண்டு பிடித்து உலகப் புகழ் பெற்றதுதான் அதில் உள்ள உன்னதமான செய்தியாகும்.

வாய்ப்புகள் பிறப்பிலிருந்து வரலாம்; இறப்பில் இருந்தும் வரலாம். ஆனால் அது ஒருமுறைதான் வரும். அது வரும்போதே பற்றிக் கொண்டால் கவலைகள் பறக்கும்; உலகப்புகழ் கைகளில் கிடைக்கும்.

இது பாரி முல்லைக்கொடிக்கு தேர் கொடுத்த கதையல்ல; அவன் உலகப் புகழ் பெற்ற கதை.

இனி புதுமாத்தளனுக்கு வாருங்கள்.

புதுமாத்தளன்தான் அன்றைய பறம்புமலைப் பொட்டல் வெளி..

முல்லைக்கொடி போலத்தான் புயலில் சிக்குண்ட நமது மக்கள்..

www.padippakam.com



புயல்காற்றுத்தான் அவர்களை அழிக்க ஒன்றுதிரண்ட உலக சமுதாயம்..

அன்று தேருடன் வந்த பாரி போலத்தான் புலம் பெயர் தமிழ் மக்களாகிய உங்களின் நிலை.

இந்த நான்கு முனைகளையும் இணைத்துப் பாருங்கள்..

பாரிபோல உங்கள் மூளையை நாற்புறமும் சுழல விடுங்கள்..

இன்று நீங்கள் வெறும் கண்ணீர் விடுவதைப் போல அன்று பாரியும் வெற்றுக் கண்ணீர் விட்டிருந்தால் விளைவு என்னவாகியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்..

இன்று உங்கள் அறிவையும், கண்களையும் மறைத்து நிற்கும் கண்ணீர் போல பாரியின் கண்களும், அறிவும் கண்ணீரில் மறைந்து போயிருக்கும்.

ஆம்...

புதுமாத்தளன் என்ற போர் நீங்கள் கவலைப்படுவதற்காக வர வில்லை என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்..

புலம் பெயர் தமிழன் உலகப் புகழ் பெறும் உன்னதம் அதற்குள் தான் புதைந்து கிடக்கிறது என்ற உன்னதத்தைக் கண்டுபிடிக்க காலம் உங்கள் முன் ஒரு சவாலை விட்டிருக்கிறது..

புலம் பெயர் வாழ்வையும், பொருளாதாரத் தேரையும், தாயகத்தில் புயலையும் ஏன் படைத்தான் இறைவன் என்று எண்ணிப் பாருங்கள்..

எண்ணங்களை மாற்றுங்கள். புதுமாத்தளன் என்றால் புதிய மாற்றங்களைச் செய்யுங்கள் என்பதுதான் பொருளாகும்.. புதுமை பெறுங்கள்..

01.05.2010 ➢

# கதை 2/18

## ஒலிம்பிக் போட்டியின் உன்னத தத்துவம்

புதுமாத்தளனில் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்று பல ஊடகங்கள் எழுதி வருகின்றன. இந்த உலகத்தில் எதுவுமே முற்றாகத் தோற்கடிக்கப்படுவதுமில்லை, முற்றாக வெற்றி கொள்ளப் படுவதுமில்லை. இதை அறிய ஒலிம்பிக் போட்டிக்குள் ஒரு விளக்கம் இருக்கிறது.

எத்தனையோ வருடங்களாக கடும் பயிற்சி எடுத்து, ஒலிம்பிக் போட்டிக்கு வீரர்கள் வருகிறார்கள். அதில் ஒருவன் மட்டும் தங்கப்பதக்கம் பெறுகிறான், மற்றவர்களால் அது முடிவதில்லை.

தோல்வியடைந்த ஒருவன், நான் தோற்கடிக்கப்பட்டு விட்டேன், இனி எனக்கு எதிர்காலமே இல்லை என்று கண்ணீர்விட்டால் ஒலிம்பிக் போட்டியின் முடிவுதான் என்ன?

இதுவரை காலமும் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற வர்களைப் பட்டியலிட்டுப் பாருங்கள்.. தொண்ணூற்றி ஒன்பது விழுக்காடு தோல்வியடைந்தவர்களே.. இவ்வளவு பேர் தோல்வியடையக் காரண மான ஒலிம்பிக் போட்டியை ஏன் நடாத்த வேண்டும்? தொண்ணூற்றி ஒன்பது வீதம் வீரர்களின் தோல்விக்குக் காரணமான ஒலிம்பிக் போட்டியை நிறுத்துவதுதானே முறை.

ஆனால் உண்மை அப்படியில்லை; ஒலிம்பிக்கில் பங்கேற்க வேண்டுமென்ற ஆர்வம் நாளுக்கு நாள் பெருகிச் செல்கிறதே, ஏன்..?

ஒலிம்பிக்கில் பங்கேற்று தோல்வியடைந்தாலும் அவருக்குப் பெயர் வீரரே.. வெற்றியடைந்தாலும் அவருக்குப் பெயர் வீரரே..

www.padippakam.com



தோல்வியடைந்தவன் கோழையல்ல, அவனும் வீரனே என்பதுதான் ஒலிம்பிக்கின் தத்துவமாகும். களத்தில் இறங்கும்போதே அவன் வீரனாகி விடுகிறான். இதுதான் ஒலிம்பிக் தரும் சிறப்பு.

ஆனால் ஒரு கேள்வி...

ஒலிம்பிக் போட்டியில் அதிபாரக் குத்துச் சண்டையில் மைக் தைசான் களத்தில் இறங்கிவிட்டார்...

இவருடன் மோதுவதற்கு எல்லோருமே பயந்து நடுங்குகிறார்கள்...

அப்போது ஓர் ஐந்து வயதுச் சிறுவன் அச்சமின்றி கோதாவில் இறங்குகிறான்..

இந்தப் போட்டியில் சமநிலை இல்லை..

ஆனால் ஐந்து வயதுச் சிறுவன்தானே.. இவனை அடித்து வீழ்த்தி இலகுவாக தங்கப்பதக்கத்தை எடுத்துவிடலாமென மைக் தைசான் நினைத்தால் அக்கணமே மைக் தைசான் தோல்வியைத் தழுவிவிடுவார். உலகம் அவருடைய வெற்றியை ஒரு பொருட்டாக மதிக்கவே மாட்டாது.

மாறாக, அதே போரில் சிறுவன் வென்றுவிட்டால் தைசானுக்கு அதை விட பெரிய கேவலம் எதுவுமே கிடையாது.

வென்றாலும் அவமானம், தோற்றாலும் அவமானம் என்ற நிலை.. இப்போது மைக் தைசான் என்ன செய்ய வேண்டும்? அந்தச் சிறுவனின் ஓர்மத்தைப் பாராட்ட வேண்டும். அவனைக் கட்டியணைத்து, இந்த உலகத்தில் யாருமே துணியாத ஒரு காரியத்தை நீ செய்ய வந்துவிட்டாய் என்று போற்றி அவனுக்கே தங்கப் பதக்கத்தைக் கொடுக்கவும் வேண்டும்.

இதுதான் வீரத்திற்கு அழகு..

ஆனால் புதுமாத்தளனில் நடந்தது என்ன?

சுமார் 32ற்கும் மேற்பட்ட உலக நாடுகள் ஐந்து வயதுச் சிறுவனுக்கு ஒப்பான சிறிய படையணியைச் சுற்றி நின்று மோதினார்கள்.

சண்டை ஆரம்பித்தவுடன் சிறுவன் பயந்து ஓடவில்லை.. அதைத் துணிவுடன் எதிர் கொண்டான்.. வீரமரணம் அடைந்தான்.

அவனுடைய தோல்வி உண்மையான தோல்வியா..?

www.padippakam.com



அவன் தோற்றுவிட்டான் என்று நாம் அழலாமா..?

ஆடுகளம் சமமாக இல்லாத இடத்தில் நம் ஈழத் தமிழ் வீரர்கள் மோதினார்கள்.. அவர்கள் அழிக்கப்படவில்லை.. இப்போரில் அவர்களுக்கே வெற்றி..

இந்த உண்மையை உணர்ந்து நமது கண்ணீரை ஆனந்தக் கண்ணீராக மாற்ற வேண்டும்.

சங்கப்பாடலில் இதற்கு இன்னொரு உதாரணம்..

குடும்பத்தில் எல்லோரும் இறந்த பின் தன் சிறுவயது பிள்ளையை போர்க்களம் அனுப்புகிறாள் தாய்..

அவன் மார்பிலே வேலேந்தி போரிலே சாய்கிறான்..

அந்தச் சிறுவனை வென்றவர்கள் யார்?

அவர்கள் வரலாற்றில் வீரர்களாகவா இடம் பெற்றார்கள்?

இல்லை...

தோல்வியடைந்த அந்தச் சிறுவனே வெற்றியாளன்.. அவனே வரலாற்றில் நின்றான்.. வெற்றி பெற்றோம் என்று மார்தட்டிய அனைவரையும் வரலாறு அடித்துச் சென்று விட்டது...

இப்போது சொல்லுங்கள்...

தனது சிறிய படையணியோடு உலகத்தையே துணிந்து எதிர்த்த பிரபாகரன் அடைந்தது தோல்வியா...?

தன் பிள்ளைகள், மனைவி, வயதான பெற்றோரைக் கூட பாதுகாப்பாக வேறிடம் அனுப்பாது, மக்களோடு மக்களாக உலகை எதிர்த்து களத்தில் நின்ற அந்த வீரன் அடைந்தது தோல்வியா...?

எண்ணிப் பாருங்கள்...

நாம் தோல்விக்காகக் கண்ணீர்விட்டால் நம்மை உலகம் மூடர் என்று தான் அழைக்கும்.

நாம் அடைந்தது தோல்வியல்ல.. வெற்றி..

www.padippakam.com



தோல்வியென்று கண்ணீர்விட்டால் நமது பிரச்சனைக்குத் தீர்வு எதுவும் கிடைக்காது..

வெற்றி என்று மார்தட்டி நின்றால்..

நமது கண்களில் வடியும் கண்ணீரை ஆனந்தக் கண்ணீராக மாற்றினால்..

விடிகாலை வர முன் விடிவு வரும்..

ஆம்..!

நம் மக்கள் உலகச் சரித்திரம் படைத்த மாதமே இந்தப் புதுமாத்தளன் போர் நடைபெற்ற மாதம் என்ற உண்மையை உணர்ந்து, நாம் ஒவ்வொருவரும் புது வலு பெற வேண்டும்.

02.05.2010 ➢

# கதை 3/18

## திரும்பிப் பார்க்காதே.. நட..

பாரதப்போர் முடிந்த சில காலத்தில் கலியுகம் பிறந்து விடுகிறது. அதாவது இன்றைய கலியுக மனிதன் பிறந்து விடுகிறான்.

புதுமாத்தளன் போரும் பாரதப் போரும் 18ம் நாளும் 18ம் திகதியும் முடிவடைந்த போர்களாகும். தற்போது மே 18ம் திகதியை துயர் சுமந்த நாளாக புலம் பெயர் தமிழர் உலகம் முழுதும் அனுட்டிக்கிறார்கள். இந்த மே 18 என்றதும் நமது எண்ணங்கள் 18ம் நாள் பாரதப் போருக்குள் நுழைகிறது. இன்று பாரதப் போருக்குள் இருந்து ஓர் உன்னத சிந்தனையை முன்வைக்கிறேன்.

பாரதப்போர் முடிந்த சில காலத்தில் கலியுகம் பிறந்து விடுகிறது. அதாவது இன்றைய கலியுக மனிதன் பிறந்து விடுகிறான்..

கலியுகம் பிறந்த அந்த ஒற்றை நிமிடத்து நிகழ்வு இதுதான்...

பாண்டவர்களில் மூத்தவனாகிய உதிஸ்டிரன் ஆகிய தர்மன் நல்லாட்சி நடாத்திக் கொண்டிருக்கிறான்...

அப்போது 'அண்ணா, கலியன் பிறந்து விட்டான்...!' என்றபடி அர்ச்சுனன் துடித்துப் பதைத்து, வியர்த்து விறுவிறுத்து ஓடி வருகிறான்.

அன்றைய தினம் யாரோ ஒரு தாயின் வயிற்றில் இருந்து, தலைப் பக்கமாக ஒரு பிள்ளை பிறந்து விட்டது. தலையால் பிறக்கும் மனிதனை உலகத்தில் யாராலுமே திருத்த முடியாது என்பதால் அவனுடைய பிறப்பே கலியுகத்தின் பிறப்பு என்று சொல்ல அர்ச்சுனன் ஓடி வந்தான்.

அதற்கு முன் கால்புறமாக மனிதன் தாயின் வயிற்றில் இருந்து பிறந்தான் என்பது கருத்து..

www.padippakam.com



ஓடி வந்தவன் அந்த அவசரத்தில் தோளில் இருந்த சால்வையை மரியாதையாக எடுத்து இடுப்பில் கட்டவும், காலில் இருந்த செருப்பை வாசலிலேயே கழற்றவும் மறந்து அண்ணன் முன் வந்து நின்றுவிட்டான்.

உதிஸ்டிரனாகிய தர்மர் அவனுடைய கால்களைப் பார்க்கிறார்.. அங்கே கழற்றப்படாத செருப்பு...

அருச்சுனனின் விரல்கள் துடிக்கின்றன.. ஐயோ.. என்று நாக்கைக் கடித்துக் கொள்கிறான்..

அதே வேகத்தில் அவன் தோள்களைப் பார்க்கிறார். அங்கே சால்வை..

அருச்சுனன் அங்கமெல்லாம் துடிதுடிக்க அவசரமாகவும், சங்கட மாகவும் சால்வையை எடுத்து இடுப்பில் கட்டுகிறான்..

தர்மன் சிரிக்கிறான்...

'தம்பி.. கலியன் எங்கோ பிறக்கவில்லை.. என் வீட்டிலேயே பிறந்துவிட்டானே...' என்று செருப்பையும் சால்வையையும் காட்டுகிறான்..

அவ்வளவுதான் அதற்குமேல் அவன் எதுவுமே பேசவில்லை..

அன்றே.. அக்கணமே.. அந்த அவலத்தைத் திரும்பிப் பார்க்காமல் ஆட்சியை விடுத்து, நாட்டைவிட்டு வெளியேற முடிவு செய்தான்.

தற்செயலாகக் கூட அண்ணனை மதிக்காத ஒரு தம்பி இருப்பதைக் கண்டபின் ஆட்சியில் இருக்கவே கூடாது என்ற முடிவுக்கு வந்தான் தர்மன்.

அன்று தர்மன் தம்பியின் கால்களில் செருப்பைக் கண்டது போலத்தான் பிரபாகரனும் தன்னைக் காட்டிக்கொடுத்த புலித் தம்பிகளை புதுமாத்தளனில் நேரடியாகக் கண்டார்..

'தம்பி, தமிழீழம் பிறக்க முன்னர் நீ பிறந்துவிட்டாயே' என்று அவர் களைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னார்.

அன்று... அக்கணம்.. உதிஸ்டிரனுக்கு என்ன நடந்ததெனப் பார்ப்போம்..

தர்மனும் அவனுடைய நான்கு சகோதரரும், பாஞ்சாலியும் இமய மலை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

www.padippakam.com



அப்போது வழியில் முதலாவதாக பாஞ்சாலி மலைச்சாரலில் விழுந்து மடிகிறாள்..

திரும்பிப் பார்த்த கடைசித் தம்பி சகாதேவன்.. பலத்த குரலில், 'அண்ணா...! பாஞ்சாலி இறந்து விட்டாள்!' என்கிறான்..

'திரும்பிப் பார்க்காதே... நட..!' தர்மன் ஆணையிடுகிறான்..

அதன் பின் மலைச்சாரலில் ஒவ்வொருவராக வீழ்ந்து மடிகிறார்கள்...

தர்மனோ திரும்பிப் பார்க்காமலே தொடர்ந்து நடக்கிறான்...

திரும்பிப் பார்க்காமலே நடந்த தர்மனே இறுதியில் சுவர்க்கம் செல்லும் புஷ்பக விமானத்தைத் தொடுகிறான் என்று முடிகிறது கதை...

திரும்பிப் பார்க்காதே...!

இது மாபெரும் தத்துவமாகும்...

இதுபோலத்தான் ஆதிகாலத்தில் மனிதன் கடல் வழியாக தூரச் சென்றால்... கடலும் வானமும் சங்கமிக்கும் இடத்தில் உள்ள பாதாளத்தில் விழுந்து தொலைந்து விடுவேன் என்று பயந்து நடுங்கினான்...

இதனால் எப்போதுமே தனது படகில் ஒரு கயிற்றைக் கட்டிக்கொண்டே கடலில் பயணித்தான்...

அவன் அச்சத்தின் காரணமாகவும், தனது குடும்பத்தையும் உறவு களையும் பிரிய மனமில்லாமலும் கயிற்றினால் கட்டிக்கொண்டு, மட்டுப்படுத்தப்பட்ட பயணங்களை மேற்கொண்டான்..

அவர்களில் இருந்து ஒரு மனிதன் வெளிவந்தான்.. அவன்தான் மகலன்..

ஒரு நாள் அவன், 'திரும்பிப் பார்க்காதே...!' என்று உரத்துக் குரலிட்டான்..

யாருமே அவன் பேச்சைக் கேட்கவில்லை.

தன் கப்பலில் இருந்த கயிற்றின் மீது ஒரு கோடரியைப் போட்டான்.. கயிறு அறுந்தது..

கப்பலில் இருந்த அனைவரும் பயத்தால் ஓலமிட்டார்கள்...

'திரும்பிப் பார்க்காதே..' என்றபடியே எதிரேயுள்ள கடலை நோக்கி துணிச்சலுடன் முன்னேறினான்...

www.padippakam.com



ஆம்.!

அன்று திரும்பிப் பார்க்காமல் புறப்பட்ட மகலனே.. கப்பலில் புறப் பட்டு உலகத்தை முதல் தடவையாக சுற்றிவந்து, உலக சாதனை படைத்தான்...

திரும்பிப் பார்த்தவனுக்கோ கடலின் முடிவு பாதாளமாகத் தெரிந்தது..

திரும்பிப் பார்க்காமல் இலக்கை நோக்கி நடந்தவனுக்கோ உலகமே உருண்டையாகி காலடியில் கிடந்தது...

இனி புதுமாத்தளன் போவோம்..

நீதியற்ற முறையில் நடாத்தப்பட்ட புதுமாத்தளன் போர் நிகழ்ந்த தினமே கலியனுக்கெல்லாம் கலியன் பிறந்த தினமாகும்...

திரும்பிப் பார்க்காதே என்று கூறி பிரபாகரன் நடந்த தினமும் அதுதான்..

பிரபாகரன் போல நீயும் திரும்பிப் பார்க்காதே; உன் இலக்கை நோக்கி நட..

உன் எதிரில் இருப்பது கடலின் முடிவல்ல.. உன்னை அழிக்கும் பாதாளப் பெருவெளியல்ல..

உன் கண்ணீரைத் துடைத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் நட....

வெற்றி உனது கையில் வரும்...

அதற்கு முன் கொஞ்சம் நில்...

உலகத்தின் பாச பந்தங்களை அறுத்துக்கொண்டு... அமைதிப் பெருவெளிக்குள் நுழை...

கொஞ்சம் காது கொடுத்துக் கேட்டுப்பார்...

பிரபாகரன் திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருக்கும் காலடி ஓசைகள் உன் காதுகளில் கேட்கும்...

திரும்பிப் பார்க்காதே... நட....

03.05.2010 ➢

# கதை 4/18

## தேவை என்பதே ஒற்றுமைக்கான வேத ஒலியாகும்

தமிழர்களுக்குள் ஒற்றுமை கிடையாது, அதனால்தான் அவர்கள் இப்படியாகப் பிரிந்து அழிகிறார்கள் என்ற கருத்தை அடிக்கடி உச்சரிக்காத தமிழரை எங்குமே காண முடியாது.

ஒற்றுமை என்றால் எல்லோரும் ஒரே கொள்கையை ஏற்றுக் கொண்டு அதன் வழியே நிற்பதுதான் ஒற்றுமை என்று நம்மில் பலர் கருதுவதால் தான் தமிழரிடையே ஒற்றுமை இல்லை என்று கருதுகிறோம்.

அதிலிருந்து மேலும் ஒருபடி முன்னேறி, நமது கருத்தை ஏற்காத வர்கள் உலகத்தில் உயிருடன் வாழக்கூடாது என்றளவிற்கு முன்னேறி னோம். அதனால் அழிந்தவர்கள் ஏராளம் ஏராளம்...

அன்று...

ஒரே கொள்கையைத்தான் எல்லோரும் ஏற்க வேண்டுமென எகிப்திய மன்னர்கள் கட்டளையிட்டார்கள். எல்லோரும் இணைந்து பிரமிட்டுக் களை அமைத்தால் மன்னன் மகிழ்வடைவான்... நைல்நதி பெருக் கெடுத்து உங்களை அழிக்காது... மன்னன் இறைவனின் பிரதிநிதி என்பதால் நீங்கள் பிரமிட்டை அமைக்க வேண்டும்... இக்கருத்தை அனைவரும் மறுப்பின்றி ஏற்க வேண்டும் என்றார்கள்...

அந்த ஒற்றுமை உலக சாதனைக்குரிய பிரமிட்டுக்களைப் படைத்ததை யாருமே மறுக்க முடியாது...

ஆனால்...

பிரமிட்டுக்களுக்கு மேல் என்ன நடந்தது...?

www.padippakam.com



பிரமிட்டுக்களால் ஒற்றுமைப்பட்ட சமுதாயத்தை வைத்து எதுவுமே செய்ய முடியாமலும், செய்யத் தெரியாமலும் எகிப்தியப் பேரரசு படிப்படியாக அழிந்தது.

மக்களிடையே மரண அச்சத்தை ஊட்டி தாம் உருவாக்கிய ஒற்றுமையானது நாளடைவில் வெறும் அடிமைகளை மட்டுமே வளர்த்தது என்ற உண்மையை எகிப்திய அரசி கிளியோபாட்ரா உணர்ந்து கொண்டாள்.. கடைசியில் பாம்பின் வாயில் கையை வைத்து மரணத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய அவலமே அவளுக்குப் பரிசாகக் கிடைத்தது..

ஒற்றுமை என்றால் ஒரு கருத்தை எல்லோரும் ஏற்கத்தான் வேண்டும் என்ற எண்ணம் நாலாயிரம் வருடங்களுக்கு முன்னரே தவறென நிறுவப்பட்டு விட்டது.

ஆனால் இதைச் சரியாக விளங்கி தமிழ்ப்படுத்திய பெருமை அறிஞர் அண்ணாவையே சாரும்.

வேற்றுமையிலும் ஒற்றுமை காண்போம் – இந்த வாசகத்திற்கு சொந்தக்காரார் பேரறிஞர் அண்ணாவே.

வேற்றுமை உருபுகளை சொற்களுடன் ஒற்றுமைப்படுத்தினாலே பொருள் வேறுபடும் என்கிறது தமிழ் இலக்கணம்.

இந்த உண்மையை அறிஞர் அண்ணா கண்டுகொண்டிருக்காவிட்டால் கோடான கோடி தமிழக மக்கள் புதுமாத்தளன் போன்ற பேரவலத்திற்குள் என்றோ சிக்குப்பட்டிருப்பார்கள்.

காரணம்..

தனித்தமிழ்நாடு கேட்கும் கட்சிகள் தடை செய்யப்படும்; அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென ஜவகர்லால் நேரு சட்டத்தைக் கொண்டு வந்தபோதே அண்ணாவின் தூரப்பார்வை விழித்துக் கொண்டது.

அந்த இக்கட்டான நேரத்தில் மாற்றுக் கொள்கை உடையோரை துரோகிப்பட்டம் கட்டி உணர்ச்சி அரசியல் நடாத்த வழியிருந்தும், விவேகமாகச் செயற்பட்ட அண்ணா ஒற்றுமையை வேற்றுமையில் கண்டு வெற்றி பெற்றார்.

www.padippakam.com



ஆமாம்... ஒற்றுமையை வேற்றுமையில் காண்பது எப்படி..?

இதோ ஒரு சிறிய கதை..

இன்புளுயன்சா நோயினால் உலகத்தில் மில்லியன் மில்லியன் மக்கள் அழிந்து கொண்டிருந்தார்கள்... ஏறத்தாழ ஐரோப்பாவின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கே அழிந்து விட்டது..

இதற்கான மருந்தைத் தேடி முழு உலகமுமே போராடியது.. பயன் கிட்டவில்லை..

ஒரு நாள்..

பெனிசிலியம் என்ற நச்சுக் காளானைப் பிடுங்கிவந்து மேசையில் வைத்த அலக்சாண்டர் பிளமிங் தற்செயலாக அதை மூடி வைக்க மறந்துவிட்டார்.

வெளியே சென்றவர் மறுபடியும் வீடுவந்து அந்தக் காளானைப் பார்த்தார்... அந்தக் காளானில் பட்ட காற்று அருகில் இருந்த தாவரங் களை அப்படியே கொன்றொழித்திருந்தது..

ஆம்...

அந்த நச்சுக் காளானுக்குள்தான் உலகத்தையே காப்பாற்றக்கூடிய மகத்தான சக்தி இருந்தது.

இன்றுவரை உலகத்தின் மொத்த சனத்தொகைக்கு இணையான மனித உயிர்களைக் காப்பாற்றியது இந்த பெனிசிலியத்தில் இருந்து உருவான பென்சிலீன் மாத்திரையே..

உலகத்தையே காப்பாற்றிய பெருமை கடவுள் உட்காரும் ரோஜா வுக்கோ, தாமரைக்கோ கிடையாது; இந்த நச்சுக் காளானுக்கே இருக்கிறது.

எத்தனையோ அழகு மலர்களை எல்லாம் பாடுகிறோம்.. நாம் பெனிசிலியம் காளானைப் போற்றி ஒரு கவிதை பாடியிருக்கிறோமா...?

ரோஜாவுக்காகப் பாடிய கவிதைகளில் ஒரு கவிதையையாவது பெனிசிலியத்திற்காகப் பாடினோமா..?

கிடையாது..

நமது கவிதைகளில் கூட சேர்த்துக் கொள்ள முடியாத பெனிசிலியம் தான் உலகிற்கே உயிர்ப்பிச்சை தந்திருக்கிறது..

www.padippakam.com



எல்லாவற்றையும் ஒற்றுமைப்படுத்துவோமென்று பெனிசிலியத்தையும், ரோஜாவையும் இணைத்து மாலை கட்டினால் என்ன நடக்கும்...?

கட்டிய மறுகணமே மாலை கருகிச் சலசலத்துவிடும்..

வேறுபட்டு நிற்பதனால் இந்த உலகம் வாழும் என்பதே இயற்கை சொல்லும் இனிய வேதம்..

ஒவ்வொரு பூவையும் அதன்தன் அழகோடு பூக்க அனுமதிப்பது வேற்றுமையல்ல; அதுதான் உண்மையான ஒற்றுமையாகும்..

இப்புவியில் படைக்கப்பட்ட எல்லாவற்றுக்குமே ஒரு தேவை இருக்கிறது..

தேவை என்பது வேத மந்திரம் போன்ற சொல்லாகும்..

தேவை என்ற சொல்லே எல்லாவற்றையும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும்..

நமக்கு ஒற்றுமைதான் தேவை என்று அலற வேண்டாம்..

அறிவுள்ளவன் பார்வையில் ஒற்றுமையும் தேவையும் ஒரே கருத்துள்ள சொற்களே..

இயற்கையை இயற்கையோடு அனுபவியுங்கள். அங்குதான் இன்பம் இருக்கிறது. அங்குதான் இறைவன் இருக்கிறார் என்றார் ஐன்ஸ்டின்..

எல்லாவற்றையும் அவையவைக்கே உரிய இயற்கையோடு வளர அனுமதித்தால் நாம் தேடும் ஒற்றுமை தானாகவே மலரும்..

புதுமாத்தளன் சோகத்தை அழிக்க மிகப்பெரிய பென்சிலீன் மாத்திரையாக அதுவே அமையும்.

எல்லாவற்றையும் அதனதன் பாட்டில் விட்டிருந்தால் புதுமாத்தளன் சோகமே வந்திருக்காது..

இதை உணர்ந்து புதுமாத்தளன் சோகத்தை அழித்தால் நம் கண் முன் புதுவழி பிறக்கும்...

04.05.2010 ➢

# கதை 5/18

## ஏறுங்கள் வண்டியில் புதுமாத்தளனை விட்டுப் போவோம்

நம் வாழ்க்கை ஒரு பேருந்து வண்டிப் பயணம் போன்றது.

பட்பட்டென்று அடிக்கிறது இதயம் என்னும் இயந்திரம். வாழ்க்கை வண்டி ஓடுகிறது.

நம் பூட்டன், பூட்டி வாழ்ந்த காலத்து வாழ்க்கையை பாட்டன் பாட்டி வாழவில்லை. பாட்டன் பாட்டி வாழ்ந்த காலத்து வாழ்க்கையை நாம் வாழவில்லை. தினமும் புதிய ஊர்கள், புதிய தெருக்கள்..

ஆனால் வாழ்க்கை என்னும் வண்டிக்கும் சாதாரண பேருந்து வண்டிக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது.

பேருந்து வண்டி புறப்பட்ட இடத்திற்கு திரும்பிப் போகும், வாழ்க்கை வண்டியோ முன்னோக்கி மட்டுமே ஓடுமேயல்லாது ஒரு காலமும் திரும்பி ஓடாது.. இதுதான் அந்த வேறுபாடு.

நாம் வண்டியை ஓட்டிக்கொண்டிருக்கும்போது கரடுமுரடான பாதைகள், பாதாளங்கள், மலைமுகடுகள், அகழிகள், பனிமலைகள், பூங்காக்கள், மதுபானச் சாலைகள் என்று பல காட்சிகளை வழியில் சந்திக்க நேரிடும்..

அதேவேளை தொடரும் பயணத்தின் இடையில் இளைப்பாற நமக்கு சிறுபொழுது கிடைக்கும்.

அந்த நேரம் வண்டியை பூங்காவிற்கு அருகில் நிறுத்துவோர் இதமான காற்றைச் சுவாசிப்பார்கள்; சுகந்தமான மலர்களின் நறு மணத்தை முகர்வார்கள்..

www.padippakam.com



மாறாக மதுபானக் கடைக்கு அருகில் நிறுத்துவோர் போதையில் சிக்குண்டு போவார்கள்.. பின்னர் அவர்களுடைய வாழ்க்கைப் பேருந்து தள்ளாடி தானாகவே விபத்தைச் சந்திக்கும்..

இதில் இன்னொரு உண்மையும் இருக்கிறது.. வாழ்க்கை என்னும் பேருந்தை திருப்பிச் செலுத்த அனுமதி வழங்காத இயற்கை, அதே நேரம் அதை எந்த வழியால் செலுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்கும் உரிமையை நம் கைகளில் கொடுத்திருக்கிறது.

வாழ்க்கை வண்டியை பூங்காவிற்குள் செலுத்துவதும் டாஸ்மாக் என்னும் தவறணைக்குள்ளால் செலுத்துவதும் அவரவர் எண்ணங்களே..

ஒரு திரைப்படப் பாடல் இதற்கு விளக்கம் தருகிறது..

பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே.. நெஞ்சினில் துணிவிருந்தால் நிலவிற்கும் போய் வரலாம்..

என்று கூறுகிறது.

வாழ்க்கை மட்டுமல்ல, விடுதலைப் போராட்டமும் ஒரு பேருந்து வண்டிதான். அதை தலைமைச் சாரதியாக இருந்து பிரபாகரன் ஓட்டிச் சென்றார்..

அவர் பயணத்தில் எதிர்பாராத ஓர் ஊர் வந்தது. அதன் பெயர்தான் புதுமாத்தளன்..

ஒளிந்துகொள்ள இடமில்லாத, நாகதாளிகளும், இராவணன் மீசைகளும் வளர்ந்திருக்கும் மணலும் சேறும் நிறைந்த பொட்டல் வெளி... மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட கூர்மையான அத்தாங்கு போன்ற குடாப்பகுதி..

கடல், தரை, ஆகாயம் என்று சகல வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன.. ஒரேயொரு சுரங்க வழிதான் அவருடைய போராட்ட வாகனம் பயணிப்பதற்கு வழங்கப்பட்டது.

தேறை மீன் கூட்டத்தை கல்லெறிந்து சென்று அத்தாங்கிற்குள் வீழ்த்துவதைப் போன்ற ஒரு காட்சி.. அத்தாங்கிற்குள் போவதைத்தவிர வேறு வழியில்லாத ஒரு வழிப் பயணம்..

www.padippakam.com



நாம் எவ்வளவுதான் வாகனத்தைச் சரியாக ஓட்டினாலும், எதிரில் வருபவன் விபத்தை ஏற்படுத்த வேண்டுமென நினைத்தால் நாம் அந்த விபத்தைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்..

சகல பாதைகளும் மறிக்கப்பட்டு, 32 வாகனங்கள் சுற்றிநின்று மோதின.. விடுதலைப் போராட்டம் தவிர்க்க முடியாத விபத்தை புதுமாத்தளனில் சந்தித்தது..

எதிரிகளின் எந்த இராணுவ முகாமைத் தாக்கினாலும் அத்தாங்கின் அந்தத்தில் ஓர் ஓட்டை வைப்பார் பிரபாகரன். காரணம், எதிரிகள் தப்பிச் செல்ல வேண்டும் என்ற நல்ல மனம் அவரிடம் இருக்கும்.. அதுதான் தமிழர் கண்ட போரியல் நாகரிகமாகும்..

ஓட்டையில்லாத புதுமாத்தளன் அத்தாங்கைப் பார்த்து பிரபாகரன் சிரித்தார்.. அத்தாங்கின் அந்தத்தில் நின்ற அமெரிக்கக் கப்பல் ஓடி மறைந்தபோது இன்னொரு முறை சிரித்தார்..

சங்ககாலத்திலேயே தமிழன் கண்டுவிட்ட போரியல் நாகரிகத்தை கேவலம் அமெரிக்கனும், பிரிட்டனும், சீனனும், வடஇந்தியனும் இன்று கூட கற்றுக்கொள்ளவில்லையே என்று சிரித்தார்

தனக்காக அல்ல, கேவலமான உலகத்தை எண்ணி நாணித் தலை குனிந்தார்.. வெட்கப்பட்டார்..

அவர் கண்முன் ஒரு காட்சி மலர்கிறது..

ஒரு நாள் கரும்புலி வீரன் ஒருவன் வெடிகுண்டு வாகனத்தில் ஏற மறுத்துவிட்டான்.. அந்த நேரம் கொழும்பிற்கு வேறொரு பணியின் நிமிர்த்தம் இன்னொரு கரும்புலி வந்திருந்தான்.. வாகனத்தில் ஏறி உயிரைத் தியாகம் செய்ய யாருமே இல்லாத வண்டியைப் பார்த்தான்.. கணப்பொழுதும் யோசிக்காமல் அந்த வெடிகுண்டு வாகனத்தை ஓட்டிச் சென்று வீரமரணமடைந்தான்..

இதுவரை உலகில் நடைபெற்ற பல்லாயிரம் போர்களில் அவனைப் போலொரு வீரன் இருந்ததாக அடையாளம் காட்ட முடியாது..

இப்படிப்பட்ட உயிரைத் துச்சமென மதித்த வீரர்கள் எல்லாம் போராடிய இந்தப் புனிதப் போராட்டம் புதுமாத்தளனில் புதைக்கப்பட்டுவிடுமோ என்று எண்ணிப் பார்க்கிறார்..

படிப்பகம்

www.padippakam.com



தியாகமே வடிவான போராளிகள் மண்ணுக்குள் இருக்கிறார்கள்.. அவர்கள் இதைக் காப்பாற்றுவார்கள் என்று உறுதிபட நம்புகிறார்..

இப்படியான் நேரத்தில் ஒரு தலைவன் மக்களுக்கு ஏதாவது ஒரு வார்த்தையாவது கூறியிருக்க வேண்டும்.. ஆனால் பிரபாகரனோ ஒரு வார்த்தை கூட தொலைபேசி வழியாக உலக சமுதாயத்தின் முன் கூறவில்லை...

மாவீரரிடம் மட்டும் தனது முடிவைக் கூறிவிட்டு நடந்தார்...

அன்றொருநாள் கரும்புலி வினோத்திடம், நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன் என்று கூறினார் பிரபாகரன்.

அவன் போகும் போது படலையில் ஓங்கி அடித்தான்.. 'நீ வரவேண்டும் என்பதற்காக நாம் போகவில்லை.. நீ இருக்க வேண்டும் என்பதற்காக நாம் போகிறோம்' என்றுவிட்டு போனான்..

அப்படிப்பட்ட மாவீரர்கள் பிரபாகரனை போகவா விடுவார்கள்.. யோசித்துப் பாருங்கள்..

அன்று ஆயுதங்கள் ஒப்படைக்கப்படுகின்றன என்ற தகவலைக்கூட அவர் கூறவில்லை.. ஆயுதங்கள் மௌனமாக்கப்படுகின்றன என்று மட்டும் கூறினார்..

இப்போது பிரபாகரனின் மொழி மௌனம்தான்...

இயற்கை மௌனமாகத்தான் இருக்கிறது..

காற்றாக, மழையாக, ஒளியாக உலகத்தை ஆட்சி செய்கிறது.. அதன் மொழி மௌனம்தான்..

இருள் 24 மணி நேரமும் இருக்காது..

பிரபாகரன் என்னும் பிரகாச ஒளி இப்புவியில் பரவும்..

இப்படிப்பட்ட ஓர் உன்னத மனிதன் ஏற்றிய விடுதலை விளக்கு அணைந்து போகுமென்று நினைத்து நீங்கள் கண்ணீர்விடலாமா..

வண்டியில் ஏறுங்கள்.. புதுமாத்தளனை விட்டு அமைதியும், சுதந்திரக் காற்றும் வீசும் புதிய ஊர்நோக்கிப் பயணிப்போம்..

ஸ்டியரிங் உன் கையில்தான் இருக்கிறது. ஏன் கவலை..

05.05.2010 ➢

படிப்பகம்

# கதை 6/18

## நம்ப முடியாத இன்பநாள் வரும்

ஒவ்வொரு மனிதனும் தான் அறிந்தவற்றை அடிப்படையாக வைத்துத்தான் தன் எண்ணங்களைப் பறக்கவிடுகிறான்.. அதனால்தான் பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே என்று நேற்றைய சிந்தனை கூறியது..

நன்மை, தீமை, இன்பம், துன்பமென்று அவன் காட்டும் அத்தனை நவரச பாவங்களும் ஊற்றெடுப்பது அவன் சேகரித்து வைத்திருக்கும் சிந்தனை வங்கியில் இருந்துதான்..

ஆனால்...

நாம் என்னதான் அறிந்திருந்தாலும், எப்படித்தான் பாதுகாப்பாக வாழலாம் என்று திட்டமிட்டிருந்தாலும் அதை எல்லாம் மீறிக்கொண்டு நம்ப முடியாத ஒரு நாள் நம்முன் வந்து நிற்கலாம்.

அப்படி நம்ப முடியாத நாளைச் சந்தித்து அதற்குள்ளால் நல்லறிவு பெறுவதற்காக உலகில் படைக்கப்பட்ட முதல் இனம் தமிழ் இனம்தான் என்பது அதிசயமான உண்மையாக இருக்கிறது..

தமிழ் என்ற பெயரே அதற்கு சிறந்த உதாரணமாகும்..

ஆதிகால மனிதர்கள் பெரும் கடற்கோளினால் அழிந்த இனமென ஓர் இனம் உலகில் இருந்தது என்று தமது குறிப்புகளில் எழுதினார்கள்..

தண்ணீரில் அமிழ்ந்து போனதால் அமிழ் என்று அது அழைக்கப் பட்டது. அமிழ், அமிழ் என்று தொடர்ந்து உச்சரித்தால் தமிழ் என்ற சொல் உங்கள் வாய்க்குள் வந்து நிற்கக் காண்பீர்கள்.

www.padippakam.com



அன்று...

முருகன், அகத்தியர், நக்கீரர் ஆகிய முப்பெரும் தமிழ் அறிஞர்களும் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தார்கள். அதனால் உலக மாந்தரை எல்லாம் அறிவால் முந்திச் சென்று சிகரங்களைத் தொட்டார்கள்.

ஆனால்...

எல்லாச் சிறப்புக்களையும் தொட்ட அவர்கள், தமது அறிவிற்கும் கணிப்பிற்கும் அப்பால் நம்ப முடியாத நாள் ஒன்று வரும் என்பதைக் கணிப்பிடத் தவறினார்கள்..

திடீரென ஒரு நாள் பெரும் கடற்கோள் வந்தது.. கபாடபுரம் கடலில் போனது.. இலங்கையும் இந்தியாவும் துண்டு துண்டாகப் பிரிந்தன.. சங்கத்தமிழ் நூல்களில் பெருந்தொகை கடலோடு போயின.

அன்றுதான் நம்ப முடியாத ஒரு நாள் வருமென்பதை தமிழினம் முதன் முதலாகக் கண்டு கொண்டது..

கடற்கோளால் கண்ணீர் விட்ட தமிழ் மக்களை பூங்குன்றம் என்ற ஊரில் பிறந்த கணியன் என்ற புலவன் பார்த்தான்..

விரைவாகச் சென்று கல்லின் மீது ஒரு கவிதையைப் பொறித்தான்..

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று எழுதி, ஒன்றே உலகம் என்ற கொள்கையை உலக அரங்கில் முன் வைத்தான்..

நமக்காக நாடு என்று புறப்பட்டால் கடற்கோள் போன்ற நம்ப முடியாத நாள் வரும்போது சங்கத்தமிழ் அழிந்தது போல அழிய நேரலாமெனக் கருதி உலகத்தையே நாடாக்குங்கள் என்று உரத்துச் சொன்னான்..

ஈழத் தமிழர்கள் வன்னியில் அழகான ஓர் அரசை அமைத்து ஆட்சி செய்தபோது, அந்த நம்ப முடியாத நாள் மறுபடியும் சுனாமி வடிவில் வந்து பேரழிவை உருவாக்கியது.. விடுதலைப் புலிகளின் உடைமைகளை எல்லாம் அது சூறையாடியது..

சங்கம் வளர்த்த தமிழ் அறிஞர்கள் சந்தித்த அதே அவலத்தை தமிழ் இனம் மறுபடியும் சந்தித்து, அமிழ்ந்த இனம் என்ற தனது பெயரை மீண்டும் நிலை நிறுத்திக் கொண்டது.

படிப்பகம்

www.padippakam.com



அது மட்டுமா... இதுதான் தருணம்... சுனாமி அடித்த வயிற்றில் இலகுவாக அடித்து வெற்றி பெறலாம் என்று பகைவன் திட்டம் தீட்டினான்.. சமாதானக் குரல்களை எல்லாம் தூக்கி வீசிவிட்டு, வலிந்த போரை நடாத்தி புதுமாத்தளனில் பகைவன் பேரவலத்தை நிகழ்த்தினான்..

அத்தருணம் பிரபாகரன், கணியன் பூங்குன்றன் சொன்ன கருத்தையே வேறொரு பாணியில் சொன்னார்.. புலம் பெயர் தமிழ் மக்களின் கையில் போராட்டத்தை ஒப்படைப்பதாக அவர் எழுதிய புதுக்கவிதை இருந்தது..

நம்ப முடியாத ஒரு நாள் வந்தால் எதுவுமே செய்ய முடியாது என்பதை உணர்ந்து அவர் அச்செய்தியைச் சொன்னார்..

ஆனால்..

இந்த இரண்டு கருத்துக்களும் உன்னதமானவைதான்... இருந்தாலும் அவற்றில் ஒரு சோகம் இருக்கிறது... நம்ப முடியாத நாள் வந்த பின்னர்தான் அக்கருத்துக்கள் வெளியாகின..

இருப்பினும் நம்ப முடியாத நாள் வர முன்னர் நாம் தயாராக வேண்டும் என்ற உண்மையும் அவற்றில் இருப்பதை மறுக்க முடியாது..

இனி வரப்போகும் நம்ப முடியாத நாள் எதுவாக இருக்கலாம்...

டென்மார்க் தலைநகரில் நடைபெற்ற உலகக் காலநிலை மாநாட்டில் அந்தச் செய்தி வெளியானது..

உலகம் வெப்பமடைந்து, துருவப்பனிக்கட்டிகள் வேக வேகமாக உருகிக் கொண்டிருக்கின்றன.. கடல் மட்டம் பெருகும் வேகத்தில் உலகில் பல நாடுகள் இல்லாமலே போகும் என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது..

மாலைதீவு, சிங்கப்பூர் போன்ற தீவு நாடுகள் எதிர்காலத்தல் இல்லாமலே போய்விடலாம் என்று கூறியது... அதே அறிக்கை சிறீலங்காவின் அரைப்பங்கு வரை கடலில் போய்விடும் என்றும் கூறியிருக்கிறது.

அந்தக் கணக்கின்படி பார்த்தால் நாம் போராடிய தமிழீழ வரைபடம் கடலில் போய்விடும் என்று அது சுட்டிக்காட்டியது.

ஏன், இப்போது நாம் வாழும் டென்மார்க்கே இருக்குமா என்பதும் கேள்விக்குறிதான்..

www.padippakam.com



இயற்கையின் பேரனர்த்தம் ஆசிய, ஆபிரிக்க நாடுகளை விட்டு கோடிக்கணக்கில் மக்களை ஐரோப்பா நோக்கிப் புலம் பெயர வைக்கும் என்றும் ஐ.நா.வின் மற்றொரு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.. அப்படியான நிலை வரும்போது நாம் தமிழீழத்தில் இருந்தே முற்றாகத் தலை தெறிக்க ஓட வேண்டிய நாள் வந்திருக்கும்.

படித்த பேரறிஞர்களும், உலகப் பெரு விஞ்ஞானிகளும் உலகம் வெப்பமடைவதைத் தடுக்கத் தவறிவிட்டார்கள்.. வளர்ந்த நாடுகள் நிகழ்த்திய மடத்தனங்களால் உலகத்தையே காப்பாற்ற முடியாத நிலை வந்திருக்கிறதே என்று அழுது கொண்டிருக்கிறார்கள்...

உண்மை இப்படியிருக்க, நாமோ புதுமாத்தளனை நினைத்து அழுது கொண்டிருக்கிறோம்..

ஆனால் ஒன்று..

எப்போதும் துன்பத்தையே எண்ணிக் கலங்கக் கூடாது. துன்பத்தை இன்பமாக்கி உயர்வடைய வழி தேடுவதே சிறந்த செயலாகும்..

யாருமே எதிர்பாராத அந்த நாள் சுனாமி போல பேரவலமாகத் தான் வரவேண்டும் என்பதில்லை.. அது இன்பமான நாளாகவும் வரலாம்..

துன்பம் துன்பம் துன்பம்

துன்பத்திற்கோர் எல்லை காணில்

இன்பம் இன்பம் இன்பம்!

என்று மகாகவி பாரதியார் பாடுவார். துன்பமான சுனாமிகளையே சந்தித்து துவண்டுபோன தமிழருக்கு இன்பமான சுனாமியாக அந்த எதிர் பாராத நாள் இனி வரலாம்.

ஆழகடலின் வான வெளியில்

பறக்குது பார் தம்பி பறவை

அடுத்த நேர உணவு இல்லை

விரிக்குது பார் தம்பி சிறகை..

திசை தெரியாத பெரும் சமுத்திரத்தின் மேலால் பறவைக் கூட்டம் பறந்து போய்க் கொண்டிருக்கிறது. குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்காத ஏகாந்தப் பெருவெளி.

www.padippakam.com



ஆனாலும் நம்பிக்கையுடன் பறக்கிறது பறவை.

பறவையின் கண்களுக்கு சுனாமி சிற்றலைதான்..

பறவையின் கண்களில் நாம் என்றுமே கண்ணீரைக் கண்டது கிடையாது.

உலகத்தில் எதுவுமே வரலாம்.. அறிவால் உயர உயரப் பறந்தால் பறவைகள் கண்களுக்குத் தெரிவதுபோல எல்லாமே சின்ன விடயம்தான்.

அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்..

இதோ இந்த அலைகள் போல ஆட வேண்டும்..

இப்பொழுது சொல்... புதுமாத்தளன் உனக்கு சோகமல்ல, அதுதான் உனக்குப் புதுவலு..

கவலைப்படாதே ஈழத்தமிழா... நம்ப முடியாத ஓர் இன்பநாள் உனக்கு வரும்..

06.05.2010 ➤

படிப்பகம்

# கதை 7/18

## சாதித்தது யார் ?

வெற்றி தோல்வியல்ல... சாதித்தது யாரென்பதே முக்கியம்..

உலகத்தில் பலர் நன்மை என்பது வெற்றியால் கிடைக்கும் என்று கருதுகிறார்கள், தோற்றுவிட்டால் எல்லாமே தொலைந்துவிடுமென அஞ்சுகிறார்கள்.

வெற்றி தோல்வி ஆகிய இரண்டும் உளவியல் நோயின் இரு பக்கங்கள் மட்டுமே. நன்மை என்ற மரம் இந்த இரண்டிற்குள்ளாலும் வளர்வதில்லை.

இரண்டாவது உலகப்போரில் மகத்தான வெற்றி பெற்றது பிரிட்டன், வரலாறு காணாத படு தோல்வியைச் சந்தித்தது ஜேர்மன்.

அதுபோல் போரில் வென்றுவிட்டோம் என்று அமெரிக்கர்கள் மார்தட்டி மகிழ்ந்தார்கள்..

ஆனால் நடந்தது என்ன..?

தாம் பெற்ற வெற்றி எதிரணியினர் அடைந்த தோல்வியைவிட மோசமான தோல்வி என்பதை அவர்கள் அறிய அதிக காலம் பிடிக்க வில்லை.

போரினால் முற்றாக அழிந்த ஜேர்மனி, மறுபடியும் முற்றாகவே தன்னைப் புதுப்பித்துக் கொண்டது.

அனைத்துக் கட்டிடங்களும் அதிநவீன முறையில் அங்கு புனரமைக்கப்பட்டன. சாலைகள் அனைத்தும் உலகத்தின் அதிசிறந்த சாலைகளாக மறுபடியும் வடிவமைக்கப்பட்டன.

www.padippakam.com



தொழிற்சாலைகள் அனைத்தும் நவீன இயந்திரங்களால் புத்தம் புதிதாக எழுந்து நின்றன.

பிரிட்டனைவிட மகத்தான வளர்ச்சி பெற்றது ஜேர்மனி. இன்றும் வெற்றி பெற்ற பிரிட்டன் மிகப்பழைய சாலைகளை இடிக்க முடியாமல் சாலை நெரிசலில் சிக்குண்டு கிடக்கிறது.

மிகப்பழைய இயந்திரங்கள், மிகப்பழைய வங்கித் தொழிற்பாடுகள் என்று காலத்திற்கு ஒவ்வாத பழமைகளில் மூழ்கிக் கிடக்கிறது. தமது தோல்வியை மறைக்க நாம் பழமை பேணுகிறோம் என்ற போலிக் கொள்கையை பிரிட்டன் பேசித்திரிகிறது.

அன்று..

மெயின்காம் என்ற புத்தகத்தை எழுதிய சர்வாதிகாரி ஹிட்லர் ஒரு சிறந்த உதாரணத்தை தனது நூலில் எழுதினான். நான் சிறுவனாக இருந்தபோது சட்டைப் பையில் பணத்தைக் கொண்டு சென்று கூடை நிறைய முட்டைகளை வாங்கி வந்தேன்.. பின்னர் கூடை நிறைய பணத்தைக் கொண்டு சென்று சட்டைப் பையில் முட்டை வாங்கினேன் என்ற எழுதினான்.

இப்படிப்பட்ட மோசமான பொருளாதார மந்த நிலையை அடியோடு மாற்ற வேண்டுமானால் உலகத்தை அடியோடு மாற்ற வேண்டுமென அவன் நினைத்தான். உலகப் போரைத் தொடங்கினான். தவறான பாதையில் சென்று தோல்வியும் கண்டான்.

ஆனால்..

போர் முடிந்த சில காலத்தில் அவன் தேடிய வளர்ச்சியை ஜேர்மனி பெற்றுக் கொண்டது..

பிரிட்டனோ.. தாம் வைத்திருந்த காலனித்துவ நாடுகளை எல்லாம் இழந்து தனித்து நின்றது.

ஜேர்மனியோ பேர்ளின் சுவரை உடைத்து 28 ஐரோப்பிய நாடுகளை இணைத்து, தனக்கெதிராக மூன்றாவது உலகப்போரை யாருமே ஆரம்பிக்க முடியாதளவிற்கு வலிமை பெற்று நின்றது.

ஆனால் பிரிட்டனோ ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒரு காலும், அமெரிக்காவில் மறுகாலும் வைத்து யாருக்குமே நண்பனில்லாமல் தனித்து நிற்கிறது..

படிப்பகம்

www.padippakam.com



மறுபுறம்..

ஜப்பானின் மீது அணுகுண்டை வீசி மாறாத களங்கத்தைச் சுமந்து கொண்டது அமெரிக்கா..

அணுகுண்டுகளே விழுந்தாலும் அசைந்துவிடாது மாபெரும் பொருளாதார வளர்ச்சி கண்டு நிற்கிறது ஜப்பான்.

இந்த இரண்டு நிகழ்வுகளையும் நாம் தினசரி சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வெற்றி பெற்ற நாடுகளைவிட தோல்வியடைந்த நாடுகளே பெரும் சிறப்பைத் தேடிக் கொண்ட உண்மை இதற்குள் இருக்கிறது.

இதைக் கேட்டதும், தோல்வியடைந்தால் சிறப்பு வந்துவிடுமென நினைத்துவிடக் கூடாது.

தோல்வி என்பதைவிட.. அழிவு ஆக்கத்தை ஏற்படுத்தும் என்பதுதான் உண்மை.

அன்று நாம் எதற்காக ஆயுதம் ஏந்தினோம்...?

தரப்படுத்தலே காரணம் என்றார்கள் இளைஞர்கள்.

இன்று உலகத்தின் எல்லாப் பெரிய பல்கலைக்கழகங்களிலும் நிறைந்து கிடக்கிறான் ஈழத் தமிழன். அவன் பார்க்காத பல்கலைக் கழகமா..

வேலை வாய்ப்பில் பாரபட்சம் என்றார்கள்..!

இன்று இலங்கைத் தீவையே விலைக்கு வாங்கக் கூடிய பொருளாதார பலத்துடன் புலம் பெயர் தமிழன் இருக்கிறான். அவனை முந்திச் செல்லும் பலத்தை பெரும்பான்மைச் சிங்கள வெகுஜனமே இழந்துவிட்டது.

சிங்களம் படிக்க மாட்டோம் என்றோம்.

இன்று உலகத்தின் எல்லா மொழிகளையும் சரளமாகப் பேசும் ஒரே இனம் ஈழத் தமிழினமே என்கிறார்கள் அறிஞர்கள்..

சுதந்திர தமிழீழ தாயகம் வேண்டுமென்றோம்..

நம்மைவிட பெரிய சுதந்திர நாட்டை அமைத்தவர்கள் உலகத்தில் யாருண்டு...?

www.padippakam.com



புதுமாத்தளனில் 30ற்கும் மேற்பட்ட உலக வல்லரசுகள் புலிகளுக்கு எதிராகப் போரிட்டன. ஒவ்வொரு சிறிய நகர்வுக்கும் இந்தியாவிடம் அனுமதி பெற சிங்கள அரசு ஓடியோடிப் போனது..

சிந்தித்துப் பாருங்கள்... சொந்த முடிவெடுக்க முடியாத சிறீலங்கா ஒரு சுதந்திரமான நாடா...?

யாருக்குமே வளைந்து போகாத தமிழர் தாயகம் சுதந்திரமான நாடா..?

துடிதுடிக்கும் உங்கள் மனச்சாட்சியை ஒரு தடவை தொட்டுப் பார்த்து இந்தக் கேள்விக்கு விடை சொல்லுங்கள்...

உலகில் தானாக முடிவெடுக்கும் சுதந்திரமுள்ள நாடென்று ஒரு நாடுகூடக் கிடையாது...

ஆனால் ஈழத் தமிழன் உலகில் யாருடைய உதவியும் இல்லாமல் வன்னி மண்ணில் உருவாக்கி வைத்திருந்ததுதான் உலகின் ஒரேயொரு சுதந்திரநாடு...

விமானம், நீர் மூழ்கிக் கப்பல் முதற்கொண்டு, ஒரு நாட்டுக்குரிய அத்தனை கட்டுமானங்களையும் அமைத்து, அதிலிருந்தும் ஒரு படி மேலேறி யாருக்கும் அடிமைப்படாத ஒரு தேசமாகவும் அதை உருவாக்கிக் காட்டியவனே பிரபாகரன்.

யாருடைய உதவியும் இன்றி, எந்தவித சர்வதேச அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் தன்மானத்துடன் முப்பதாண்டுகள் தலைநிமிர்ந்து நின்று உலகிற்கு ஓர் அரசை அமைத்துக் காட்டினான்.

எடுத்த இலக்கை எல்லாம் முப்பதே ஆண்டுகளில் எட்டித் தொட்ட ஈழத் தமிழனை எண்ணி உலகம் மூக்கில் விரலை வைக்கிறது. அப்படிப் பட்ட நீ புதுமாத்தளனுக்காகக் கலங்கலாமா...

வெற்றி தோல்விகளை விட்டெறி...

சாதித்தவன் யாரென்று கூட்டிக் கழித்துப்பார்...

அழ வேண்டியவன் நீயல்ல என்பதைப் புரிந்து கொள்வாய்...

07.05.2010

# கதை 8/18

## மரணம் விதிகளை உடைக்கும்...

விதிப்படிதான் மரணங்கள் வரும் என்று பலர் கூறுவார்கள்... ஆனால் அதே மரணங்களே விதிகளை உடைக்கும் என்பதை அவர்கள் தொடர்ந்து விளக்குவதில்லை...

இராமாயணத்தில் இராமனின் அம்பு பட்டு வீழ்கிறான் வாலி... தன் மார்பில் தைத்த அம்பை உருவிப் படிக்கிறான்... பாய்ந்திருப்பது இராமபாணம் என்பதை அறிந்து ஆச்சரியப்படுகிறான்...

தன் மரணம் விதிப்படி நடக்கவில்லை என்பதையும், அங்கு விதி உடைக்கப்பட்டு விட்டதையும் கண்டு கொள்கிறான்...

அந்த நிகழ்வை கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடும்போது... வீரமன்று, விதியன்று மெய்மையின் வாரமன்று, நின் மண்ணினுக்கு என்னுடல் பாரமன்று, பழியன்று, பண்பொழிந்து இது என் செய்தவாறு நீ... என்று அந்தப் பாடல் போகும்...

விதியன்று...! என்ற சொல்லை வாலியின் மரணத்தின்போது கம்பர் சரியாகப் பாவிப்பார்... மரணமும், வெற்றியின் வெறியும் விதியை உடைத்த இடத்தை விளக்க வாலியின் மரணத்தைவிட வேறு நல்ல உதாரணம் வேண்டியதில்லை...

இதுபோல போரின் விதிக்கு மாறாக நடாத்தப்பட்டதுதான் புதுமாத்தளன் போர்... அது விதிப்படி நடைபெறவில்லை... மரணங்களால் விதிகள் உடைக்கப்படும் என்ற உண்மையை இன்னொரு தடவை உலகிற்கு உணர்த்திய கொடும் போராகும்...

இறைவனின் கட்டுப்பாடு குலைந்துபோன இந்த அவலமான நேரத்தில் என்ன செய்யலாம்...?

www.padippakam.com



இதற்கு ஓர் உபகதை இருக்கிறது...

தாய்மாடு சிங்கத்தால் அடித்துக் கொல்லப்பட்டு மார்பு பிளந்த நிலையில் உயிரற்று இரத்த வெள்ளத்தில் கிடக்கிறது...

அதற்கு அருகில் இருந்த மரத்தில் அந்தத் தாய் பெற்ற காளை மாடு தனது கொம்புகளைப் பலமாகத் தீட்டிக் கொண்டிருக்கிறது.

அந்த வழியில் வருகிறது தாயைக் காட்டிக் கொடுத்த குள்ள நரி... 'உன் தாய் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கிறாள்... அவளுக்காக கண்ணீர் விட்டு அழாமல் உன் கொம்புகளை ஏன் தீட்டுகிறாய்?' என்று கேட்டது...

பதில் கூறாது... பாய்ந்து வந்து, காட்டிக் கொடுத்த குள்ள நரியைக் குத்திக்கிழித்த காளை மாடு, 'எனது கொம்புகள் மொட்டையாக இருந்திருந்தால் உனக்கு இந்தப் பரிசைத் தந்திருக்க முடியாது' என்று கூறுகிறது...

காளை மாடு கண்ணீர் விட்டு அழுதிருந்தால் அக்கணமே தாயைப் போல இரத்த வெள்ளத்தில் கிடந்திருக்கும்...

மரணம் சகல நீதிகளையும் உடைக்கும் என்பதை காளைமாடு கண்டு கொண்டது; விழிப்படைந்து உயிர் தப்பியது...

இக்கதையை புதுமாத்தளன் மரணங்களைப் பார்த்த ஒவ்வொரு ஈழத் தமிழனும் மனதில் வைத்திருக்க வேண்டும்...

மரணங்கள் எப்படிப்பட்ட குரோதங்களை வளர்க்கும்; அதனால் எப்படியெல்லாம் சமூக நீதி குலையும் என்பதை அறிய பாரதக்கதை யில் மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்...

பதினெட்டாம்நாள் போரின் முடிவில் துரியோதனன் கொல் லப்படுகிறான்... அவனைக் கொன்ற வீமனை ஒரு தடவை பார்க்க வேண்டுமென துரியோதனனின் தந்தையான திருதராட்டிரன் விரும்புகிறான்...

கண்தெரியாத அவன் வீமனைக் கண்டு 'மகனே...! வீமா... வந்துவிட்டாயா...?' என்று கேட்கிறான்... வீமனும் 'வந்துவிட்டேன் பெரியப்பா' என்கிறான்...

'என் மகனைக் கொன்று நீதியைக் காத்த உன்னைக் கட்டித்தழுவி ஆனந்தமடைய விரும்புகிறேன். அருகில் வா...!' என்று அழைக்கிறான்...

www.padippakam.com



அவன் நோக்கம் அறியாது அருகில் போகிறான் வீமன், கண்ணன் அவனைத் தடுத்துவிட்டு திருதராட்டிரனிடம் ஓர் இரும்புத் தூணைக் காட்டுகிறான்...

அவ்வளவுதான், இரும்புத் தூணைக் கட்டிப் பிடித்த திருதராட்டிரன் தன் பலம் கொண்ட மட்டும் அதை அழுத்துகிறான்... என் மகனைக் கொன்ற பாவி..., என்றபடி வேக வேகமாக அழுத்துகிறான்... அந்த இரும்புத் தூண் உடைந்து துண்டு துண்டாகப் பறக்கிறது... வீமன் மட்டும் அகப்பட்டிருந்தால் அவன் அக்கணமே பஸ்பமாகியிருப்பான்...

கண்ணற்ற கபோதியான திருதராட்டிரன் நிலை தடுமாறி போரின் விதியை மீறிய இடம் இதுவாகும்...

அடுத்த உதாரணம்...

தன்னுடைய தந்தையான துரோணரைக் கொன்ற பாண்டவரைப் பழிவாங்க சாகாவரம் பெற்ற அசுவத்தாமன் இறைவன் கொடுத்த வாளுடன் வருகிறான்...

அந்த உருத்திர வாள் கையில் இருந்தால் அவனை யாருமே வெல்ல முடியாது...

அவன் ஆவேசமாக வருவது தெரிந்த கண்ணன் பாண்டவர்களை ஒரு மீன்பிடிப்போர் குப்பத்தில் மறைத்துவிடுவான்... ஆனால் அசுவத்தா மனோ... பாண்டவர்களின் வம்சத்தையே வாழ விடமாட்டேன் என்று சபதமெடுத்து, அவர்கள் குடும்பத்தில் எஞ்சியிருந்த அனைவரையுமே கொல்கிறான்... கருவிலிருந்த குழந்தைகளையும் கொன்றொழித்தான்...

போரின் வெற்றி பாண்டவருக்கு எதையும் கொடுக்கவில்லை... அவர்களுடைய வம்சத்தையே பரிநாசமாக்கியது... கருவில் இருந்த குழந்தைகளையும் அழித்து போரின் விதிகள் அனைத்தையும் மீறினான் அசுவத்தாமன்...

மூன்றாவது சம்பவம்...

இறுதியாக தர்மன் சுவர்க்கம் செல்லும் வழியில் நரகக்குழி ஒன்றில் இருந்து பெரும் அழுகுரல் கேட்கிறது...

யாரென்று எட்டிப் பார்க்கிறான்... அங்கே துரியோதனன் பாம்பு களாலும் பூச்சிகளாலும் கடிக்கப்பட்டு துடிதுடித்தபடி அலறுவது தெரிகிறது...

www.padippakam.com



'அண்ணா காப்பாற்று...' என்று கதறுகிறான்...

அவன் மீது இரக்கம் கொண்டு தன் தோளில் இருந்த அங்க வஸ்திரத்தை எடுத்து குழிக்குள் விடுகிறான் தர்மன்...

'இதைப் பற்றி ஏறி மேலே வா... தம்பி...!' என்கிறான்...

சால்வையைப் பற்றிய துரியோதனன் ஒரு கணம் யோசிக்கிறான்... தான் தப்புவதைவிட அதே குழிக்குள் தர்மனையும் இழுத்து விழுத்திவிட அவன் வஞ்சக மனம் உந்துகிறது... சடக்கென சால்வையை உன்னி இழுக்கிறான்...

தர்மன் பாதாளம் நோக்கிச் சரிகிறான்...

ஒரே நொடி கண்ணன் தர்மனைக் கட்டிப்பிடித்து அந்த ஆபத்தி லிருந்து காப்பாற்றுவான்...

போரின் குரூரமானது திருந்துவோம் என்ற எண்ணத்தை ஒருவனுக்குக் கொடுக்காது என்பது இச்சம்பவத்தால் உணர்த்தப்படும்...

மேலே சொல்லப்பட்ட ஐந்து சம்பவங்களையும் மனதில் போட்டு படித்துப் பாருங்கள்...

புதுமாத்தளன் போர் எவ்வளவு பெரிய எதிர்கால ஆபத்துகளை ஏற்படுத்தக்கூடிய போர் என்பதை உணர்ந்து கொள்வீர்கள்...

இப்படியான நேரத்தில் அரசனும் அடிதலை மாறுவான்...

அண்ணனும் தம்பியும் ஆளையாள் குழிபறிப்பார்...

யார் நல்லவன் யார் கெட்டவன் என்பதே தெரியாமல் தடுமாற நேரும்...

இதை பாரதப்போர் முடிந்த பிறகு நடைபெற்ற மேற்கண்ட மூன்று நிகழ்வுகளும் அற்புதமாக உணர்த்தும்...

புதுமாத்தளன் விதிகளை மீறிய போர்... அதன் எதிர்காலத்தை இத்தகைய கதைகள் மூலம் உணர்ந்து விழிப்படைய வேண்டும்...

அதைவிடுத்து அதற்காக அழுவோர் அதைவிட பெரும் அவலத்தில் சிக்க நேரிடும்...

கண்ணனைப் போல எச்சரிக்கை எல்லோருக்கும் அவசியம்...

09.05.2010 ➤

# கதை 9/18

## இது அழுவதற்குரிய நேரமல்ல, எழுவதற்குரிய நேரமாகும்...

நமது நாட்டில் சில ஊர்களில் புதுமாற்று கட்டுவது என்றொரு வழமை இருக்கிறது. புதுமாத்தளன் என்ற சொல்லின் ஓசை இந்த புது மாற்று கட்டுவது என்ற சொல்லின் ஓசையோடு இணைந்து நிற்கிறது.

எங்கு இறப்பு நடந்தாலும் இழவு காப்பதற்காக வயதான பெண்கள் போவார்கள். இவர்கள் இழவு வீட்டில் இரவு நேரத்தில் படுத்திருந்து கண்ணீர் விடும் இதயங்களுக்கு ஆறுதல் தருவார்கள்.

தமது அயலவரை இறப்பின் சோகத்தில் இருந்து விடுவிப்பதற்காக இவ்வாறு அங்கு சென்று ஆறுதல் கூறி, கவலைகளை பழைய துணியைக் களைவது போல களையச் செய்வார்கள்.

அப்படிக் கவலையை ஆற்றவும், தேற்றவும் செல்லும் பெண்கள் மறுநாள் அதிகாலை தாங்கள் உடுத்தியிருந்த பழைய உடுப்பைக் களைந்து சலவைத் தொழிலாளியிடம் கொடுத்துவிட்டு, நன்கு சலவை செய்யப்பட்ட புடவையை அணிந்து வீடு செல்வார்கள். இதை புதுமாற்று என்பார்கள்.

இப்படி பல நாட்களாக பெண்கள் வருவதும், அழுவதும் ஆறுதல் சொல்வதும், மாற்றுக்கட்டுவதும் தொடர்ந்து நடைபெறும். புதுமாற்றுக் கட்டும்போதே பழைய துயரங்களை எல்லாம் மறந்து புத்துணர்வு பெற்றுவிடலாமென்ற செய்தியும் கூடவே பரிமாறப்படும்.

அழுக்கான ஆடைகளை தினசரி சலவைக்காகக் கொடுத்துவிட்டு, அதேபோல தோய்த்து உலர்ந்த புதிய மாற்றுக்களைக் கட்டுவதால் கவலைகள் கழிந்து போகின்றன என்ற உளவியல் கருத்தை நமது மக்கள் புதுமாற்று மூலம் கச்சிதமாக அறிமுகம் செய்தார்கள்.

www.padippakam.com



புதுமாத்தளன் சோகங்களையும் நாம் புதுமாற்று கட்டுவதுபோல படிப்படியாக மனதில் இருந்து அகற்றி புதுவலு பெறவேண்டும். எல்லோரும் கவலைகளை மறந்து புதுமாற்று கட்டுங்கள் என்ற தகவலே புதுமாத்தளன் என்ற பெயரிலும் கலந்திருப்பதாகக் கருத வேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லி, பழைய சோகங்களை அழுக்குற்ற அடைகள் போல அகற்றி, தினசரி புதுவலு பெற வேண்டும். ஏனென்றால் இறந்த மக்களை மறுபடியும் உயிருடன் மீட்க முடியாது. அந்த அவலத்தை பழைய துணி போல களைந்து நமது உள்ளத்திற்கு புத்துணர்வுகளால் புதுமாற்று கட்ட வேண்டும்.

அப்படி நமது உள்ளங்கள் புத்தாடை கட்டி வராவிட்டால் போரின்போது சந்தித்த அவலத்தைவிட பேரவலத்தை போருக்குப் பிற்பட்ட இந்த வாழ்வில் சந்திக்க நேரிடும்.

போர் கொடியது என்றால் போரைவிடக் கொடியது போருக்குப் பிற் பட்ட காலமாகும். போரின் பின்னர்தான் உண்மையான அவலம் சமுதாயத்தை சூறையாடத் தொடங்கும்..

வெள்ளப்பெருக்கு வந்த பின்னர் வயிற்றோட்டம், வாந்தி போன்ற நோய்கள் பரவுவதைப் போல, போர் வந்த பின்னர்தான் பேரழிவு தனது கரங்களை விரித்துத் தாண்டவமாடும். அதை அறிவால் உணர்ந்து மக்கள் விழிப்படைய வேண்டும்.

அன்று...

சங்ககாலத்தில் நடைபெற்ற எண்ணற்ற போர்களால் ஒரு சீரழிந்த தமிழ்ச் சமுதாயம் உருவானது. ஒழுக்கம் பெரு வீழ்ச்சி கண்டது... சங்கத் தமிழ் அதன் பின்னர் ஆரியக் கலாச்சாரத்திடம் வீழ்ந்தது. அன்று வீழ்ந்தது வீழ்ந்ததுதான் இன்றுவரை அது மீண்டெழவே இல்லை.

ஆகவேதான்...

போரைவிட பெரும் திறமை போருக்குப் பிற்பட்ட வாழ்வை செம்மை செய்ய தேவைப்படுகிறது என்கிறார்கள் அறிஞர்கள்...

பேரறிஞரான திருவள்ளுவர், பெருந்துறவியான இளங்கோவடிகள், பெரும் பக்தரான காரைக்கால் அம்மையார் போன்றவர்கள் எல்லாம் போருக்குப் பிற்பட்ட தமிழ் இனத்தைக் காப்பாற்றப் போராடினார்கள்... திருக்குறள், ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழவேண்டுமென வலி யுறுத்திய கண்ணகி கதை போன்றவற்றை எல்லாம் எழுதினார்கள்...

www.padippakam.com



இவைகளை நாமும் நன்கு விளங்கிக்கொண்டு, இறந்தவர்களை எண்ணி அழுவதா, இல்லை பாதிக்கப்பட்டவர்களைக் காக்க எழுவதா என்று சிந்திக்க முன்வர வேண்டும்.

மட்டக்களப்பில் குறுங்காலத்தில் 25,000 இளவயதுப் பெண்கள் கணவனை இழந்து, விதவைகளாக வலம் வருவதாக அண்மைய தகவல்கள் கூறுகின்றன..

அதுபோல யாழ்ப்பாணம், வன்னி, மன்னார் என்று நம் தமிழ் மண்ணே பல இலட்சம் விதவைகளால் நிறைந்து போயுள்ளது.

தாலி கட்டிய பெண்களைவிட, தாலி அறுத்த பெண்களே அதிகமுள்ள இனமாக நம் இனம் தடுமாறி நிற்கிறது.

கணவனை இழந்து வாடும் கைமைத்துயர் போல ஒரு துயர் உலகில் இருக்க முடியுமா..

ஐரோப்பிய நாடென்றால் ஒரு பெண் மறுமணம் புரிய வழியிருக்கிறது, ஆனால் இறுக்கமான கிடுகுவேலித் தமிழ்ச் சமுதாயத்தில் அது அவ்வளவு சாத்தியமான விடயமல்ல... இந்த இக்கட்டான சமுதாயத்தில் விதவைகளான பெண்களின் மறுமணத்திற்கு நாம் என்ன செய்தோம்... தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு விதவையின் வாழ்வு இறப்பைவிட பெரிய கொடுமையல்லவா...?

இது மட்டுமா...?

பெற்றோரை இழந்த பிள்ளைகள் பெரும் சமுதாயச் சீரழிவில் சிக்குண்டு போகக்கூடிய அபாயம் இருக்கிறது.. இப்பிள்ளைகளால் வரக் கூடிய அவலம் சாதாரணமானதல்ல.. பெரும் உளவியல் பாதிப்புக் கொண்ட ஒரு தலைமுறை உருவாகக்கூடிய அபாயம் தூரத்தே தெரிகிறது.

போரினால் கை, கால்களை இழந்து அங்கவீனமானவர்களுக்கு உரிய வாழ்வை அமைக்க யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை..

சமீபத்தில் வன்னியில் நின்று போராடி இப்போது வீடு வந்துள்ள சிலர் தாம் யாழ்ப்பாணம் வந்து, உயிருடன் இருப்பதைவிட வன்னியிலேயே இறந்திருக்கலாம் என்று கண்ணீர் விட்டுக் கதறினார்கள்.

காரணம்...

அவர்களுடன் பழக அங்கிருக்கும் மக்கள் பயப்படுகிறார்கள். இதனால் புதியதோர் தீண்டாமை அங்கு உருவாகியிருக்கிறதாகச் சொன்னார்கள்.

www.padippakam.com



நாடு காக்கப் போராடியவன் தீண்டத்தகாதவனாக நிற்க வேண்டிய அவலம் உருவாகியுள்ளதை யாராவது எண்ணிப் பார்த்தீர்களா?

இதைத்தவிர இராணுவத்திடம் ஊதியம் பெற்று ஏராளம் தமிழ்ச் சிறார்கள் உளவாளியாக நடமாடுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் இப்போது சாதாரண குடும்பச் சண்டைகளுக்கும் துப்பாக்கியை நீட்டுகிறார்கள் என்கிறார்கள்,

பிரபாகரன் வாழ்ந்த வீடே நள்ளிரவில் முகமூடி போட்டவர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணத்தில் சிங்களக் கடைகள் வகை தொகையின்றி முளைக்க ஆரம்பித்துவிட்டன.

பத்துவயது, பதினொரு வயதுச் சிறுமிகளைக் கடத்தினார்கள், இப்போது அதைக் காரணம் காட்டி மறுபடியும் வீதிச் சோதனைச் சாவடிகளை இராணுவம் அமைத்துவிட்டது.

அத்துடன் முடிந்ததா...?

தமிழ் மக்களுடைய இதுவரை காலப் போராட்டத்திற்கு என்னதான் தீர்வு... எதுவுமே இல்லை. அங்கு இனப்பிரச்சனையே கிடையாது என்றளவிற்கு விவகாரம் வந்து நிற்கிறது.

இப்பொழுது சொல்லுங்கள், புதுமாத்தளன் வரை நடைபெற்றது பிரச்சனையா, இல்லை புதுமாத்தளனுக்குப் பின் நடைபெறுவதுதான் பிரச்சனையா?

நீங்கள் புதுமாத்தளனுக்காக அழுதால் அதற்குப் பின் வந்த சம்பவங்களுக்காக என்ன செய்யப் போகிறீர்கள்?

ஒவ்வொரு புலம் பெயர் தமிழரும் புதுமாத்தளன் போர் தமக்கு சிறிய பொறுப்பல்ல, பாரிய பொறுப்பைத் தந்துவிட்டுப் போயுள்ளதை உணர வேண்டும்.

இந்த நேரம் பொறுப்புள்ள யாருமே அழக்கூடாது.

கவலைகளை பழைய துணி போலக் கழற்றி வீசிவிட்டு, புதுமாற்று கட்டிக் கொண்டு வீறாப்பாக எழ வேண்டும்.

அழுவதற்கு எம்மிடம் நேரமில்லை. அனைவரும் கைகோர்த்து நம்பிக்கையுடன் எழுவதற்குரிய நேரம் இதுவாகும்.

10.05.2010

# கதை 10/18

## புதுமாத்தளன் என்ற டைட்டானிக்...

**வா**ழ்க்கை ஒரு போர்க்களம்.. களமிறங்கிவிட்டால் எதிர்பாராத கோணங்களில் இருந்தெல்லாம் எதிர்ப்புக் கணைகள் சீறிப்பாய்ந்து வரும்..

அந்தப் பெரும் போர்க்களத்தை ஒரேயொரு அம்பை மட்டும் வைத்துக் கொண்டு எதிர் கொள்ளக் கூடாது.

பாரதக்கதையில் நாகாஸ்திரத்தை ஒரேயொரு தடவை மட்டுமே எய்வேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டு, அதையே நம்பி போர்க்களம் வருகிறான் கர்ணன். அவனுடைய இலக்கு குறி தவறிவிட போரின் வெற்றி திசை மாறுகிறது. கர்ணன் தேர்க்காலில் சிக்குண்டு மரணிக் கிறான்.

ஒரேயொரு தடவை மட்டும் எய்யும், ஒரேயொரு அஸ்திரத்தை நம்பி ஒரு காலமும் போர்க்களம் போய்விடாதே என்பதுதான் கர்ணனின் மரணம் சொல்லும் செய்தி..

அதுபோல..

வாழ்க்கை ஓர் ஆழ்கடல் பயணம்..

ஒரேயொரு படகை நம்பி ஒரேயொரு வழியில் அந்தப் பயணத்தை மேற்கொள்ளக் கூடாது. அன்று.. டைட்டானிக் என்ற பிரமாண்டமான கப்பல் பனிப்பாறையில் மோதி தாழ்ந்தது உலகறிந்த கதை. ஆபத்து வந்தால் பயணிகள் எல்லோரையும் ஏற்றிச் செல்லக்கூடிய தற்பாது காப்புப் படகுகள் அங்கு போதிய அளவு இருக்கவில்லை.

www.padippakam.com



டைட்டானிக் பெரிய கப்பல்தானே; அது ஒரு காலமும் உடையாது என்ற நம்பிக்கையுடன் பயணித்த மடமைச் செயலை எண்ணி வருந்திய கப்பல் தலைவன் கடைசியில் டைட்டானிக்கோடு சேர்ந்து தானும் மூழ்கி உயிரை மாய்த்துக் கொள்கிறான்.

புதுமாத்தளன் நிலப்பரப்பை மீண்டும் ஒரு தடவை டைட்டானிக் கப்பலுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.. அதுவும் டைட்டானிக் கப்பல் போலவே காட்சி தரும்..

டைட்டானிக் கப்பல் நீரில் அமிழ்ந்தபோது நடைபெற்ற நிகழ்வுகளை ஜேம்ஸ் கமரோன் அழகிய திரைப்படமாகத் தயாரித்து ஆஸ்கார் பரிசும் பெற்றிருந்தார். அந்தத் திரைப்படத்தில் வரும் கடைசிக் காட்சிக்கும், புது மாத்தளன் கடைசிக் காட்சிக்கும் இடையே நிகழ்வுகளில் பெரிய ஒற்றுமை இருக்கிறது.

ஆனால்,

டைட்டானிக் என்ற கப்பலும், கப்பல் வடிவான புதுமாத்தளன் நிலப்பகுதியும் அழிவின்போது சந்தித்த தாக்கங்களில் ஒரு வேறுபாடும் இருக்கிறது.

டைட்டானிக்கில் இருந்து தப்பியவர்களை சுற்றிவர நின்று யாரும் சுட்டுக் கொன்று கடலில் தள்ளவில்லை. ஆனால் புதுமாத்தளனில் இருந்து தப்பிய படகுகள் எல்லாம் மூழ்கடிக்கப்பட்டன, ஓடியவர்கள் எல்லாம் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்.

டைட்டானிக் கப்பல் தாழ்ந்த செய்தி தெரிந்திருந்தால் உலக நாடுகள் ஓடிச் சென்று காப்பாற்றியிருக்கும்.

ஆனால் புதுமாத்தளன் என்ற கப்பல் தாண்டு போகும் செய்தி அவர்களுக்குத் தெரியும், ஆனால் அவர்கள் தாழவேண்டும் என்று மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். இதுதான் வேறுபாடு.. மௌனித்து நின்ற உலகத்தால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல் என்ற வஞ்சப் பதிவை புதுமாத்தளன் பெற்றுக் கொண்டது.

இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, எதிர்காலத்திற்காக புதிய திட்டங்களை நாம் வகுக்க வேண்டும்.

www.padippakam.com



எப்படி....?

தமிழீழம் என்ற ஒற்றைக் கப்பல் புதுமாத்தளனில் மூழ்கடிக்கப் பட்டது...

தப்பியேற நம்மிடம் புதிய கப்பல் எதுவும் இல்லை..

புலிகள் என்ற விடுதலை ஆயுதம் அங்கு மௌனிக்க வைக்கப்பட்டது..

வேறு போராட்ட ஆயுதம் நம் கையில் இல்லை..

இந்த நிலையில் நாம் என்ன செய்யலாம்...?

நடந்த தவறுகளை மதிப்பீடு செய்ய ஒரு குழுவை அமைக்க வேண்டும்.. அது தன்னுடைய பணியைத் தொடர வேண்டும்...

இதுவரை உலக அறிஞர் மட்டத்திலான தோல்வி மதிப்பீட்டு ஆய்வுக்குழுவை நாம் நியமிக்கவில்லை. அப்படியொரு குழுவின் ஆய்வறிக்கை இருந்தால்தான் நாம் அடுத்த கட்டத்திற்குப் போவதற்கான புதிய வழிகாட்டி நூல் வரும்...

அதைக்கூடச் செய்யாமல் அழுதால் நம்மை யார் மதிப்பார்கள்?

அந்த மதிப்பீட்டை வைத்துத்தான் நாம் அடுத்த கட்டத்திற்குள் போயிருக்க வேண்டும்..

மக்கள் விரக்தியிலும், கண்ணீரிலும் கிடக்க பல சம்பவங்கள் நடந்துவிட்டன..

இருந்தாலும் நாம் இப்போதாவது சில உண்மைகளை உணர்ந்தாக வேண்டும்..

ஒன்று..

நமது இலக்கை அடைவதற்காக பல அறிவியல் ஆயுதங்களை உருவாக்க வேண்டும், அதேபோல பயணிக்க பல கப்பல்களையும் வடிவமைக்க வேண்டும்.

ஓர் ஆயுதம் உடைந்து போனால் பணி நின்று போகாமல் தொடர் வதற்கு கையில் இன்னொரு ஆயுதம் அவசியம், அதுவும் முறிந்து விட்டால் அதற்கு அடுத்த ஆயுதம் அவசியம்..

www.padippakam.com



அதுபோல ஒரு கப்பல் மூழ்கிவிட்டால் அதுபற்றி அலட்டிக் கொள்ளா மல் அடுத்த கப்பலில் ஏறக்கூடியவாறு நம்மைச் சுற்றி பல நூறு புதிய கப்பல்களை உருவாக்கி ஓடவிட வேண்டும். எத்தனை கப்பல்கள் தாழ்ந்து போனாலும் காரியமில்லை, நமது வெற்றிகரமான பயணம் தொடரும் என்ற நம்பிக்கையை உருவாக்க வேண்டும்.

தமிழர்களால் உருவாக்கப்படும் அனைத்துக் கப்பல்களையும் அவைபாட்டில் ஓட அனுமதியுங்கள்..

மேலும் என்னென்ன புதிய கப்பல்கள் வருமோ அவையெல்லாம் வரட்டும், எல்லாத் தமிழ்க் கப்பல்களும் ஓடிச்செல்ல அரசியல் என்ற சமுத்திரத்தில் போதிய இடம் இருக்கிறது..

நமது கப்பல் மட்டுமே ஓட வேண்டுமென நினைக்கக் கூடாது, நினைத்தால், சந்தேகமே வேண்டாம், மறுபடியும் புதுமாத்தளன்தான் நமக்குப் பரிசாகக் கிடைக்கும்.

ஒவ்வொரு தமிழனும் தனது அறிவுக்கு எட்டியபடி கப்பல்களை உருவாக்கி பயணங்களை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை ஒன்றுடன் ஒன்று மோதி அழிவடைவதல்ல நமது நோக்கம் என்ற தெளிவு அனைவருக்கும் வரவேண்டும்.

தமிழர்களை ஒற்றுமைப்படாத இனமாக கடவுள் படைத்துவிட்டானே என்று எண்ணிக் கண்ணீர் விடாதீர்கள்..

சேர்ந்து நின்று வெல்ல ஆரியனையும், பிரிந்து நின்று வாழ திராவிடனையும் இறைவன் படைத்துள்ளான் என்று எண்ணுங்கள்..

தமிழன் ஒற்றுமையாக வேண்டியதில்லை என்பது இறைவனின் விருப்பமே..

தமிழுக்குப் பின் தோன்றிய எத்தனையோ இனங்கள், மொழிகள் எல்லாம் ஒற்றுமையாக இருந்தும் அழிந்து விட்டன, ஆனால் ஒற்றுமை இல்லாத தமிழ் மட்டும் எப்படி இத்தனை காலமாக அழிவடையாது வாழ்கிறது? இன்று ஆங்கிலத்தைப் போல இணையத்தையே தமிழ் எப்படி வெற்றி கொண்டது என்றும் எண்ணிப்பாருங்கள்..

ஆம்...

படிப்பகம்

www.padippakam.com



பிரிந்து நின்று அவரவர் தகுதிக்கு ஏற்ப தனித்தனிக் கப்பல்களை உருவாக்கும் ஆற்றலாளரையே இறைவன் தமிழராகப் படைத்துள்ளான்.

இல்லாவிட்டால் தமிழரை இப்படி நாடு நாடாகப் பிரிய வைக்க இறைவன் துணிந்திருக்க மாட்டான் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்..

தமிழர் பிரச்சனையைத் தீர்க்க ஏற்ற கப்பல்களை ஒவ்வொரு புலம் பெயர் நாட்டின் சூழலுக்கும் அமைவாக உருவாக்குங்கள்.. இதுதான் நீங்கள் புலம் பெயர்ந்த காரணம் என்பதை உணருங்கள்..

டேனிஸ்காரரும், பிரான்சியரும், ஆங்கிலேயரும், அமெரிக்கரும் நமது பிரச்சனையைத் தீர்க்க நம்மோடு இணைந்து புறப்பட்டால் அதை மற்றவரால் மூழ்கடிக்கத்தான் முடியுமா?

பிரிந்து பல திசைகளில் நகரும் கப்பல்களை எதிரியால் அழிக்க முடியாது என்பதே தமிழர் வாழ்வின் வெற்றிக்கான இரகசியமாகும்..

இந்த உண்மையைப் புரிந்து கொண்டு..

கண்களைத் துடைத்துக்கொண்டு, உங்கள் நாட்டிலும் ஒரு புதிய கப்பலைச் செய்ய ஏராவை ஓடுங்கள்..

செய்துவிட்டுப் பாருங்கள்..

பகைவனே உங்கள் வெற்றிச் செய்தியைச் சொல்ல வீடுதேடி வருவதைக் காண்பீர்கள்..

11.05.1010 ➢

# கதை 11/18

## விழி மூடாத வீரர் இறப்பிலும் பெறுவர் வெற்றி...

**வி**ல்லுக்கு விஜயன் என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட மகா மேதையான அர்ச்சுனனையே வெல்லுமளவிற்கு வில்வித்தையில் வல்லவனாக வருகிறான் ஏகலைவன் என்ற வேடன்.

மண்ணால் துரோணரின் சிலையைச் செய்து, அதையே குருவாக ஏற்று பக்தியுடன் சகல வித்தைகளையும் அவன் கற்றுக் கொண்டான்.

குருவாகிய துரோணர் வித்தையைக் கற்றுக் கொடுக்காவிட்டாலும், அவரே நேரில் வந்து கட்டை விரலைத் தானமாகத் தரும்படி கேட்டதும், அதை அரிந்து கொடுத்தான் வேடனான ஏகலைவன்.

குருவின் மீதான மதிப்பிற்கும் பக்திக்கும் மேல், வித்தையோ வெற்றியோ பெரிதல்ல என்பதை உலகிற்கு உணர்த்திய உன்னதத்தின் உன்னதமான பண்பின் சிகரமே அந்தப் படிப்பறியா வேடன்.

அதுபோல அவன் குருவான துரோணர் தன் மகன் அசுவத்தாமன் மீது ஈடு இணையில்லாத பாசம் கொண்டவர். அவரைக் கொல் வதற்காக அசுவத்தாமன் என்ற குதிரை இறக்க, அதை மாறி அவர் மகன் அசுவத்தாமன் இறந்தான் என்று பொய் சொல்கிறான் தர்மன். சத்தியம் தவறாத அவன் சொன்னால் அது சரியாக இருக்குமென நம்பி வில்லையும். அம்பையும் வீசிவிட்டு போர்க்களத்திலேயே நிஷ்டையில் இருக்கிறார் துரோணர். எதிரிகூட போரில் பொய் சொல்வது மரபல்ல என்ற நெறிமுறையைப் போற்றி தன் தலையையே இழந்தார்.

போர் என்பது வெற்றி பெறுவதற்காக நடாத்தப்படுவதல்ல என்ற உண்மையை விளங்க இவைகளைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்..

www.padippakam.com



ஏகலைவனும், அவனுடைய குருவாகிய துரோணரும் வெற்றிபெற வாய்ப்பிருந்தும், போரின் ஒழுக்க நெறிமுறையைக் கடைப்பிடித்து தோல்வியடைந்தார்கள். அவர்களுடைய தோல்வியில் போர்க்களம் பெருமைப்பட்டது.

களத்தில் நிற்கும் ஒவ்வொரு வீரனும் தனது வெற்றிக்காக எதையும் செய்யலாம் என்று கருதவே கூடாது. நாம் நடத்தும் போரினால் யாருக்கு பெருமை என்றே கருத வேண்டும்.

தமது போரினால் போர்க்களம் பெருமை பெறவேண்டுமென்று வாழ்ந்த வீரர்களே உலகப் புகழ் பெற்ற பண்பாளர்களாக விளங்கினார்கள்.

இதைத் தெரியாத ஒருவன் கையில் ஆயுதத்தைக் கொடுப்பது அன்றைய போர் மரபல்ல..

சங்கப்பாடலில் போர்க்களத்தின் பெருமை காத்த இளைஞன் ஒருவன் வருகிறான். களத்தில் நிற்கும் அவனுடைய மார்பை நோக்கி எங்கிருந்தோ ஓர் ஈட்டி பாய்ந்தபடி வருகிறது. தடுக்க முடியாதளவிற்கு அது அவனை நெருங்கிவிட்டது. அந்தக் கணத்திற்குள் கணமான அற்பப் பொழுதில் அவன் ஆழமாகச் சிந்திக்கிறான்...

தனக்கு வரக்கூடிய அவமானத்தை இப்படியெல்லாம் பட்டிய லிடுகிறான்..

நான் இறப்பது உறுதியாகிவிட்டது, ஆனால் கண் இமைகளை மூடிய படி இறந்து கிடந்தால் அது என்னைப் பெற்றவளுக்கு அவமானம்..

உயிருக்குப் பயந்து கண்களை மூடினால் நான் பிறந்த தமிழ் மானத்திற்கு அவமானம்..

எல்லாவற்றிலும் மேலாக மரணபயத்தால் கண்களை மூடினால் பிறந்த பிறப்பிற்கே அவமானம்..

அதைவிட முக்கியம் நான் நிற்கும் போர்க்களம்.. கண்களை மூடிய படி நான் இறந்தால் நான் நிற்கும் போர்க்களத்திற்கே அவமானம்..

பயந்து கண்ணை மூடுவதால் வரக்கூடிய அவமானம் ஒன்றா இரண்டா, ஓராயிரம் என்பதை ஒரே நொடியில் உணர்கிறான்.. கண்களை மூடாமலே அந்த ஈட்டியை மார்பில் ஏந்தி களத்தில் விழுகிறான்.

www.padippakam.com



விழித்தபடி வீரமரணமடைந்த அவனுடைய உடலைப் பார்த்தவர்கள் அனைவரும், வென்றவனை விட பெரும் புகழ் இவனுக்கே என்று போற்றி, அவன் வீர உடலத்தில் வாகை மாலையைச் சாற்றி, அவன் விழுந்த மண்ணை கண்களில் ஒற்றி முத்தமிடுகிறார்கள்..

அன்றைய போரில் மரணத்தால் வெற்றி பெற்றான் அந்த வீரத் தமிழ் இளைஞன்.

அவன் விழுந்த விழுகையை 2000 வருடங்களாக உலக மாந்தரால் அழிக்க முடியவில்லை. அன்று அவன் மீது ஈட்டியை எறிந்தவன் யாரென்று தெரியவில்லை, அதனால் அவன் என்னதான் பெற்றான் என்பதும் தெரியவில்லை. ஆனால் விழி மூடாத இந்த வீரனோ போர்க்கள மானத்தைக் காத்த வீரனாகி, யாருமே பெற முடியாத வெற்றியைப் பெற்றான்..

இதுபோல அன்று...

புதுமாத்தளனில் இறந்து கிடந்த எத்தனையோ புலி வீரர்களின் உடலங்களை நீங்கள் இணையத்தில் பார்த்திருப்பீர்கள்..

பலருடைய தலைகளில் பாய்ந்த குண்டு மிக அருகில் வைத்து சுடப்பட்டிருப்பதையும் பார்த்திருப்பீர்கள்... ஆனால் இவ்வளவு அருகில் வைத்து சுடப்பட்ட போதும் இந்த வீரர்களின் கண்கள் குவளை மலர்கள் போல திறந்தபடியே இருக்கின்றனவே ஏன்..?

இவர்கள் சங்கப்பாடலில் வரும் வீரன் புகழை அறிந்தா இப்படி விழித்திருந்தார்கள்..? அன்று வீழ்ந்த அந்தத் சங்கத் தமிழ் இளைஞனின் வீரத்தை இன்று வீழ்ந்த இந்தப் புலி வீரர்கள் கண்களில் காண்கிறோம்.

என்னே ஒற்றுமை.. பார்க்கப் பார்க்க ஆன்றவிந்த தமிழ் மனம் பெருமையால் இறும்பூதடைகிறது..

தாம் நின்ற போர்க்களத்தின் பெருமையைக் குலைய விடாமல் மரணத்தைத் தேடியிருக்கிறார்கள் இந்தப் புலி வீரர்கள்..

ஆயிரம் ஆண்டுகள் போகட்டும், இந்த வீரர்களின் களப் பெருமையை யாரால் அழிக்க முடியும்?

www.padippakam.com



போருக்கு ஒரு நெறிமுறை இருக்கிறது. சிறீலங்கா அரசு புது மாத்தளனில் நடாத்தியதைப் போன்ற தர்மநெறி முறைகள் குலைந்த ஒரு போரை இந்தியா நடத்தப் போவதில்லை என்று ப.சிதம்பரம் என்ற இந்திய உள்துறை அமைச்சர் சற்று முன் கூறியுள்ளார்.

நடாத்தப்பட்டது நெறிமுறை குன்றிய மோசமான போர் என்பதை சிறீலங்கா அரசின் உற்ற நண்பர் ஒருவரே கூறியிருப்பது வரலாற்றில் மிக நல்ல பதிவாகும்.

ஆம்..

சிறீலங்காவின் போர் நெறிமுறைகள் பண்டைத் தமிழ் வீரத்தின் இலக்கணங்களுக்கு இணையானதல்ல. சிங்கள இராணுவம் போல நெறி முறை குன்றிய போரை நடாத்துவது வீரப்புலிகளின் வாழ்வில் கிடையாது.. அதைவிட மரணமே மேல் என்ற முடிவிற்கே அவர்கள் வருவார்கள்..

இதோ ஓர் உதாரணம்..

சிங்கள மன்னனும் தன் தந்தையுமான தாதுசேனனை பதவிக்காக கற்சுவரில் வைத்து கட்டிக் கொல்கிறான் அவன் பெற்ற மகனான காசியப்பன்.

அப்போது கடைசிக் கல்லை வைத்து அவன் கண்களை மூடுகிறார்கள் சுற்றி நின்ற சிங்களப் படையினர். அந்தக் கணம், 'மகனே கண்...' என்று ஓலமிடுகிறான் தாதுசேனன்.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய இடம் கண் என்று ஓலமிடும் இடமாகும். அன்று கண்ணை மூட மறுத்த சங்கத்தமிழ் வீரனுக்கும், கண்களில் மண் அடிக்கப்பட்டதால், மகனே கண்..., என்று அலறிய தாதுசேனனையும் இணைத்துப் பார்த்தால் இரு இனங்களுக்குமான போர் மரபின் வேறுபாடு புரியும்.

இத்தோடு இன்னொரு அழகிய உதாரணம்..

அன்று கற்சிலையான சிவபெருமானின் கண்ணில் இரத்தம் வடிகிறதே என்று தெரிந்ததும் தன் கண்ணையே பிடுங்கி அந்தச் சிலையில் வைத்தான் தமிழ் வேடனான கண்ணப்பன்.

சிலையான போது கண்ணுக்கு அழுதான் சிங்கள மன்னன்...

www.padippakam.com



சிலையான சிவன் அழுதபோது தன் கண்ணையே பிடுங்கிக் கொடுத்தான் தமிழ் கண்ணப்பன்.

இதுதான் சிங்களவருக்கும் தமிழருக்கும் உள்ள வேறுபாடு...

கண்ணை மூடாத, கண்ணுக்காக அஞ்சாத கண்ணான வீரர்களைப் பெற்ற நாம், மரணித்த நம் வீரரின் திறந்த கண்களைப் பார்த்துப் பூரிப்பதா... இல்லை புதுமாத்தளன் சோகமென்று கண்ணீர் விட்டுப் புலம்புவதா...

அழுது... புரண்டு... அரும் பெரும் சங்கத்தமிழ் வீரனின் புகழை அன்றைய நம் தமிழ் மக்கள் அழிக்கவில்லை...

அதே புகழ்ப் போரை நடாத்திய நம் புலி வீரர்கள் கண்களைப் பார்த்து புலம் பெயர் தமிழரான நாம் புலம்புவது சரியா...?

சிந்தித்துப் பாருங்கள்..

12.05.2010

படிப்பகம்

# கறை 12/18

## கண்ணன் மரணித்த கடைசி நாள்...

மரணம் விதிகளை உடைக்கும் என்று முன்னொரு தடவை பார்த்திருக்கிறோம், அதேபோல விதிகளை உடைத்தவர்களை மறுபடியும் விதியே உடைத்து எப்படி மரணத்தில் தள்ளும் என்பதை இப்போது பார்க்கப் போகிறோம்..

இரண்டும் இரண்டும் நாலு நாயோட முதுகில வாலு என்பது போல ஓர் எளிமையான கணக்கில் இந்த வாழ்க்கை உருவாக்கப்படவில்லை. அது மிகவும் சிக்கலான கணக்காகவே எழுதப்பட்டிருக்கிறது.

இன்பமாக இருக்கிறோம் என்று நினைக்கும்போது, மறந்துவிடாதே, மரணம் உனக்கு இருக்கிறது என்ற துன்பமான அலை மனதில் ஓடிப்போகும். அதேபோல துன்பத்தில் துவளும் வேளையில் ஏதோ ஓர் இன்பமான அலை வளைந்து வளைந்து ஓடிப்போய் ஆறுதல் தரும். இப்படி இதுவும் அதுவுமாக மாயமான் போல ஜாலம் காட்டுவதே வாழ்க்கை..

விதியை உடைத்தால் கிடைக்கும் தண்டனையில் இருந்து கடவுளும் தப்ப முடியாது என்பதற்கு ஒரு கதை இருக்கிறது, அதுவே கண்ணன் மரணித்த கடைசி நாளாகும்.

வீரமன்று விதியன்று என்று இராமாயணத்தில் வாலி கூறிய இடத்தை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். இராமன் மறைந்திருந்து வாலி மீது பாணம் எய்தபோது அவன் அப்படிக் கூறியிருந்தான்.

அன்று விதி உடைந்துவிட்டது என்று கூறிய வாலியே கண்ணன் இறக்கும் நேரம் விதியின் வடிவமாக வருகிறான். வாலியின் முன்னால்

www.padippakam.com



நின்று போரிட்டால் பாதிப்பலம் வாலிக்கே போய்விடும். ஆகவேதான் இராமபிரான் மறைந்திருந்து பாணம் விட்டார் என்று சப்பைக்கட்டு கட்டியவர்களின் கதைகளை எல்லாம் உடைத்துச் சிரிக்கிறது விதி.

இராமாயணத்தில் வரும் இராம அவதாரத்தில் செய்த குற்றத்திற்காக பாரதத்தில் வரும் கண்ணன் தண்டனையைப் பெறுகிறான்.

பாரதப்போர் முடிந்து ஒரு நாள் காட்டில் உள்ள மரம் ஒன்றில் கால்களை ஆட்டியபடியே கண்ணன் நிஷ்டையில் மூழ்கியிருக்கிறான். அவனுடைய சிவந்த தாமரை மலரை ஒத்த பாதம் ஆடுவதை இலைகளுக்கூடாக ஒரு வேடன் பார்க்கிறான்.

அந்த அடர்ந்த காட்டில், இலைகளுக்கிடையில் அப்படியொரு சலசலப்பைக் கண்டதும் வேடன் அதை பறவை என்று தப்பாக நினைக்கிறான். அவ்வளவுதான், பறவை பறக்க முன்னரே சரேலென்று அம்பை எய்கிறான்.

சீறி வந்த அம்பு கண்ணனின் பாதத்தை ஊடறுத்துப் பாய்கிறது. தனது குறி தப்பவில்லை, பறவை விழுந்துவிட்டது என்றபடி ஓடி வருகிறான் வேடன்.

ஆச்சரியம்..

அது பறவையல்ல; அழகே உருவான மனித வடிவிலான ஒரு தெய்வப்பிறவி..

'ஐயையோ.. சாமி தவறிழைத்துவிட்டேன். இதோ அந்த அம்பை இழுக்கிறேன்' என்று கதறுகிறான்..

கண்ணன் அவன் முகத்தையே கூர்ந்து பார்க்கிறான்.. அங்கே இராம அவதாரம் எடுத்தபோது கொன்ற வாலியின் முகம் நிழல்போலத் தெரிகிறது.. சிரிக்கிறான், எத்தனைபேர் எத்தனையோ காரணங்களைக் கற்பித்து அன்று இராமன் செய்தது சரி என்று வாதிட்டாலும், விதி அவற்றை எல்லாம் நிராகரித்துவிட்டு தன் கருமத்தைச் செய்துவிட்டதைக் காண்கிறான்.

'வேண்டாம்.. அம்பை இழுக்காதே.. அன்று உனக்கு நான் எய்த பாணம் இன்றுதான் திரும்பியிருக்கிறது' என்றபடி மரணிக்கிறான்.. நீல வடிவான அந்த அழகனையே கூர்ந்து பார்க்கிறான் வாலி... அவன்

www.padippakam.com



கண்களுக்குள்ளால் அன்று மறைந்திருந்து அம்பு விட்ட இராமனின் முகம் ஸ்படிகமாகத் தெரிகிறது..

இந்தக்காட்சியை ஒரு நீதியான, அதேவேளை காரணம் கூற முடியாத வாழ்க்கை விதி என்று பெரியவர்கள் கூறுவார்கள்..

இதை நீங்களும் புரிய வேண்டுமானால் இதோ சிறிய பரிசோதனை செய்து பாருங்கள்...

உங்களுக்கு யாராவது துன்பமோ அல்லது இன்பமோ நேரடியாகச் செய்தால்.. அதுபோன்ற துன்பச் செயலை முன்னர் யாருக்காவது நீங்களும் செய்திருந்தால்.. அன்று உங்களால் பாதிக்கப்பட்டவரின் முகத்தையும் இன்று உங்களுக்கு அநீதி செய்தவர் முகத்தையும் ஒப்பிட்டு நோக்குங்கள்.. இவருடைய முகத்திற்குள்ளால் உங்களுக்கு அவருடைய முகம் தெரியும்... நடப்பது ஏன்.. நடாத்துவது யார்..? என்ற உண்மையை உங்கள் உள்ளம் பளிங்குபோலக் காட்டும்..

இந்த உண்மையை விளங்குவதற்கு கண்ணனும், வேடனும் ஒருவர் முகத்தில் மற்றவர் விதியைக் கண்டனர் என்ற கதையே சாட்சியமாகும்..

இப்படி எழுதும்போது... அடடா நாம் மார்க்சியம், லெனினிசம், பெரியாரிசம் எல்லாவற்றையும் மகிழ்வுடன் பேசுகிறோமே; அப்படிப்பட்ட நாமே இப்படி விதி பற்றி எழுதலாமா என்ற கேள்வி ஓர் அலையாக ஓடிப்போவதையும் உணரலாம்..

பெரியாரிசத்தின் நடுவே இறையியலும் அதுபோல இறையிசத்தின் நடுவே பெரியாரிசமும் இழைபோல ஓடுவதை உணர்ந்து வாழ்வைப் புரிந்தவர் இறப்புகளுக்காக அழமாட்டார்கள் என்பது இந்த நாடகத்தின் ஓர் உச்சகட்டமாகும்..

இதற்கு இன்னோர் உதாரணம்..

ஒரு தடவை நான் வன்னி சென்று புலிகளின் வெளிநாட்டுப் பொறுப் பாளர் காஸ்ரோவை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.

அப்போது வல்வை முத்துமாரி அம்மனை எமது திரைப்படத்தின் ஆரம்பப் படமாகப் போட்டிருக்கும் செய்தியைப் பேசினேன்.

www.padippakam.com



அப்போது அவர் ‘அவைகளை விடுங்கள்.. தலைவர் இப்போது பெரியாரின் நூல்களையும் சிந்தனைகளையும்தான் படித்துக் கொண்டிருக்கிறார்’ என்று கூறினார்..

பழநி முருகனிடம் நேர்த்திக்கடன் வைத்து மொட்டை போட்டு, தனது பணிகளை ஆரம்பித்த பிரபாகரன் இப்போது பெரியார் நூல்களைப் படிக்கிறாரா என்று நான் குழம்பிவிடவில்லை..

ஈழத்தை அமைப்பதற்காக சமயபுரத்தில் இருந்து படகேறி வந்திருக்கும் வல்வை முத்துமாரி அம்மன், காலைச் சூரியன் வரும்போது தனது கோபுர கலசத்தின் நீண்ட நிழல் எட்டித் தொடும் ஒரு வீட்டில் இருந்து பிரபாகரன் என்ற வீரனை உருவாக்கினார் என்ற உண்மையை அவர் மறந்து விட்டாரா என்றும் கோபப்படவில்லை.

இறையியலில் ஆழமாகப் போவோர் ஒரு கட்டத்தில் பெரியாரிசத்திலும், அதுபோல பெரியாரிசத்தில் ஆழமாகப் போவோர் ஒரு கட்டத்தில் இறை யியலையும் நேசிப்பர்.. அரைகுறையான அறிவுடையோர் மட்டுமே இதுவே சிறந்தது, இல்லை அதுவே சிறந்தது என்று மோதிக் கொள்வார் கள்.. எல்லாம் சிறந்ததே என்பதுதான் மோதலற்ற முதிர்ச்சி நிலை யாகும்.. அத்தகைய உன்னத நிலையை பிரபாகரன் அடைந்துள்ளார் என்பதற்கு அவர் கையில் இருந்த பெரியார் நூலே சாட்சியமாகும்.

இனி...

இவ்வளவு சம்பவங்களுக்கும் புதுமாத்தளனுக்கும் என்னதான் தொடர்பென்று சிலர் கேட்கலாம்..

பதில்..

துன்பங்களும் இன்பங்களும் மாறி மாறி வருவதில்லை, ஒன்றுக்குள் ஒன்று கலந்து ஓடுவதுதான் பிரபஞ்ச விதி..

புதுமாத்தளனுக்குப் பின் தமிழினம் கொடுப்பதற்கு எதுவும் இல்லாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது...

எதிர்பாராத ஓர் இடத்தில் எதிர்பாராத ஒரு நேரத்தில் புதுமாத்தளன் கொடுமைகளை நிகழ்த்தியோர்.. கடைசி நேரத்தில் கண்ணன் வேடனைச் சந்தித்தது போன்ற ஆபத்தைச் சந்திக்க நேரிடும்..

www.padippakam.com



அப்போது அவர்களின் முன்னால் சில முகங்கள் தெரியும்...

வாலியை கண்ணன் பார்த்ததும், இராமனை வேடன் பார்த்ததும் போன்ற காட்சியை அவர்கள் எதிர்பார்க்காத நேரத்தில் விதி ஸ்படிகமாகக் காட்டும்..

விதியை உடைத்தவர்களை விதி உடைக்கும்..

எல்லோரையும் சிறைக்குள் தள்ளிய சரத் பொன்சேகாவை பிடரியில் அடித்து சிறையில் அடைத்த விதியை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்..

அதுபோல..

வேடனின் முகத்தில் வாலியைக் கண்ட கண்ணனின் மரணத்தை அறியுங்கள்.. கண்ணீரைத் துடையுங்கள்..

13.05.2010 ➢

## கதை 13/18

### ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் போனாலும் ஆறாத அதிர்வலை...

இத்தொடரில் இன்று பதின்மூன்றாவது அத்தியாயம் என்பதால் பாரதப்போரில் அபிமன்யு மடிந்த போர் நடைபெற்ற பதின்மூன்றாவது நாளில் இருந்து சிந்திக்க ஆரம்பிப்போம்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் மகாபாரதக் கதையை பிரபல சொற்பொழிவாளர் நல்லை ஆதீனம் மணிஐயர் நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

ஒலிபெருக்கிகள் பூட்டி ஜனத்திரள் நிறைந்த கிழக்கு வீதியில் பதினெட்டு நாட்கள் தொடர்ச்சியாக அவருடைய பிரசங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது..

தினசரி அங்கு போய் அவர் என்ன கூறுகிறார்.. எப்படிக் கூறுகிறார் என்பதைக் காதுகொடுத்துக் கேட்பேன்..

அப்போது அவருடைய பிரசங்கத்தின் பதின்மூன்றாவது நாள் வந்தது, அன்று அபிமன்யு வதம்..

கைகள், வெட்டப்பட்டு, கால்கள் தறிக்கப்பட்டு அவன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான்..

கதை கேட்ட நம் உள்ளம் உடனடியாக போர்க்களம் போகவேண்டும், அந்த வீரனைக் காப்பாற்ற வேண்டும்,, என்று துடிக்கிறது.. ஆண்டவனே

www.padippakam.com



அபிமன்யுவைக் காப்பாற்று என்ற மன ஓலங்கள் வேண்டுதலாகி வான்வெளியில் அதிர்கின்றன..

அவ்வளவுதான், மின்சாரம் நின்றுவிட்டது...

கும்மிருட்டு..

மின்சாரம்தானே... அங்கு அடிக்கடி மின்வெட்டு வருவதுதானே.. என்று எண்ணிவிடாதீர்கள்.. கணபதி மின் அமைப்பாளர்களின் இயந்திரம் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருந்தது, மின்தடை பிரசங்கத்தைக் குழப்பிடவிடக் கூடாது என்பதற்காக அப்படிச் செய்திருந்தார்கள்..

அரைமணி நேரமாக சல்லடை போட்டு காரணங்களைத் தேடினார் கள்... யாதொரு தவறும் நடைபெறவில்லை..

சரி, இன்று பிரசங்கம் நடைபெறாது என்று எல்லோரும் சிந்திக்க ஆரம்பிக்கிறோம்.. நாளைக்கு தொடரலாம் என்று கோயில் நிர்வாகிகள் கூறுவது கேட்கிறது..

அப்போது அனைவரும் அபிமன்யுவை மறந்து கவனத்தைத் திசை திருப்புகிறார்கள்..

மெல்லிய வெற்றிடம்...

தடைப்பட்ட மின்சாரம் சட்டென வருகிறது...

அப்போது மணிஐயர் என்ற மாபெரும் பிரசங்க மேதை சொன்னார்.. இது இன்று மட்டும் நடைபெறும் நிகழ்ச்சியல்ல.. பாரதக்கதை நடைபெறும்போது அபிமன்யு வதம் வரும்.. அப்போது இப்படி இனம்புரியாமல் மின்சாரம் தடைப்படுவது அல்லது ஏதோ ஒரு தடங்கல் வருவது வழமை.

இதற்குக் காரணம் என்ன..

உங்களுடைய மனம்தான் காரணம்..

உங்களில் யாருக்குமே அபிமன்யு மீது தனிப்பட்ட வெறுப்பு கிடையாது. அந்த வீரன் கொல்லப்பட்ட முறை தவறு என்பதில் உங்களுடைய மனம் உறுதியாக இருக்கிறது..

அந்த மனமொத்த கூட்டு வேண்டுதல் இறைவனான பேரருளின் காதுகளில் எதிர்ப்பின்றி ஒலிக்கிறது..

www.padippakam.com



இயற்கை உங்கள் வேண்டுதலை ஏற்றுக் கொள்கிறது..

ஒன்றிணைந்த உள்ளங்கள் ஏற்படுத்தும் அதிர்வலைக்கு அந்த மாபெரும் இயற்கை தரும் உடன் பதில்தான் இந்த மின்தடை..

இது வெறும் மினதடையல்ல.. இதுபோன்ற வஞ்சப்போரை யார் நடாத்தினாலும் முடிவில் தோல்வி வரும் என்பதை இயற்கை இப்படிச் சொல்கிறது..

எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், வஞ்சப் போரை மட்டும் செய்யாதீர்கள்.. செய்தால் என்றோ இயற்கையின் தீர்ப்பை அனுபவிக்க நேரிடும்.. இது மாற்றமில்லாத பெருவிதி..

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் போனாலும் மாறாத அதிர்வலைதான் இந்த அபிமன்யு என்று கூறிவிட்டு தனது பிரசங்கத்தைத் தொடர்ந்தார்..

அபிமன்யு மரணத்திற்கும் புதுமாத்தளனுக்கும் போரியல் ரீதியாக பெரிய ஒற்றுமை இருக்கிறது..

பதின்மூன்றாம் நாள் யுத்தம். துரோணர் தலைமையில் கௌரவப் படை பத்ம வியூகம் அமைத்து அணிவகுத்து நிற்கிறது. அபிமன்யு வியூகத்தை உடைத்து உள்ளே நுழைகிறான்.

உன் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் உன்னிடமிருக்கும் போர்ச்சங்கை ஊது.. ஒலி கேட்டதும் நான் அந்த இடத்திற்கு வந்துவிடுவேன் என்று கூறி ஒரு விசேட ஒலி கொண்ட சங்கை அர்ச்சுனன் அவனிடம் வழங்கியிருந்தான்..

எந்த வியூகமானாலும் உடைக்க தந்தை வருவார் என்ற நம்பிக்கையில் வியூகத்தைப் பற்றிய கவலை இல்லாமலே போர் புரிகிறான் அபிமன்யு..

எனினும் ஒரு கட்டத்தில்..

முற்றுமுழுதாகச் சுற்றி வளைக்கப்பட்ட நயவஞ்சக வியூகத்தில் மாட்டிக்கொண்டுவிட்டதை உணர்கிறான். உடனே தன்னிடமிருந்த சங்கை எடுத்து ஊதுகிறான்..

ஆனால் அதன் ஒலி அர்ச்சுனனுக்குக் கேட்கவில்லை..

காரணம்..

www.padippakam.com



யாருமே இல்லாத கடற்கரையோரமாக அர்ச்சுனனை அழைத்துச் சென்றுவிடுகிறான் கண்ணன்..

அபிமன்யு தாயின் வயிற்றில் இருக்கும்போதே அவனுடைய மரணம் 13ம் நாள் என்று தீர்ப்பளித்துவிட்டான் கண்ணன்.. அந்த நாள் வந்திருக்கிறது.. அதைத் தடுக்க கண்ணன் விரும்பவில்லை, அதற்குக் காரணமும் இருந்தது.

தந்தை வரவைக் காத்திருந்து ஏமாற்றமடைந்து.. களத்தில் யாருடைய உதவியும் இல்லாமல் அபிமன்யு நயவஞ்சகமாகக் கொல்லப்படுகிறான்..

புதுமாத்தளனும் இதுபோலத்தான், சர்ப்ப வியூகமாகச் சுற்றி வளைக்கப்பட்டது.. அபிமன்யு போலத்தான் அதற்குள் சிக்குண்ட நம் வீரர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள்..

அவர்களின் குரல் வியூகத்தை உடைக்கக்கூடியவர்கள் காதுகளில் விழவில்லை.. புதுமாத்தளன் சங்கொலிகளும் தூரத்து ஓசைகளாக்கப்பட்டிருந்தன..

புலம் பெயர் தமிழர்கள் வீதியில் இறங்கி போராடினார்கள்.. தீயில் எரிந்து தற்கொலை செய்தார்கள். ஆனால் கேட்க வேண்டிய உலகம் கேட்கவே இல்லை..

அன்று...

அபிமன்யுவின் சங்கொலி கேட்காதது ஏன் என்று சிந்தித்துப் பார்த்தால், ஓர் உண்மை புலப்படும். போரில் உலகம் கேட்காத பொழுதென்றும் ஒரு பொழுது வரும்.. இது அபிமன்யு மரணத்தில் இருந்த முக்கிய செய்தி.. அப்படி உலகம் கேட்காத பொழுதுதான் புதுமாத்தளனிலும் வந்தது..

போர், வியூகம், நயவஞ்சகம், மரணம் யாவுமே அபிமன்யு கதை போலவே அங்கும் அரங்கேறின..

ஏன் இப்படியொரு வஞ்சகப் போரை பரமாத்மாவாகிய கண்ணன் அனுமதித்தான்? இதுதான் இக்கதையின் முக்கிய கேள்வி.

பதினெட்டு நாட்கள் நடைபெற்ற போரில் திருப்புமுனையானதும், பாண்டவருக்கே வெற்றி என்ற இடத்திற்குள் அடுத்த ஆறு தினங்களை வெற்றிகரமாக நகர்த்தியதும் அந்த நிகழ்வுதான்.

www.padippakam.com



எதிரி மிகப்பெரிய நயவஞ்சகத்தைச் செய்தான் என்ற உறுதியான தகவல் கிடைக்கும்வரை இயற்கை, வெற்றியை யாருடைய கையிலும் இலகுவில் கொடுத்து விடாது..

நடந்தது, நடக்கப் போவதற்கு அப்பால் களத்தில் நீதி எந்தப்பக்கம், அதுபோல அதர்மம் எந்தப் பக்கம் என்பதை இயற்கை தீர்மானிக்க ஓர் இடம் அவசியம். அதை போருக்குள் நடைபெறும் நயவஞ்சகத்தால் இயற்கை தீர்மானம் பண்ணும்... காற்றாய், கடலாய், ஒலியாய் பரந்திருந்து யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் பரம்பொருள் இறுதித் தீர்ப்பை வழங்க 13ம் நாள் போரும் அபிமன்யு வதமும் அவசியம் என்பதை பரமாத்மாவாகிய கண்ணன் அறிந்தான். அதனால் அவ்விதம் செய்தான்.

யாருமே உதவி செய்யவில்லை என்பதை அறிந்த இயற்கை இரங்கி தானாக இறங்கிவந்து பாண்டவருக்கு வெற்றியைக் கொடுத்தது.

இதுபோலத்தான் 18ம் நாள் போரில் கர்ணன் வீழ்ந்துகிடக்க தர்மதேவதை ஆயுதம் எடுத்துப்போர் புரிந்தது..

அதுபோல காற்றாய், கடலாய், ஒலியாய், ஒளியாய், நெருப்பாய் இருந்து பரம்பொருள் புதுமாத்தளனைப் பார்த்தது. அங்கு புலிகள் யாருமே இல்லாது நிற்கிறார்கள் என்பதை இயற்கை கண்டது. இயற்கை என்னும் தாய் இரங்கி தன் தீர்ப்பை எழுதியிருப்பாள்.. இதில் யாருக்குமே சந்தேகம் வேண்டாம்..

புதுமாத்தளன் போரை ஐ.நா. பதிவு செய்ய முன் இயற்கை என்னும் பேராசான் பதிவு செய்துவிட்டது. எல்லோரும் குரோதங்களை மறந்து ஒரு நொடி பரம்பொருளை வணங்குங்கள்..

போரின் தடயங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. என்று கவலைப்பட வேண்டாம். தர்மத்தின் தடயங்களை யாருமே அழிக்க முடியாது..

இயற்கையை குருடனாக எண்ண வேண்டாம்..

இயற்கை என்னும் தாய் தரும் புதிய நீதி தமிழருக்குக் கிடைக்கும்...

14.05.2010 ➢

# கதை 14/18

## கோடி தமிழா உன் கோழை வாழ்வு போதும்..

கடப்பாரைக்குப் பயந்து வீடு கட்டாமல் இருக்கும் இனம் எதுவென்று ஆராய்ச்சி செய்ய ஓர் அளவுகோல் இருக்கிறது..

உலகத்தில் ஆறு கோடி மக்கள் இருந்தும் தமக்கான சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்குரிய நாடில்லாத இனமாக இருப்பது தமிழினம்தான்..

வீட்டைக் கட்டிப்பார் அதுபோல கல்யாணத்தைக் கட்டிப்பார் என்று கூறுவார்கள், அதுபோல உனக்கான நாட்டைக் கட்டிப்பார் என்று யாரும் கேட்பதில்லை. ஏனென்றால் அது அவ்வளவு இலகுவான காரியமல்ல..

வீட்டைக் கட்டுவதற்கு பணம், உபகரணங்கள், ஆளணிகள் என்று ஏகப்பட்ட விடயங்கள் தேவை. ஆனால் அதை உடைப்பதற்கு ஓர் கடப்பாரை போதும்..

அழிப்பது இலகு, ஆக்குவது மிகவும் கடினம்..

புதுமாத்தளனில் நாம் ஆக்கசக்தியாகவும், எதிரிகள் அலவாங்கு தூக்கிய அழிவு சக்தியாகவும் இருந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டியதில்லை..

அன்று..

வள்ளுவர் போன்ற பெரும் மகான்கள் தோன்றி நீ உன் கையில் கடப்பாரையை எடுக்காதே என்று போதித்தார்கள்..

www.padippakam.com



உனக்கு வீடில்லாவிட்டாலும் மற்றவன் வீடுகட்டி வாழ அனுமதிக்கும் இனமாக நீ இருக்க வேண்டும் என்று போதித்தார்கள்..

தமிழ்மொழியில் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக நல்லறிவூட்டும் அறிஞர்கள் மற்றவர் வாழ வேண்டுமென வழிவிட்டு. தாம் வறுமையில் வாழ்ந்த பெருமக்களாகவே இருந்தார்கள்.

இதற்கு ஓர் உதாரணம்..

தம்பியாக இருந்த இளங்கோவடிகள் சேரநாட்டின் அரசனாக வருவான்· என்று அவனுடைய ஜாதகம் கூறுவதாக அரண்மனைச் சோதிடர்கள் கூறினார்கள்..

அவனுடைய அண்ணனான சேரன் செங்குட்டுவனுக்கு சவாலாக வர இந்தியாவில் வேறு யாருமே கிடையாது என்று கூறினார்கள்..

அவ்வளவுதான், இளவரசர் பட்டத்தைத் துறந்து, காவிதரித்து புத்த மதத் துறவியானார் இளங்கோவடிகள்..

அண்ணனுக்குப் போட்டியாக அல்ல, அண்ணனுக்கு அடுத்ததாகவும் அரசனாகமாட்டேன் என்ற உறுதி மொழியை அவர் எடுத்தார்..

அதன் பின்னர் வட இந்தியருடன் போர் புரிந்து கனகவிஜயர் தலை யில் கல்லெடுத்துவந்து கண்ணகிக்கு கோயில் கட்டினான் அவர் அண்ணனான சேரன் செங்குட்டுவன். அவன் எடுத்த விழாவில் கடல் சூழ் இலங்கை மன்னன் கஜபாகுவும் கலந்து கொண்டான் என்று கல் வெட்டுக்கள் கூறுகின்றன.

இங்கே கோயில் கட்டியது என்ற சொல்லே முக்கியமாகும். மற்றவர் கள் நாட்டைக் கட்டவும், வீட்டைக் கட்டவும், கோயிலைக் கட்டவும் தடை போடாத இனமாக இருக்க வேண்டும் என்பதே ஆன்றவிந்த தமிழ் அறிவாக இருந்தமைக்கு இளங்கோவடிகள் ஓர் உதாரணம், இதுபோல எண்ணற்ற உதாரணங்களைக் கூறலாம்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது ஜின்னா பாகிஸ்தான் தனிநாடாக வேண்டுமென உறுதியாக நின்றார். புதிய நாடு உருவானது.

ஆனால் சோழப் பேரரசையே உருவாக்கி சாதனை படைத்த தமிழன் வட இந்தியர் நாட்டை அமைக்கட்டும், பாகிஸ்தானியர் நாட்டை

www.padippakam.com



அமைக்கட்டும், உலக யுத்தத்தின் பின்னர் இஸ்ரேல் போன்ற சில இலட்சம் மக்கள் கூட நாட்டை அமைக்கட்டும். ஆனால் கோடி கோடியாக ஜனத்தொகை கொட்டிக் கிடக்கும் தமிழனுக்கு ஒரு தனிநாடு வேண்டு மெனக் கேட்காமல் அமைதியாக இருந்தான்.

மற்றவன் வீட்டை அழிக்க அலவாங்கைத் தூக்காத இனம் என்று அகிலத்திற்கும் உரைத்தான்..

இந்தியாவை விடுங்கள்.. நமது இலங்கையில் என்ன நடந்தது..

இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட சேர். பொன். இராமநாதன் இங்கிலாந்து சென்று பேசிவிட்டு வந்தபோது, அவரை குதிரை வண்டியில் இருத்தி, குதிரைகளை அகற்றிவிட்டு தாமே இழுத்துச் சென்றார்கள் சிங்களத் தலைவர்கள். இராமநாதன் சிங்களவருடன் இணைந்து நாடற்று வாழ தமிழருக்கு வழிகாட்டி சிங்களவர் கட்டிய வீட்டில் அலவாங்கு போடாமல் அமைதி காத்தார்.

மற்றவர்கள் நலமாக வாழ நாம் தோள் கொடுப்போம் என்ற பழந்தமிழரின் பண்பார்ந்த கொள்கை நாடுள்ள இனங்களால் புரிந்து கொள்ளப்படவில்லை.

எல்லோரும் வாழ வழிவிட்ட தமிழன் நெருப்பில் எரிந்தான்..

வேறு வழியின்றி தமிழனுக்கு ஒரு நாடு வேண்டுமென்று ஈழ மண்ணில் சில இளைஞர்கள் புறப்பட்டார்கள்..

அப்போதுான் ஓர் உண்மை நமக்குப் புரிந்தது..

தாம் நாடுகாண வழிவிட்ட தமிழனுக்கு அதே உலக நாடுகள் பயங்கரவாதிப் பட்டம் கட்டின.. அதையே காரணம் காட்டி அலவாங்கு களை ஏந்தியபடி தமிழன் கட்டிய நாட்டை குத்தி அழித்தன.. கட்டப்பட்ட கட்டிடத்தின் ஈரம் காயமுன்னர் இடித்துவிடுவோமென அவசரப்பட்டு, ஈரமில்லாத இதயம் கொண்டோர் இணைந்து நின்று நம் கண் முன்னே.. இடித்தார்கள்.

வீடு கட்டியவர்கள் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கிறார்கள். கட்டிய வீடு புதுமாத்தளனில் அத்திவாரத்தோடு கிளறப்பட்டு அலங்கோலமாகக் கிடக்கிறது.

www.padippakam.com



இப்போது நாம் என்ன செய்வது.. அழுவதா?

இல்லை, ஆளையாள் துரோகிப்பட்டம் கட்டி வேரோடு அழிவதா?

மாற்று வழி இல்லாமல் மகிந்த அரசுடன் சேருவதா...?

இல்லை, நாடுகடந்த அரசை அமைப்பதா..?

இப்படிப் பல கேள்விகள் எழும்..

எல்லாக் கேள்விகளையும் ஓரமாக வைத்துவிட்டு, நாம் கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்..

தமிழ் அறிஞர்கள் சொன்னது சரியா, இல்லை தமிழ்த் தலைவர்கள் செய்தது சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம் என்று உலகநீதி சொல் லுவதை மனதில் வைத்து, நமது கொள்கைகளை இன்னொரு தடவை சீர் தூக்க வேண்டும்.

உலகத்தில் மிக மிகப் பழைய கலாச்சாரம் கொண்டது தமிழினம். அதனுடைய தத்துவங்கள் மிகச் சிறந்த தத்துவங்கள்தான். ஆனால் காலம் மாறிவிட்டது. அக்கருத்துக்கள் உலகம் மாறிய மாற்றத்திற்கு அமைவாக புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு அமைவான தமிழர் அரசியல் சமுதாய வாழ்விற்கான பொதுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

உலகளாவிய தமிழர்கள் அதுபற்றி சிந்திக்க வேண்டும். செம் மொழி மாநாடு நடாத்துவது போல தமிழர் அரசியல், சமுதாய எதிர்கால வாழ்விற்கான புதிய நெறி அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

அதற்கு அமைவாக உலகளாவிய தமிழினம் கருமங்களை முன்னெடுக்க வேண்டும். உயர் தமிழ் கருத்துக்கள் வட இந்தியரின் பிற்போக்குக் கருத்துக்களோடு கலந்து சீரழிக்கப்பட்டிருக்கும் இடங் களை முதலில் துல்லியமாக, உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

இதற்கு ஓர் உதாரணம்..

சாதிக்கொடுமை முற்றாக அழிக்கப்பட வேண்டும், அது தமிழர் கலாச்சாரமல்ல என்பதை தெளிவாக முன்வைக்க வேண்டும். சாதிக்

www.padippakam.com



கொடுமையே ஈழத்தில் முப்பதுக்கு மேற்பட்ட சாதி இயக்கங்களாகத் தோன்றி ஆளையாள் காட்டிக் கொடுத்து அழிவில் தள்ளியதை நாம் கண் முன் பார்த்துவிட்டோம்.

இது ஒரு வட இந்தியத் தவறு, இதுபோல மேலும் எழுத எண்ணற்ற உதாரணங்கள் உண்டு.

இனி...

ஈழத் தமிழர்கள் அடுத்த ஐந்து வருடங்களுக்கு நகர வேண்டிய நகர்வுகள் என்ன..?

அதற்கடுத்த பத்தாண்டுத் திட்டமென்ன...

இருபத்தியோராம் நூற்றாண்டுக்காக அவனுடைய பொதுமைத் திட்டமென்ன..?

அதை எட்டித்தொட அவன் உருவாக்க வேண்டிய கட்டுமானங்கள் எவை...?

ஆறு கோடித் தமிழரின் தலைவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அந்தத் திட்டத்தை முதலில் வரைய வேண்டும். நாம் ஆளையாள் இரகசியமாகக் கூடி, நமக்கு வேண்டியவர்களுக்கு இருட்டறையில் பதவி கொடுத்துவிட்டு ஈழப் பிரச்சனைக்கு இதுதான் தீர்வு, இதற்கு இணங் காதவன் துரோகி என்றபடி தெருவிற்கு வரக்கூடாது.

விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம் சுற்றிவிட்டுவிட்டு வீரம் பேசக்கூடாது.

அழிவிற்காக அழுதோம்.. இனி அழிவிற்குப் பின்னும் மூடர்களாக இருக்கிறார்களே என்பதற்காகவும் அழக்கூடாது..

நாம் இந்த வாழ்வை சுமப்பதற்கு என்ன அர்த்தம்?

அழுவதா..?

மற்றவருக்கு பயப்படுவதா..?

இல்லை. துரோகிப்பட்டத்திற்கு பயந்து பேடிகளாக இருப்பதா?

மானமுள்ள ஒவ்வொரு தமிழனும் தானாகச் சிந்தித்து வீதிக்கு வரவேண்டும்..

www.padippakam.com



இனிமேலாவது கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திப்பாய் தமிழ் வீரா..!

புதுமாத்தளன், சோகமல்ல, புலிபோல பாய்வதற்கான வீர வலுவை உனக்குத் தந்துள்ளதை மறந்துவிடாதே..

துரோகிப்பட்டம் என்ற அலவாங்கைத் தூக்கி நீ கட்டும் வீட்டை உடைக்க வரும் துன்மார்க்கர்களைத் தொலைத்துவிட்டு துணிந்து நில்..

அற்பர்களின் அலவாங்குகளுக்குப் பயந்து அடிமையாக வாழப்போகிறாயா..?

திருடரும், மொள்ளமாறிகளும், முடிச்சவிழ்ப்போரும் உன் முதுகில் வண்டியோட நீ கோழையாக வாழப்போகிறாயா?

புதுமாத்தளனுக்குப் பிறகும் உனக்கொரு கோழை வாழ்வு வேண்டுமா..?

வீரத்தமிழா, உன் கொள்கைகளை மாற்றி விழித்தெழு..

விடிவு உன் வீட்டு வாசலில் விழும்..

15.05.2010 ➢

படிப்பகம்

# கதை 15/18

## அறிஞரால் மீட்கப்பட்ட அழகிய டென்மார்க்

சோகத்தை ஆற்றுவது மட்டும் வாழ்க்கையாகிவிடாது, அதுபோல அந்தச் சோகங்களில் இருந்து மீண்டெழுவதற்கான வழியைச் சொல்வதால் மட்டும் அந்தச் சோகங்கள் விலகிவிடாது.

சோகங்களை விலக்கும் சிறந்த மருந்து செயற்பாடு என்று கூறுவார்கள். நாம் காலத்தையும், சூழலையும் நல்லபடியாக விளங்கிச் செயற்பட்டால் சோகங்களை வெல்லும் மருந்து அதற்குள்தான் புதைந்து கிடக்கிறது என்பதை இலகுவாகக் கண்டு கொள்ளலாம்.

இன்று நமக்கு ஏற்பட்டது போன்ற பாரிய நெருக்கடி இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் டென்மார்க்கிற்கும் ஏற்பட்டது. போரில் ஈடுபட்டு காயப்பட்டு, இளவயதிலேயே கல்வி இழந்து வாழ வழி தெரியாது துவண்டு நின்றார்கள். இவர்களை உடனடியாக சமுதாய வாழ்வில் இணைக்க முடியாதிருந்தது. ஆகவே, அவர்களை சமூகத்திற்குள் இணைவாக்கம் செய்ய புதிய சீர்திருத்தப் பாடசாலைகளை ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது.

போர் பற்றியும், எதிரிகள் பற்றியும் வெறுப்பாக மூளைச் சலவை செய்யப்பட்டு நின்ற மக்களை சரியான சலவை செய்து, சுயபுத்தியுள்ள மனிதராக மாற்ற வேண்டியிருந்தது. நம்மைப் போல துரோகிப்பட்டம் கட்டி ஒருவரை ஒருவர் வெறுக்கும் போக்கு அன்றைய டேனிஸ் சமுதாயத்திலும் இருந்தது.

போர் விதவைகளையும், ஊனமுற்றவர்களையும், மனோநிலை பாதிக்கப்பட்டவர்களையும் உருவாக்கி பிசாசு பிடித்து சதுராடுவது போன்ற

www.padippakam.com



சமுதாயத்தை உருவாக்கியிருந்தது. இன்று தமிழர் தாயகத்தில் நடை பெற்ற அத்தனை அவலங்களையும் அன்று டென்மார்க் உட்பட ஐரோப்பாவின் அனைத்து நாடுகளும் சந்தித்தன.

இந்த அவலங்களில் இருந்து விடுபடுவதற்காக அமெரிக்கா வழங்கிய மாஞ்செஸ்டர் புறொஜக்ட் என்னும் பேருதவியைப் பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. போரினால் நொந்து நூலான டென்மார்க் எப்பக்கமும் சேராமல் நடுநிலையாகவே நிற்க முதலில் முடிவு செய்தது.

ஆனால் அமெரிக்கா அதற்கு இணங்கவில்லை. நேசநாடுகளின் அணியில் இணைந்தால் மட்டுமே அந்த உதவிகளைப் பெற்று மீண்டெழ முடியும் என்ற நிபந்தனையைப் போட்டது. அப்போது மக்கள் டேனிஸ் அறிஞர்களிடம் அதற்கான முடிவெடுக்கும் அதிகாரத்தை விட்டார்கள்.

அவர்கள் முதலாவது பிரதான கொள்கையை வகுத்தார்கள். போர் ஏற்படுத்திய அச்சம் இன்னொரு போருக்குள் தள்ளும் என்ற மறு அச்சத்தை ஏற்படுத்தும். போரில் வெற்றி பெற்றவனே அதனால் பெரிதும் பாதிக்கப்படுவான். ஆனால் அவனை வெற்றிபெற தோல்வியுற்ற அணிக்கு வலு இல்லை.

இதுவே யதார்த்தம், இதை நன்கு சீர்தூக்காமல் கோபத்தினால் துப்பாக்கிகளைத் தூக்கி, சிறுசிறு தாக்குதல்களை நிகழ்த்தினால் என்ன நடக்கும்? நலிந்துவிட்ட சிறிய சமுதாயத்தை வெற்றி பெற்றவன் மேலும் சீரழித்து சிதைத்து சின்னாபின்னமாக்கி விடுவான்.

ஆகவே, ஆயுதக்கலாச்சாரத்தை அறிவினால் முடிவுக்குக் கொண்டு வருவோமென முடிவு செய்தார்கள். இனிமேல் ஆயுதம் ஏந்திய போர் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார்கள்.

அப்படி திடீரென ஆயுதம் ஏந்திய போர் இல்லை என்று கூறினால் போருக்கான மூளைச் சலவை செய்யப்பட்டோர் மத்தியில் அவர்கள் துரோகிகளாக நிற்க வேண்டிய அவலம் ஏற்படும். மிக இலகுவாக அந்த அறிஞர்களை துரோக அணிக்குள் தள்ளிவிட முடியும், காரணம் சூழல் அப்படி..

எனவே, அனைவரும் புதிய கோணத்தில் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார்கள். இனிமேல் ஐரோப்பாவில் எந்தப் · பிரச்சனை

www.padippakam.com



ஏற்பட்டாலும் அதை ஆயுதம் மூலம் தீர்ப்பதில்லை என்று புதுவிதமாக எழுதினார்கள். உதாரணமாக சுவீடனுக்கும், டென்மார்க்கிற்கும் என்ன பிரச்சனையும் ஏற்படலாம், ஆனால் அதைத் தீர்க்க ஒருவரை நோக்கி மற்றவர் ஒரு துப்பாக்கி வேட்டைக்கூட தீர்க்கக் கூடாது என்று எழுதினார்கள்.

போரில் வென்றவர்களும், தோற்றவர்களும் ஒருவரை நோக்கி மற்றவர் ஆயுதத்தைத் தூக்குவதில்லை என்ற ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதனுடைய வாசகங்கள் யாரையும் துரோகிப் பட்டத்திற்குள் தள்ள முடியாதளவிற்கு செம்மையாக எழுதப்பட்டன. இதனால் ஐரோப்பா முழுவதும் உயிரச்சம் ஒழிக்கப்பட்ட புதிய சூழல் உருவானது. மாஞ்செஸ்டர் திட்டத்தை மதிப்புடன் டென்மார்க் ஏற்றுக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. இன்று உலகின் மகிழ்ச்சியான மக்கள் வாழும் முதல் நாடு என்ற இடத்திற்கு டென்மார்க் தன்னை உயர்த்திக் கொள்ள அன்று அறிஞர்கள் எடுத்த முடிவே ஆதாரமாக அமைந்தது.

இதேபோல ஒரு கோட்பாட்டைக் கடைப்பிடித்து, சிறீலங்காவில் எந்தவொரு பிரச்சனைக்கும் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்படக் கூடாது என்ற ஒப்பந்தத்தை தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் எழுதினால் முதல் அச்சம் தீரும். இராணுவ முகாம்கள் அனைத்தையும் மக்கள் வாழிடங்களை விட்டு அகற்றும் முதல் காரியத்திற்கு அது உதவியாக அமையும் என்று பேராசிரியர் சபா. இராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எமக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பின்வரும் சிந்தனைகளை எழுப்பியுள்ளார். ஜப்பானும், ஜேர்மனியும் இரண்டாம் உலகப் போரில் தோல்வி கண்டாலும் பொருளாதாரத்தில் பெரிய வெற்றி பெற்றன என்று நாம் பேசுகிறோம். ஆனால் அந்த வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது எது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஜப்பானும், ஜேர்மனியும் மறுபடியும் இராணுவத்தை அமைப்பதில்லை என்ற உடன்படிக்கை செய்தபோதுதான் அவர்களைத் தோற்கடித்தவர்களுக்கு ஆறுதல் ஏற்பட்டது. அதன் பின்னரே அபிவிருத்திக்காக அவர்கள் வழி விட்டார்கள். அதைப் பயன்படுத்தி அன்று தம்மைச் சிதையவிடாமல் காத்துக்கொண்டு, இரு நாடுகளும் எழுந்து நின்றன என்று கூறுகிறார்.

மேலும் வெளிநாடுகளில் எமது பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு, அங்குள்ள பிள்ளைகளை மறுபடியும் போர்ச் சூழலுக்குள்

www.padippakam.com



தள்ளிவிட எத்தனிக்கும் ஆவேசங்களை நாம் அறிவுக்குள் போட்டு ஆராய வேண்டும்.

மேலும் சிங்களவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எமது போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. எமது வாழ்க்கைத் தரத்தை நாம் விரும்பியபடி உயர்த்தும் உரிமைக்காகவே போராடினோம் என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்கிறார்.

பகையுணர்வு கொண்டு துணை இராணுவக்குழுக்களும், இராணுவமும் அங்கிருப்பது தொடருமானால் இளைஞர்கள் மேலும் அங்கிருந்து வெளியேற நேரிடும். அப்படி வெளியேறினால் ஒரு தேசம் படிப்படியாக அழிவடைய அதுவே போதுமானதாக அமையும். மேலும் வெளியே சென்ற இளைஞர் திரும்பி வரக்கூடிய அமைதிச் சூழல் நாட்டில் இல்லாவிட்டால் அந்த அழிவு தொடரும். இவை மூன்றும் தற்போது தமிழர் தாயகத்தில் இருக்கின்றன.

எனவே..

முதலில் வெளிநாடுகளில் உள்ள ஊக்கமுள்ள இளைஞர்கள் தாயகத்தை மேம்படுத்தும் நோக்குடன் அங்கு பாதுகாப்பாக போய்வரக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். புதிய திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்; அத்தோடு அவற்றைச் செயற்படுத்தப்படக் கூடிய வலுவையும் இளைஞரிடையே உருவாக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எமக்காகப் போராடியவர்கள் இப்போது என்ன நிலையில் இருக்கிறார்கள்; மதிப்பிற்குரிய அந்தப் பெருமக்களைக் காப்பாற்றி, சிறையில் இருந்து மீட்க வேண்டிய கடமை இருக்கிறது. இவற்றையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

இதை எண்ணத்தில் கொண்டு, கூடவே சமீபத்தில் டென்மார்க்கின் 50 அறிஞர்கள் டேனிஸ் சமுதாயத்தைக் காப்பாற்றிய நிகழ்வை மனங் கொள்ள வேண்டும்.

முகமது கேலிச்சித்திர விவகாரத்தில் டென்மார்க் சிக்குண்டு, டேனிஸ் பொருட்கள் மத்திய கிழக்கில் எரிந்து கொண்டிருந்தன. சின்னஞ்சிறிய, வெறும் 50 இலட்சம் மக்களைக் கொண்ட டென்மார்க் தாங்க முடியாத ஆபத்தில் சிக்கிக் கொண்டது.

படிப்பகம்

www.padippakam.com



அதற்கு அவன், 'நரி கடதாசிக்கு வெளியே நிற்கிறது..!' என்றான்.

அவன் வரைந்தது சரியா இல்லை தவறா... இதுதான் சர்ச்சை..

சரி என்றால் அடுத்து வரும் பரிட்சையில் எல்லா மாணவரும் வால் களை மட்டும் வரைந்துவிட்டுப் போய்விடுவார்கள்.

தவறு என்றால் ஆசிரியர் முன்னரே இப்படி வாலை மட்டும் வரையக் கூடாது என்று கூறியிருக்க வேண்டும்.

எனவே, ஆசிரியர்கள் கூட்டத்திற்கு விவகாரம் வந்தது.. பலத்த விவாதத்திற்குப் பிறகு அந்த ஓவியத்தில் ஒரு தவறு இருக்கிறது என்று ஆசிரியர்கள் முடிவு செய்தார்கள்.

நரியின் வாலும், ஓநாயின் வாலும், சில மரநாய்களின் வாலும், மேலும் சில வளர்ப்பு நாய்களின் வால்களும் தோற்றத்தில் ஒரேமாதிரியாக இருக்கும். மாணவன் நரியை வரைந்ததாகக் கூறினாலும், அதைப் பார்க்கும் இன்னொருவர் கடதாசிக்கு வெளியால் நிற்பது ஓநாய் என்று சொன்னால் என்ன செய்வது.. ஆகவேதான், மாணவன் வரைந்தது தவறு என்று முடிவு செய்தார்கள்.

மாணவனை அழைத்து காரணத்தைச் சொல்லி, அது தவறான ஓவியம் என்று ஆசிரியர் சொன்னார்.

மாணவன் சிரித்தான்..

'தலைப்பு தராத பட்சத்தில் நீங்கள் சொல்வது சரி.. ஆனால் நரியை வரை என்று கேட்டபின் வரையப்பட்ட வால்தான் இது..' என்றான்.

உணர்ச்சி வசப்பட்ட ஆசிரியர் அவனுக்கு 90 புள்ளிகளை வழங்கினார்..

ஆனால் அத்தோடு விவகாரம் முடியவில்லை.. சர்ச்சை தொடர்ந்தது.. கேள்வி தவறாக இருந்ததே தவறான பதில் வரக்காரணம் என்ற முடி விற்கு கடைசியாக ஆசிரியர்கள் வந்தார்கள்.

கள்ளங்கபடமில்லாத ஒரு சிறு பிள்ளையிடமிருந்தும், கள்ளங்கபட மில்லாத பரம்பொருளிடமிருந்தும் நமக்கு வேண்டியது கிடைக்க வேண்டு மானால் கேள்வியைத் தெளிவாகக் கேட்க வேண்டும் என்று அதிபர்

www.padippakam.com



கூறினார். பின் அதை ஆசிரியர்களுக்கு விளக்க, அடுத்த வெள்ளி பிரார்த்தனை நடந்தபோது ஓர் உபகதையும் கூறினார்.

பாண்டவர்கள் இறைவனிடம் வெற்றி வேண்டுமெனக் கோரினார்கள். அக்கோரிக்கை இறைவனுக்கு சரியாகப் புரியவேண்டுமானால் ஒளிவு மறைவற்ற உள்ளம் வேண்டுமெனக் கூறினான் கண்ணன்.

அதை அறிய அவர்களை ஒரு கந்தர்வனின் அபூர்வத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே உள்ள மாமரத்தில் உள்ள கனியைப் பறித்துக் கீழே போடும்படி கூறினான்.

பின் 'நீங்கள் ஒவ்வொருவராக' சென்று மாமரத்திடம் உங்கள் உள்ளத்தில் உள்ள இரகசியங்கள் அனைத்தையும் ஒளிவு மறைவின்றிக் கூறுங்கள், மாம்பழம் மேலே கிளம்பி மறுபடியும் மரத்தில் ஒட்டிக் கொள்ளும்' என்றான்.

ஒவ்வொருவராகச் சென்று உள்ளத்தைத் திறந்து உண்மைகளைக் கூறினார்கள்.. பழம் தரையில் இருந்து மேலே மேலே எழுந்தது..

கடைசியாக பாஞ்சாலி சென்று உண்மைகளைக் கூறினாள், அவள் கூறக்கூற மேலும் உயர்ந்து சென்ற மாம்பழம் ஒரு கட்டத்தில் ஒட்டாமலே அந்தரத்தில் நின்றது..

'பாஞ்சாலி, நீ ஏதோ ஓர் உண்மையை மறைக்கிறாய்.. உள்ளத்தைத் திறந்து உண்மையைச் சொல்லாதவரை பழம் ஒட்டாது.. உள்ளத்தை வெளிப்படையாகத் திறக்காத ஒருவரின் கோரிக்கையை இறைவனால் சரிவர நிறைவேற்ற முடியாது' என்றும் கண்ணன் கூறினான்.

கடைசியாக தயக்கம் நீங்கிய பாஞ்சாலி, 'பஞ்சபாண்டவராகிய ஐந்து அண்ணன் தம்பிகளுக்கும் நான் ஒருத்தியே மனைவியாக இருந்தாலும், என் உள்ளம் அதிகம் விரும்புவது மூன்றாவதாகப் பிறந்த அர்ச்சுனன் ஒருவனைத்தான்' என்று கூறினாள்..

உடனே மாங்கனி மரத்தில் ஒட்டிக் கொண்டது..

அக்கணமே மற்றைய நான்கு கணவர்களும் இதுவரை விருப்பமில் லாத ஒருத்தியை மனைவியாக்கிப் புணர்ந்துவிட்டோமே என்பதை உணர்ந்து நாணமடைந்தார்கள்.

உள்ளத்தில் இருளை வைத்துக் கொண்டு இயற்கையிடம் எதையும் கேட்கக் கூடாது என்பதை கண்ணன் பாண்டவருக்கு உணர்த்திய இடம்

www.padippakam.com



இது. இதுபோல உள்ளத்தைத் தெளிவாக வைக்காமல் ஆசிரியர்கள் கேள்வி கேட்டால் நரிக்குப் பதிலாக நரி வாலே மாணவரிடமிருந்து வரும் என்று முடித்துக் கொண்டார் அதிபர்.

இந்த இரண்டு கதைகளையும் புதுமாத்தளன் என்ற புதிய பாத்திரத்தில் ஊற்றுவோம்..

அன்று..

ஆயுதம் ஏந்திய புலி வீரர்கள், உள்ளத்தைத் திறந்து தமிழீழமே தீர்வு என்று சொன்னார்கள்.. அதற்காக உயிரும் கொடுக்கலாம் என்றார்கள்.. உயிரும் கொடுத்தார்கள்.. அவர்கள் கேட்டது சரி..

ஆனால் அவர்கள் கேட்டது கிடைக்கவில்லை.. ஏன்?

அவர்கள் ஈழத்தை தமக்காகக் கேட்கவில்லை; மக்களுக்காகவே கேட்டார்கள்..

புலிகளைப் போல மக்களும் உள்ளத்தைத் திறந்திருந்தால் ஈழம் இல்லாவிட்டாலும் மக்கள் விருப்பிற்கு அமைவாக ஏதோ ஒன்றை பரம்பொருள் வழங்கியிருக்கும்.

ஆனால் மக்கள் எதையும் உறுதியாகக் கேட்கவில்லை என்பதை அவர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடு சென்ற காட்சி தெளிவாக விளக்கியது..

உயிர் எமக்குப் பெரிதாகப்பட்டது. அதனால் புலம் பெயர்ந்தோம்.. அதை உளம் திறந்து புலிகளிடம் சொல்ல அஞ்சினோம்.. சொல்லி யிருந்தால் அவர்கள் ஏதோ ஒரு தீர்வுக்கு வந்திருப்பார்கள்.

புலிகளை விடுங்கள்; நமது கருத்தை உலகத்திடமாவது சரிவர முன் வைத்தோமா..? இல்லை..

நாம் யாருக்கோ எதற்கோ அன்றும், தொடர்ந்து இன்றும் பயப்படுகிறோம்..

இதற்கு இன்னொரு உதாரணம்..

டென்மார்க்கில் நடந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு நண்பர் ஒருவர் வாக்களித்து விட்டு வந்தார்..

www.padippakam.com



'நீங்கள்தானே தமிழீழத்திற்குக் குறைவான, சாத்தியமான தீர்வு வந்தாலே போதும் என்று கூறுகிறீர்கள்.. பின் எதற்காக தமிழீழமே தீர்வு என்ற கருத்திற்கு வாக்களித்தீர்கள்?' என்று கேட்டேன்..

'என்ன செய்வது.. போகாவிட்டால் தமிழ் ஈழத்திற்கு எதிரானவன் என்று யாராவது களங்கம் கற்பித்துவிடுவார்கள். அதனால் வாயைப் பொத்திக் கொண்டு வாக்களித்தேன்' என்றார்.

மறுநாள் 98 வீதத்திற்கு மேலானவர்கள் வட்டுக்கோட்டைத் தீர் மானத்திற்கு ஆதரவு என்று வெற்றிச் செய்தி ஊடகங்களில் வந்தது.

ஆனால் உள்ளத்தைத் திறந்து வாக்களித்தவர்களை இறைவனுக்கு மட்டுமே தெரியும்..

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நடாத்தியவர்களையோ அல்லது அந்தத் தீர்மானத்தையோ விமர்சிப்பது நமது நோக்கம் இல்லை. இத்தனைக்குப் பிறகும் நாம் உள்ளத்தைத் திறக்க முடியாதவர்களாகவே இருக்கிறோம் என்பதை விபரிக்கவே இந்த உதாரணம்.

புதுமாத்தளனுக்கு ஒரு புது முடிவு வேண்டுமானால், யாருக்கும் பயப் படாது இனிமேலாவது வெளிப்படையாகப் பேசுங்கள்.. பாஞ்சாலிபோல தயங்காது உள்ளத்தைத் திறவுங்கள்..

இலங்கைத் தீவும் ஒரு மாங்கனிதான்..

தீர்வின்றித் தொங்கும் அந்த மாங்கனியை ஒட்டவைக்க மருந்து கண்ணீரல்ல, உள்ளம் திறப்பதேயாகும்.

உள்ளம் திறக்காதவருக்கு பேரருளின் உரிய பதில் ஒருபோதும் கிடைக்காது..

உள்ளத்தைத் திறக்காமல் அழுவதால் தீர்வு கிடைக்குமென்றால் உலகம் முழுவதும் அழுகுரலே கேட்கும்..

17.05.2010 ➢

# கதை 17/18

## புதுமாத்தளன் நட்சத்திரங்கள்...

சென்ற ஆண்டு மே பதினேழாம் திகதி இரவு புதுமாத்தளனுக்குள் நடந்த நிகழ்வுகளையும், உயிரழிவுகளையும் இதயமுள்ள எவனாலும் எழுதி வைக்க முடியாது.. இருபத்தியோராம் நூற்றாண்டில் மனித குலம் செய்ய நடுங்கும் மாபாதகம் அங்கே நடந்தேறியுள்ளது.

அதற்குள் சிக்குப்பட்டோர் ஒன்று இவ்வுலக வாழ்வை தாமாக முடிக்க வேண்டும், இல்லையேல் அவர்கள் வாழ்வு பலாத்காரமாக முடிக்கப்படும். இரண்டுக்கும் மேல் யாதொரு முடிவும் இல்லாத நிலையை அவர்கள் சந்தித்தார்கள்.

காயப்பட்டவர்களுக்கு மேலாக றோடு நெரிக்கும் இயந்திரங்கள் ஓடிக் கொண்டிருந்தன, பாரிய குழிகளில் குழந்தை குட்டிகளோடு நம் குலக் கொழுந்துகள் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்ததாக செய்திகள் வந்தன.

பின் சனல் -4 தொலைக்காட்சியில் கண்களைக் கட்டியபடி தலைகளில் சுட்டு வீசப்படும் போராளிகளைக் காட்டினார்கள்..

நடேசன், புலித்தேவன், பானு என்று ஏகப்பட்ட தளபதிகளின் உடலங்கள் தாறுமாறாக வீசப்பட்டுக் கிடந்தன. மண்டை கிழிக்கப்பட்டபடி ஓர் உடலம் காண்பிக்கப்பட்டது. அது பிரபாகரன் என்றும் சொல்லப்பட்டது. அது பிரபாகரனோ அல்லது வேறொருவரின் உடலோ என்ற விவாதம் தொடர்கிறது. ஆனால் இவ்வளவு காட்சிகளையும் மக்கள் பார்த்தார்கள். அவர்கள் இந்த மாபெரும் சோகத்தில் இருந்து விடுபடுவது இலகுவான காரியமல்ல.

www.padippakam.com



உடமைகளின் இழப்பு.. குடும்பத்தின் இழப்பு.. உறவினரின் இழப்பு. ஊரவரின் இழப்பு. இனத்தின் இழப்பு.. போராட்டத்தின் இழப்பு.. என்று ஏகப்பட்ட இழப்புக்கள் ஒன்றாக வந்து தாக்கின..

இவைகளைவிட மௌனமாகப் பார்த்த உலகநாடுகளின் அழுகிய மனங்கள் அநீதிகளுக்கு சிகரம் வைத்தன..

ஒரு படி இரண்டு படி என்று தவறி வீழ்ந்து கடைசியில் அத்தனை படிகளிலும் சறுக்கி தரையில் வீழ்ந்தான் ஈழத்தமிழன்..

இவ்வளவு துயரங்களையும் ஒன்றாகப் பார்த்த மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை எழுதவா முடியும்.. அவனுக்கு எங்கிருந்து ஆறுதல் சொல்ல முடியும்..

ஆனால்..

இந்தியாவிடமோ அல்லது உலகத்திடமோ நாம் நீதி கேட்க வேண்டிய நேரம் இதுவல்ல..

நீதி கேட்டால், நீதிகேட்டு எழும் அற்ப சொற்ப குரல்களையும் மூட்டைப் பூச்சி நசிப்பது போல நசித்துவிட்டு அப்பால் நடக்கவே குற்றவாளியான உலகம் முயலும்..

இது நீதி கேட்கும் பருவமல்ல.. அதற்கு ஒரு நாள் வரும்.. அதற்கு முன்னதாக இந்த அவலங்களில் இருந்து நாம் எம்மை மீட்டுக் கொள்ள வேண்டும், அதுதான் புத்திசாலித்தனமானது.

புதுமாத்தளன் மூலம் இறைவன் சிங்கள இனத்திற்கு மட்டும் ஒரு பரீட்சையை வைத்ததாகக் கருதிவிடக் கூடாது..

இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், ஒபெக் நாடுகள் என்று உலகம் முழுவதிற்குமாகவே அப்பரீட்சையை வைத்திருக்கிறான்..

அப்படியொரு பரீட்சையை பேரருள் புதுமாத்தளனில் வைக்கக் காரணமென்ன..?

பல காரணங்கள் உள்ளன.. இதோ சில..

காலநிலை மாற்றத்தாலும் புவி வெப்பமடைவதாலும் வரப்போகும் பேரவலம் முழு உலகத்தையும் சாப்பிடப் போகிறது என்று அஞ்சுகிறார்கள் விஞ்ஞானிகள்..

www.padippakam.com



ஐஸ்லாந்தின் எரிமலை கக்கியதால் ஏற்பட்ட தூசிப்படை ஐரோப்பிய விமான சேவைகளையே ஸ்தம்பிதமடையச் செய்தது..

2012 என்ற திரைப்படத்தில் காட்டியது போன்ற எதிர்பாராத பேரவலம் நிகழும்போது உலகம் செய்வதறியாது திகைக்கும் நாள் வரலாம் என்றும் அஞ்சப்படுகிறது..

அப்போது..

பாப்பரசரின் வத்திக்கானில் இருந்து மணியோசை வானைப் பிளக்கும், மக்காவில் எல்லோரும் கூடியிருந்து பிரார்த்திக்க வேண்டிய நிலை வரும், எல்லா இந்து ஆலயங்களிலும் ஆண்டவனைப் பிரார்த்திக்க வேண்டிய நேரம் வரும்... இறைவனிடம் உலகமே மன்றாட வேண்டிய தருணம் வரும்..

அப்போது இறைவன் கண்களை மூடிக் கொண்டிருக்க அவனுக்கும் ஒரு வலுவான காரணம் வேண்டும்..

புதுமாத்தளனின் மே 17 இரவு வரை நடைபெற்ற படுகொலைகளைத் தடுக்க முடியாத உங்கள் ஆலயங்களின் வழிபாடுகளும், ஆராதனைகளும், பிரார்த்தனைகளும் எனக்கு வேண்டியதில்லை என்ற பதில் அத்தனை உலக மதங்களுக்கும் கிடைக்கும்.

அப்போது குற்றமற்ற ஒருவன் முன்வருவான்..

உலக மக்களைக் காப்பாற்றும்படி இறைவனிடம் மன்றாடுவான்..

குற்றமற்ற ஒரேயொரு இனமாக நிற்கும் ஈழத் தமிழனின் குரலே இறைவன் திருச்சபையில் கேட்கும்..

இப்படியொரு கோணத்தில் எண்ணிப்பாருங்கள்..

அதோ வானத்து நட்சத்திரங்களாக மின்னும் நமது வீரர்கள் நமக்கு எத்தனை சிறப்பைத் தந்துவிட்டுப் போய்விட்டார்கள் என்ற உண்மையை உணர இந்தக் கதை எழுதப்பட்டுள்ளது.

அன்றொரு நாள்..

புதுமாத்தளன் போல ஒரு பெரும் போர் நடைபெற்றது.. போரில் ஒருவர் மீதமின்றி எல்லோரும் அழிந்துவிட, மனைவியின் பிரசவத்தைப் பார்ப்பதற்காக வந்த ஒரு வீரன் மட்டும் உயிர் த்தப்புகிறான்..

www.padippakam.com



கும்மிருட்டு.. பிணங்களிடையே பிரசவ அலறல்..

தாயின் கதறல் மெல்ல மெல்ல அடங்குகிறது.. குழந்தையின் அழுகுரல் மெல்ல மெல்ல உயர்கிறது.. பாவம் மனைவி இறந்துவிட்டாள். அவளுடைய முகத்தைப் பார்க்கவும் அவனுக்கு அருகில் விளக்கில்லை..

குழந்தையைத் தூக்கி முகத்தைப் பார்க்கிறான். தெளிவாகத் தெரிய வில்லை..

ஒளிதர வானத்திலும் நிலவில்லை...

ஆனால் போரில் இறந்த ஆத்மாக்கள் நீல வான்த்தில் நட்சத்திரங் களாக மின்னுவது தெரிகிறது.. அதிலும் குழந்தையின் முகத்தைப் பார்க்க முடியவில்லை..

ஒரே நொடிதான்..

கோடான கோடி நட்சத்திரக் கூட்டத்தில் அதிகமாக ஒளிரும் நட்சத்திரங்களைப் பார்க்கிறான், அவற்றை கண்களால் இணைத்து கோலம் போடுவது போல ஒரு கற்பனைக் கோட்டைப் போடுகிறான்..

அங்கே ஒரு சிங்கம் தெரிகிறது..

சிங்கராசியில் ஒரு மகன் பிறந்திருக்கிறான் என்று ஓலமிடுகிறான்..

எதிரிகளை ஒழிக்க ஒருவன் பிறந்துவிட்டானென கர்ஜித்தபடி வாளை உருவி குழந்தையின் கையில் வைக்கிறான்..

அன்று..

வெற்றியைத் தரப் போகும் மகன் மட்டும் பிறக்கவில்லை; மகனோடு ஜோதிடமும் பிறந்துவிட்டதைக் கண்டு சிரித்தான்..

இதுதான் நட்சத்திரங்களுக்குள்ளால் ஜோதிடம் பிறந்த கதை..

ஒரு வீரன் நட்சத்திரங்களில் இருந்து புது நம்பிக்கை பெற்ற கதை..

அதோ அழகிய நீல வானத்தில் புதுமாத்தளனில் புதைக்கப்பட்ட நம் உறவுகள் நட்சத்திரங்களாக ஒளிர்கிறார்கள்..

அவர்கள் ஒளியால் ஏதோ ஒரு தகவலைச் சொல்கிறார்கள்..

www.padippakam.com



உங்கள் அறிவால் அவற்றை இணைத்துக் கோலம் போடுங்கள்..

அன்று யாருமற்ற ஒருவனுக்கு முன்னால் மாபெரும் ஜோதிடக்கலை பிறந்தது போல உங்கள் உள்ளத்திலும் ஒரு புதுமை பிறக்கும்..

புதுமாத்தளன் நட்சத்திரங்களுக்கு இல்லாத புதுமையா உலகில் இருக்கப்போகிறது..

உங்களை உலக நாடுகளும், உலக மதங்களும், உலகப் பெருந் தாபனங்களும் கைவிட்டாலும் அதோ அந்த மினுக்கிடும் நட்சத்திரங்கள் கைவிடவில்லை என்பதை உணருங்கள்..

கண்களைத் துடைத்துவிட்டு எழுந்திருங்கள்.. உறவுகளே..

18.05.2010 ➢

# கதை 18/18

## இறப்பில்லா இளவரசன் பிரபாகரன்

புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து என்ற இத்தொடரில் பல்வேறு கோணங்களில் புதுமாத்தளனின் சோகங்களில் இருந்து விடுதலை பெற வழிகாட்டப்பட்டுள்ளது.

பாரதப்போரில் 13ம் நாள் அபிமன்யு வதம் வரை வேகமாக நகர்ந்து, அபிமன்யுவிற்குப் பிறகு சூல்கொண்ட மேகமாகத் திரும்பிய பாரதப்போர் போல இப்போது பதினெட்டாம் நாள் நிறைவுப்பகுதிக்குள் வந்துள்ளது.

பாரதப் போரில் அபிமன்யு வதம் வந்தது போல புதுமாத்தளன் போரில் ஆனந்தபுரத்து சுற்றிவளைப்பில் சிக்குண்டு மடிந்த கேணல் தீபனினதும் ஆயிரக்கணக்கான போராளிகளதும் மரணம் நிகழ்ந்தது.

ஆனால் அதற்கும் இதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பாரதப் போரில் உரிமையை இழந்தவர்கள் உரிமையைப் பெற்றார்கள், இங்கோ உரிமையை இழந்தவர்கள் கொல்லப்பட்டார்கள்.

உலகத்தில் வேதனைகளில் எல்லாம் பெரிய வேதனை.. தர்மம் தோல்வியடையும்போதுதான் ஏற்படும். அத்தகைய வேதனையை ஆற்றும் வல்லமை காலத்திற்கே உண்டு.

இதற்கு ஓர் உதாரணம் இராமாயணத்தில் இருக்கிறது. நாளை மகுடம் தரிக்கிறான் இராமன் என்று செய்தி காலையில் பரவியிருந்தது. அன்று மாலை கைகேயி, ‘ஆட்சி உனக்கில்லை, என் மகன் பரதனுக்கே’ என்று கூறுகிறாள்.

www.padippakam.com



தன் மகன் பரதனுக்கே ஆட்சி என்று அவள் தசரதனிடம் கேட்ட வரத்தால் தர்மம் தோல்வியடைந்திருந்தது.

எனவேதான் 14 வருடங்கள் இராமன் வனவாசம் போக வேண்டும் என்று அடுத்த நிபந்தனையைப் போட்டாள்.

தர்மத்தின் தோல்வியால் வரும் வலியை மறக்க கடவுளின் அவதாரமான இராமனுக்கே 14 வருடங்கள் வேண்டும் என்பது நாமறியும் காலத்தின் கணக்காகும். இல்லாவிட்டால் இராமன் அறுபது வருடங்கள் காடு போகவேண்டும் என்று கைகேயி கேட்டிருப்பாள்.

கவலையை ஆற்ற கடவுளுக்கே 14 வருடங்கள் தேவைப்படும் போது மனிதர்களாகிய நாம் எப்படி ஒரு வருடத்தில் மீண்டு வருவது.. சிந்திக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

உடனே சிறந்த பாடல் ஒன்றை எழுதினார். நேற்று இராச்சியம் உனக்கென்று சொன்னபோது இராமனின் முகம் சித்திரத்தில் வரைந்த தாமரைபோல இருந்தது, அதேபோல இன்று இராச்சியம் உனக்கில்லை, காடு போ என்று கைகேயி சொன்னபோதும் அதே தாமரை போலவே அவன் முகம் இருந்தது என்று எழுதி வைத்தார்.

ஒரு தாமரைப்பூவை சித்திரத்தில் வரைந்தால் அது வாடப்போவ தில்லை. அதுபோல முகத்தை வைத்திருந்து இன்பம், துன்பம் இரண்டையுமே வெற்றிபெற்றான் இராமன் என்று கூறுவார் – இது கம்பர் வாசகருக்குக் கூறும் புத்திமதி.

ஆனால் அதற்குள்ளும் இன்னொரு கதையை உருள வைக்கிறது காலம். கானகத்தில் வாழும் 14 வருடங்களில் நடந்ததை நாம் படிப் படியாகப் பார்க்க வேண்டும். தர்மம் மறுபடியும் வெற்றி பெறுவதற்கான அத்தியாயங்கள் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக ஆரம்பிக்கின்றன.

தர்மத்தின் தோல்வியால் கைகேயி பெற்ற அரசு அதற்குப் பின் பெருமைகள் எதுவுமே இல்லாமல் குலைந்து போய்விடுகிறது. 14 வருட முடிவில் பரதன் தீ வளர்த்து தற்கொலை செய்யப்போக இராமன் வந்து அவனைக் காப்பாற்றும்போதுதான் மறுபடியும் அயோத்தியில் ஓர் அரசு இருக்கிறது என்ற நினைவு நமக்கே வருகிறது.

www.padippakam.com



அப்போது இராமன் கானகத்தில் மடிந்துவிட்டதாகப் பலர் கூறினார் கள்.. அவன் இறந்தது போல மாயமான் வேடமிட்ட ஒருவன் அலற சீதையே ஏமாந்தாள்.. இராவணன் அவளைக் கடத்திச் சென்றான்..

அதுபோல பிரபாகரன் இறந்துவிட்டதாக பல மாயமான்களின் அலறல் கேட்கிறது..

இருந்தாலும் பிரபாகரன் என்ற வீரன் களத்தில் இல்லாத இலங்கைக்கு இராமன் இல்லாத அயோத்தி போல இனி எந்தப் பெருமையும் ஏற்படப்போவதில்லை.

அந்த வீரனும் அவன் தம்பியரும் நடாத்திய போராலும், சாதனைகளாலும் உலகம் இலங்கை என்ற தீவையே கடந்த 30 வருடங்களாகப் பேசிக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு இராணுவ முகாம்களாக உடைத்துத் தகர்த்து அவன் புலிக்கொடியை ஏற்றியபோது உலகம் மூக்கில் விரலை வைத்துப் பார்த்தது. உலகின் மிகச் சிறந்த கெரில்லாப்படைத் தலைவன் பிரபாகரனே என்று பீ. பீ.சியே தேர்வு செய்தது..

மில்லர் நெல்லியடி மகாவித்தியாலயத்தைத் தகர்த்தபோது இந்திய இராணுவமே இலங்கையில் இறங்கியது..

திலீபன் நீரே அருந்தாது மடிந்தபோது இந்திய இராணுவம் வெளி யேறும் நாள் எழுதப்பட்டது.

இந்திய இராணுவத்தையே சுண்டுவிரலால் வரவைக்கவும், அது போல போகவைக்கவும் முடியுமென உலகிற்குக் காட்டிய உன்னதத் தலைவனாக அவர் இருந்தார்.. மற்றவர்கள் இந்தியாவின் சுண்டு விரலுக்கு ஓடிப்போகிறார்கள், வருகிறார்கள்..

ஒரேயொரு வீரத் தமிழனைத் தேடி உலகில் பெரிய இராணுவத்தைக் கொண்ட சீனா, உலகின் பெரிய சக்தியான அமெரிக்கா, அணுகுண்டைத் தூக்கிய அத்தனை வல்லரசுகளும் வன்னிக்கு வந்து இறங்கினவே, ஏன்..

ஒரு தமிழனுக்கு இந்த உலகம் இணை என்று கூறி, வன்னி மண்ணுக்கு உலகத்தையே வரவழைத்தான் தம்பி பிரபாகரன்.

www.padippakam.com



தமிழீழத்தை அமைத்தாலும் செய்ய முடியாத பெரும் சாதனை யல்லவா இது..

விமானப் படையை அமைத்து வானில் எழும்பி மாவீரர் சமாதிக்கு மலர்மாரி வீசச் செய்தானே.. ஐயாயிரம் ஆண்டுகளாக தமிழனுக்கு வாய்க்காத பெருமையல்லவா அது..

இப்படி அவன் புகழை எழுதிக்கொண்டே போகலாம்...

பிரபாகரன் களத்தில் இருக்கும்வரைதான் இலங்கைக்கு பெருமை..

இராமன் இல்லாத அயோத்திக்கு ஏது பெருமை?

பிரபாகரன் இல்லத இலங்கைக்கு ஏது பெருமை?

சரி..

இனி நிறைவுக் கேள்விக்கு வருவோம்..

எங்கே பிரபாகரன்?

உலகத்தில் பிறந்த மனிதர் எல்லோரும் என்றோ ஒருநாள் இறக்கிறார்கள்.. ஆனால் இறப்பிற்கு முன்னரே அவ்விடத்தை விட்டு சென்று வாழ்ந்து கொண்டே இருக்கும் மனிதர்கள் ஒருசிலர் இருக் கிறார்கள்.. அப்படிப்பட்ட ஒரு சிலரில் பிரபாகரனும் அடக்கம்..

போர்க்களத்தில் இருக்கும்வரை தொலைபேசியில் பேசிக்கொண் டிருந்த பிரபாகரன் தான் இறுதியாக எடுத்த முடிவை தனது உடன் பிறப்புக்களுக்குக் கூட சொல்லவில்லை..

இருக்கிறார் என்று யாராவது கூறினால் அவரைக் கொண்டுவந்து நிறுத்த வேண்டும்..

இல்லை என்று சொன்னால் அதையும் உறுதிப்பட நிறுவ வேண்டும்..

இரண்டுக்குமே போதிய ஆதாரங்களில்லை..

இப்படியான உறுதியற்ற நேரத்தை உலக அறிஞர்கள் கொன்ஸ் பிரேசன் தியரி என்ற கோட்பாட்டின் மூலம் விளக்குவார்கள். மனித குலத்தால் நம்ப முடியாத உண்மையாக அது நிலவும்..

www.padippakam.com



இதோ புதுமாத்தளன் ஓராண்டு நினைவலைகளின்போது டென்மார்க் பத்திரிகை ஒன்றில் வெளியான மூன்று கொன்ஸ்பிரேசன் தியரிகளை முதலில் இங்கே தருகிறேன்..

01. ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி 1962ம் ஆண்டு பிரபல நடிகை மர்லின் மன்றோ மரணமடைந்தார். அவர் மரணம் தற்கொலை என்று கூறப்பட்டது. அவர் கையில் நச்சு மாத்திரையைப் போட்டபோது நீர் பருகிய ஒரு கிளாஸ் கிடந்தது.. ஆனால் அவருடைய வயிற்றில் ஒரு மாத்திரையைக் கூடக் காண முடியவில்லை.. அவரின் முடிவு மரணமா இல்லையா என்பதை நிறுவ இன்றுவரை ஆதாரமில் லாமலிருக்கிறது.. அதற்கு முன்னரே ஒரு மர்மமான பொழுது நகர்ந்துள்ளது.. அதற்குள் அவர் நடந்துவிட்டார்.. மர்லின் மன்றோ இறக்கவில்லை..

02. மைக்கல் ஜாக்சன் இறந்து விட்டதாக உடலத்தைக் காட்டிய போதும் யூரியூப் வெளியிட்ட வீடியோ அவர் நடமாடுவதைக் காட்டியது. தற்போது புதிய விடியோ ஒன்று வெளியாகியுள்ளது.. அவர் உயிர் வாழ்கிறார் என்பதைக் காட்ட.. உண்மையில் ஜாக்சன் இறக்க வில்லை..

03. இதுபோல பொப்பிசைப் பாடகர் எல்விஸ் இறக்கவில்லை என்று கூறப்படுகிறது. அவருடைய கல்லறையில் உள்ள பெயரில் தற்செயலாக ஓர் எழுத்து பிழையாகவே பதியப்பட்டுள்ளது.. (ஆதாரங்கள்; மெற்றோ எஸ்க்பிரஸ் 19.05.2010 பக்கம் 34)

உடலங்களைக் காட்டினாலும் சிலர் இறப்பதில்லை என்று கூறப்படும் உதாரணங்களில் இந்த மூன்று உலகப் பிரபலங்களும் அடக்கம்..

இதுபோல எத்தனை உடலங்கள் காட்டப்பட்டாலும், எத்தனை கதைகள் கூறப்பட்டாலும் இறப்பில்லாத ஒரு தேவமகன் பிரபாகரன் என்பதே பிரபாகரனுக்கான கொன்ஸ்பிரேசன் தியரி ஆகும்.

பிரபாகரன் இருக்கிறாரா..? இல்லையா..? என்பதைவிட பெரிய கேள்வி இன்று உலகில் எதுவுமே கிடையாது.. அதுதான் அவருடைய வலிமை.

இனி நடக்கப் போகும் ஒவ்வொரு நாடகத்தையும் அந்த வலிமையே தோன்றாத் துணையாக நின்று நடாத்தி, ஈழத் தமிழினத்திற்கு விடிவைத் தரப்போகிறது..

www.padippakam.com



இதுதான் நமது நம்பிக்கைக்கான ஆதாரம்..

கடந்த 17.04.2010 அன்று டென்மார்க்கில் முதல் முதலாக மேடையேறிப் பேசிய பிரபாகரனின் சகோதரன் வேலுப்பிள்ளை மனோகரன் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்று பேசுவதற்காக வரவில்லை. மேடையில் அவரை அறியாமலே அந்த வாசகத்தை உச்சரித்துவிட்டார்..

எல்லோரும் ஆச்சரியப்பட்டோம்..

'சத்தியமாகச் சொல்கிறேன்.. ஏன் அப்படிச் சொன்னேன் என்று எனக்கே தெரியவில்லை' என்றார்..

அன்றிரவு..

என்றுமே அவருடைய கனவில் வராத பிரபாகரன் அன்று அவருடைய கனவில் வந்தார்.., 'அண்ணா நீ பேசியது தவறல்ல. அதுவே சரி..' என்று கூறிவிட்டுப் போனார்..

பிரபாகரன் முன்னைவிட வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் இறப்பில்லா இளவரசன் என்பதே அவருக்காக நாம் எழுதக்கூடிய புதிய கொன்ஸ்பிரேசன் தியரியாகும்..

எல்லோரும் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மையான புலி வீரர்கள் அதைவிட முக்கியமான ஒரு வாசகத்தை அடிக்கடி கூறுவார்கள்..

முக்கியம் – எங்கள் கண்களை உற்றுப் பார்க்காதீர்கள்.. அதைவிட முக்கியம் – நாங்கள் எங்கேயென்று தேடாதீர்கள்.. இதுதான் அந்த வாசகம்..

அன்று என்போன்ற சாதாரண பொதுமக்களால் அதைப் புரிய முடியவில்லை.. ஆனால் இன்றுதான் அது எனக்குப் புரிகிறது..

உற்றுப் பார்க்காதீர்கள்..

எங்கேயென்று தேடாதீர்கள்..

பிரபாகரனின் தகவல்கள் காற்றிலும், தேவைப்படின் கனவிலும் உங்களுக்கு வரும்..

www.padippakam.com



பிரபாகரன் தமிழர் மட்டுமல்ல, சிங்களவரும், இந்தியரும். அதுபோல உலகின் அனைவருமே நலமாக சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்றே நினைக்கிறார்..

அன்று நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் வாழ்க்கையை மனம் விரும்பிப் படித்தார் பிரபாகரன். இன்றோ நேதாஜியின் வாழ்வுபோலவே பிரபாகரனின் பிற்கால வாழ்வும் அமைந்துவிட்டதைக் காண்கிறோம்.

ஆனால் நேதாஜிக்கும் பிரபாகரனுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. நேதாஜி திரும்பவில்லை. பிரபாகரன் திரும்புவார். வை. கோபாலசாமி, பழ. நெடுமாறன் போன்ற தலைவர்கள் இக்கருத்தை உறுதியாகக் கூறுகிறார்கள். இது அவர்கள் கருத்து மட்டுமல்ல, மக்கள் நம்பிக்கையும் கூட! இந்த நம்பிக்கை வீண்போகாது. அன்பான தமிழீழ மக்களே என்ற அவருடைய குரல் நம் காதுகளில் மறுபடியும் ஒலிக்கும் என்ற நம்பிக்கையுடன் நடப்போம்..

நம்பினோர் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு...

கவலை வேண்டாம், அனைத்தும் நல்லபடியாக நடக்கும்..

நிறைவு..

19. 05. 2010

✪ ✪ ✪


www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்